# منتخب الادعية

## தேர்ந்தெடுக்கப்பட்ட துஆக்கள்

## Selected Supplications

*Published by:*

**Cultural Seciton of**

**The Embassy of the Islamic Republic of Iran**

www.bookshia.com
knowledge enlivens the soul

# துஆவும் அதன் தாத்பரியங்களும்

துஆ எனும் அரபுச் சொல்லுக்கு அழைத்தல் எனும் பொருள் கொள்ளப்படுகின்றது. நடைமுறையில், மனிதன் அல்லாஹ்விடம் தனது தேவையை வேண்டிப் பெறுவதையே துஆ என்ற சொற்பிரயோகம் குறித்து நிற்கிறது. துஆ என்பது, ஓர் அடியான் அல்லாஹ்வை முன்னோக்குவதாகும். அல்லாஹ்வை முன்னோக்குவதென்பது வணக்கத்தின் அடிநாதமாகும். வணக்கம் என்பது மனித சிருஷ்டிப்பின் பிரதான குறிக்கோளாகும். இம்மூன்று அம்சங்களும் துஆ என்பதன் பெறுமதியையும் தாத்பரியத்தையும் இரத்தினச் சுருக்கமாகக் குறித்து நிற்கின்றன. இதனால்தான், ‘‘நீங்கள் துஆவைத் தொடர்ந்து கடைப்பிடித்து வாருங்கள். அல்லாஹ்வை நெருங்குவதற்கு அதை விடச் சிறந்த வழியில்லை’’ என்பதாக இமாம்கள் வலியுறுத்தியுள்ளார்கள். துஆ என்பது ஓர் அடியான் தனது தேவைகளை அல்லாஹ்விடம் முறையிட்டு அவற்றைத் தரும்படியாகப் பிரார்த்திப்பதைக் குறிக்கின்றது. இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றாக இனங்காண்பிக்கப்பட்டுள்ள இந்த துஆவானது, பல்வேறு ஆன்மீக - இலெளகீக நன்மைகளுக்கும் பயன்பாடுகளுக்கும் வழிவகுப்பதாக அமைந்துள்ளது.

முஸ்லிம்கள், அல்லாஹ்வின் திருப்தியையும் இஸ்லாத்தின் உறுதிப்பாட்டையும் பெற்றவர்களாக வாழ்வதற்கு வழியமைக்கின்ற துஆ எனும் இவ்வணக்கம் அல்லாஹ்வுக்கும் மனிதர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி, அவர்களிடையிலான திரைகளை அகற்றி விடுவதிலும், மனிதர்கள் பொதுநலனைப் பாதிக்காத தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வழியமைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இவ்வகையில், முஸ்லிம்களின் வாழ்க்கை முழுவதிலும் துஆ முக்கியத்துவம் பெறுகின்றது. அவர்களது பல்வேறு செயற்பாடுகளின் போது, உள-உடல் ரீதியான பலத்தையும் பக்குவத்தையும் வழங்கி, இஸ்லாமிய ஒழுக்க வழிமுறைகள் மீது சிறந்த ஊக்குவிப்பையும் நல்குகின்றது. இதனாலேயே, இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆனிலும், அல்ஹதீஸிலும் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

www.bookshia.com
knowledge enlivens the soul

தூய்மை நிறைந்த துஆ என்னும் இவ் இறை வணக்கத்தின் முக்கியத்துவங்களையும், அதில் அடங்கியுள்ள அகமியங்களையும் வலியுறுத்தும் இறை திருவசனங்கள் அல்குர்ஆனில் அதிகம் உள்ளன. அவற்றுள் சில வருமாறு;

1. மேலும், (நபியே!) என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் (அதற்கு நீர் கூறுவீராக) நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாகவே இருக்கின்றேன். அழைப்பாளி என்னை அழைத்தால் அவரது அழைப்புக்கு நான் பதிலளிப்பேன்'' (2:186)
2. ''(ஆகவே, விசுவாசிகளே!) உங்கள் இரட்சகனை மிக்க பணிவாகவும் (தாழ்ந்த குரலில்) மெதுவாகவும் நீங்கள் அழையுங்கள். நிச்சயமாக அவன் வரம்பு மீறுவோரை நேசிக்க மாட்டான்'' (7:55)
3. ''(நபியே!) நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை அழைத்துப் பிரார்த்திப்பது மட்டும் இல்லையெனில் என்னுடைய இரட்சகன் உங்களைப் பொருட்படுத்தியிருக்கவே மாட்டான். ஏனெனில், நீங்கள் அவனுடைய வசனங்களை பொய்ப்படுத்தி விட்டீர்கள். எனவே, அதற்குரிய தண்டனையானது கட்டாயமாக உங்களுக்கு உண்டாகும்'' (25:77)
4. நீங்கள் என்னையே அழைத்துப் பிரார்த்தியுங்கள். நான் உங்களுடைய பிரார்த்தனைக்கு பதிலளிப்பேன். நிச்சயமாக என்னை வணங்குவதை விட்டும் பெருமையடிப்பவர்கள் இழிவடைந்தவர்களாக நரகம் புகுவார்கள்'' (40:60)

## அல்ஹதீஸ்

துஆ என்னும் இறை பிரார்த்தனையில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், அதன் தாத்பரியங்களைப் பற்றியும் நபி (ஸல்) அவர்கள் பல ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள். அவற்றுள் சில வருமாறு;

1. நிச்சயமாக துஆ என்பது ஒரு வணக்கம் (அபூதாவூத்)
2. துஆ என்பது வணக்கங்களின் மூளை (என்னும் தலைமையகம்) ஆக இருக்கின்றது. (திர்மிதீ)

3. நிச்சயமாக உங்களது இரட்சகனான அல்லாஹ், சங்கையான ஒரு ஜீவனாவான். அதனால் தனது அடியார்கள் தன்னிடம் யாசித்துக் கைகளை ஏந்துகின்ற போது, அவற்றை வெறும் கைகளாகத் திருப்பி விடுவதற்கு அவன் வெட்கப்படுகின்றான். (இப்னு மாஜா)

4. துஆவை விட அல்லாஹ்வை சங்கைப்படுத்துவது வேறெதுவுமில்லை. (திர்மிதீ)

5. நிச்சயமாக அல்லாஹ், தன்னிடம் துஆ கேட்காதோர் மீது கோபம் கொள்கின்றான். (புஹாரி)

6. அல்லாஹ்விடம் அவனது அருள் முதலானவற்றைக் கேளுங்கள். நீங்கள் அவனிடம் கேட்பதை அவன் மிகவும் விரும்புகின்றான். (திர்மிதீ)

7. கழா என்னும் முன்னளப்பை துஆவைத் தவிர வேறெதுவும் மாற்றிவிட மாட்டாது. (திர்மிதீ)

8. உங்களில் ஒருவர் அறுந்துவிட்ட தனது செருப்புப் பட்டியைப் பற்றி முறையிடுவது உள்ளிட்ட, தனது அனைத்து தேவைகளையும் இரட்சகனான அல்லாஹ்விடமே கேட்டுக் கொள்ளட்டும். (திர்மிதீ)

9. நிச்சயமாக அல்லாஹ், தன்னிடம் கேட்கப்படுகின்ற துஆக்களை வீணாக்கவிடுவதில்லை. எனினும், துஆக் கேட்பவருக்கு (பின்வரும்) மூன்றிலொரு விடயம் ஏற்படும். (அவை) 1. அவரது துஆ உடனடியாகவோ தாமதமாகவோ ஏற்றுக் கொள்ளப்படுதல். 2. அந்த துஆவின் நன்மைகள் அவருக்காக மறுமையில் சேர்த்து வைக்கப்படுதல். 3. அந்த துஆவின் பயனாக அவருக்கு ஏற்படவிருக்கும் இடையூறுகள் தவிர்க்கப்படுதல் (முஸ்னத் அஹ்மத்)

## <u>துஆவின் ஒழுக்க விதிகள்</u>

ஒரு மனிதன் துஆ கேட்பது, அல்லாஹ்வுக்கு முன்னிலையில் நின்று, அவனோடு நேரிடையாக உரையாடுவது போன்றதாகும். ஆகவே, அகில உலக அதிபதியாகிய அல்லாஹ்வுக்கு முன்னால் நிற்கக் கூடிய மனிதன், பூரண ஒழுக்கங்களோடும், கண்ணியத்தோடும் செயற்படுவது அவசியமாகும். இவ்வகையில் துஆவின் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகள் அதிகம் உள்ளன. அவற்றுள் சில;

1) துஆ கேட்க ஆரம்பிக்குமுன் உடலைச் சுத்தப்படுத்தி வுளூ செய்து கொள்ளல்.

2) கிப்லாவின் திசையை முன்னோக்குத்ல

3) துஆ கேட்குமுன் தான தர்மங்கள் வழங்கியிருத்தல்

4) துஆவின் போது, இரு கைகளையும் மேலே உயர்த்தி, உள்ளங்கைப் பகுதிகளை மேல்நோக்கியவாறு வைத்துக் கொள்ளல். நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: "உங்களது உங்களது உள்ளங்கைகளினால் அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள். உங்கள் புறங்கைகளினால் பிரார்த்திக்காதீர்கள்" (அபூதாவூத்)

5) விரல்களை தோள்புயங்களுக்கு நேராகப் பிடித்துக் கொள்ளல்.

6) உள்ளத்தை அல்லாஹ்வின் பக்கம் திருப்பி, சிந்தனை முழுவதையும் துஆவிலே ஒருங்கிணைத்தல்.

7) அல்லாஹ்வைப் பற்றிய அறிவுடனும், அவன் மீது பூரண நல்லெண்ணத்துடனும் துஆக்களைக் கேட்டல்.

8) துஆக் கேட்பதற்கு முன்னால், அல்லாஹ்வைப் புகழ்ந்து துதித்தல்.

9) நபி (ஸல்) அவர்கள் மீதிலும், அவர்களது குடும்பத்தினர் மீதிலும் ஸலவாத் சொல்லிக் கொள்ளல். ஏனெனில், "துஆ கேட்பவர், நபியவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் ஸலவாத் சொல்லாத வரை அவரது துஆ தடுத்து வைக்கப்படுகின்றது" என்பதாக ஹதீஸ்களில் வந்துள்ளது.

10) தனது பிரார்த்தனைக்கு அல்லாஹ் பதிலளிப்பான் என்ற நந்நம்பிக்கையுடன் துஆக் கேட்டல். "நீங்கள் துஆக் கேட்கின்ற போது, இஜாபத் (பதில்) கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் கேளுங்கள்" என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும்.

11) துஆக் கேட்கின்ற போது, கண்ணீர் விட்டு அழுதல். அல்லது அழுவதற்கு முயற்சித்தல். "துஆக் கேட்பவர் ஈயினுடைய தலையின் அளவுக்கேனும் ஒரு சொட்டு கண்ணீர் வடிக்க வேண்டும்" என்பதாக ஹதீஸ்களில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

12) பாவங்களை நினைவுகூர்ந்து, அவற்றை அல்லாஹ்விடம் முறையிட்டு அவற்றுக்காக பாவமன்னிப்புக் கோருதல்.

13) நபி (ஸல்) அவர்களின் மூலமாகவும், அவர்களது குடும்பத்தினர் மற்றும் இறைநேசர்களின் மூலமாகவும் வஸீலா தேடுவதனூடாக தமது தேவைகளை அல்லாஹ்விடம் கேட்டல்.

14) துஆக் கேட்பவர், தனது தேவைகளை முறையிடுமுன், ''யாஅல்லாஹ்! யாரஹ்மான்! யாரஹீம்!'' போன்ற இறை அழைப்பு வசனங்களை அதிகம் பிரயோகித்தல்.

15) ஒவ்வொரு தேவைகளையும் தெளிவாக முறையிட்டு அவற்றை அல்லாஹ்விடம் ஒப்புவித்தல். ''அடியார்கள் துஆக் கேட்க ஆரம்பிக்கின்ற போது, அவர்கள் கேட்கவிருக்கின்ற அனைத்து விடயங்களையும் அல்லாஹ் அறிந்தவனாகவே இருக்கின்றான். எனினும், அவர்கள் தமது நாவுகளினால் அவற்றைத் தெளிவாகக் கூறி முறையிடுவதை அல்லாஹ் மிக விரும்புகின்றான். ஆகவே உங்களில் யாரேனும் துஆ கேட்க ஆரம்பித்தால், ஒவ்வொரு தேவையையும் தெளிவாக முறையிட வேண்டும்'' என்பதாக ஹதீஸ்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

16) கவலையுடனும் சஞ்சலத்துடனும் துஆக்களில் ஈடுபடுதல். ஏனெனில், ''நிச்சயமாக, தனது பாவங்களைப் பற்றிய உள்ளக் கவலையுடனும், சஞ்சலத்துடனும் துஆக் கேட்பதை அல்லாஹ் மிகவும் விரும்புகின்றான்'' என்பதாக ஹதீஸ்களில் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

17) துஆக்களில் உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவமளித்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எவருக்கு துஆவின் வாயில் திறக்கப்படுகின்றதோ அவருக்கு அருளின் வாயில் திறக்கப்படுகின்றது. மனிதன் யாசிப்பவற்றில் அவனது உடல் ஆரோக்கியத்துக்காக யாசிப்பதை விட அல்லாஹ்வுக்குப் பிரியமானது வேறில்லை'' (திர்மிதீ)

18) சுயதேவைகளையும் குறிப்பான தனிப்பட்ட விடயங்களையும் இரகசியமாகப் பிரார்த்தித்தல். ''ஒரு விடுத்தம் இரகசியமாக இறைஞ்சும் துஆ, எழுபது விடுத்தம் பகிரங்கமாகப் பிரார்த்திக்கும் துஆவுக்கு நிகரானது'' என்பதாக ஹதீஸ்களில் வந்துள்ளது.

19) துஆக் கேட்கின்ற போது, அல்லாஹ்வின் ஏவல்களுக்கு முழுவதுமாக அடிபணிவதைப் பிரதிபலிப்பது போன்று, ''மாஷா அல்லாஹ், லாஹவ்ல வலா குவ்வத இல்லாபில்லாஹ்'' (அனைத்தும் அல்லாஹ்வின் நாடியபடியே. அவன் மூலமேயன்றி எத்தகைய மாற்றமும் வல்லமையும் கிடையாது) என்ற வாக்கியத்தை சொல்லிக் கொள்ளல்.

20) அல்லாஹ்விடம் தௌபாச் செய்து, இறையச்சத்துடனும் பேணுதலுடன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல். ''தனது பிரார்த்தனைகள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புபவர், தனது உழைப்பை சீராக வைத்திருக்க வேண்டும். ஏனெனில், ஒரு மனிதன் உண்ணுவதற்காக, ஹராமான உழைப்பினாலான உணவுக் கவளமொன்றை தன் உதட்டருகே உயர்த்துவானாயின், அவனது நாற்பது நாள் துஆக்கள் மறுக்கப்பட்டு விடுகின்றன'' என்பதாக ஹதீஸ்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

21) அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இழந்துவிடாதிருத்தல். சில மனிதர்களது துஆக்கள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படாது தாமதப்படுத்தப்படும். அவ்வாறான வேளைகளில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இழந்து விடாதிருப்பது அவசியமாகும். ''நீங்கள் அல்லாஹ்வின் அருளில் நிராசையுற்றோராகி விடவேண்டாம்'' (39:53) என அல்குர்ஆன் வலியுறுத்துகின்றது. ''ஒரு முஃமினுடைய துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதிலுள்ள தாமதமானது, அம்முஃமினுடைய சப்தத்தையும் யாசிப்பையும் தொடர்ந்து செவிமடுப்பதற்கு அல்லாஹ் விரும்புகின்றான் என்பதற்கான அடையாளமாகும்'' என இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

22) ஆமீன் கூறும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒருங்கிணைந்து துஆக்களில் ஈடுபடுகின்ற போது, ஒருவர் பிரார்த்திக்க, ஏனையோர் 'ஆமீன்' (ஏற்றுக் கொள்வாயாக!) என்று கூறுவது நல்ல வழிமுறையாகும்.

23) பிறர் நலனை முன்னிறுத்திய பொதுவான பிரார்த்தனைகளுக்கு முன்னுரிமையளித்தல். துஆ கேட்பவர், தனக்காக துஆக் கேட்குமுன் பிறருக்காக துஆ கேட்டுக் கொள்வது சிறந்த செயலாகும். ''உங்களில் ஒருவர் துஆக் கேட்டால், விசேடமாக சமூக மக்கள் அனைவருக்கும் பிரார்த்தித்துக் கொள்ளவும். அது

துஆக்களுக்கு மிக அவசியமானதாகும்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ''நபி (ஸல்) அவர்கள், அதிகமாக பொதுப்படையான துஆக்களையே கேட்பவர்களாகவும், ஏனையவற்றை விட்டுவிடுபவர்களாகவும் இருந்தார்கள்'' என்பதாக ஹஸ்ரத் ஆயிஷா நாயகி அறிவிக்கின்றார்கள். பொதுவாகக் கேட்கப்படும் துஆக்களில் பின்வரும் துஆ சிறப்பானதும் பிரபல்யமானதுமாகும்: ''அல்லாஹ¤ம்மஃக்பிர் லில் முஃமினீன வல் முஃமினாத்'' (அல்லாஹ்வே! முஃமினான ஆண்களுக்கும் முஃமினான பெண்களுக்கு நீ மன்னிப்பளிப்பாயாக!)

24) துஆ கேட்பதிலும் சில வரையறைகள் உள்ளன. அவ்வரையறைகளை மீறாதிருப்பது அவசியமாகும். தீய விடயங்களுக்காக பிரார்த்திப்பதும், துஆ தொடர்பான வரம்பு மீறுதலாகும். அல்லாமா இப்னுல் கையிம் அவர்கள், தமது பதாயிஉல் பவாயித் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளதாவது; ''துஆவில் வரம்பு மீறுதலென்பது, கேட்கக் கூடாத விடயங்களை அல்லாஹ்விடம் கேட்பதாகும். இஸ்லாத்தில் விலக்கப்பட்ட விடயங்களை செய்வதற்கு உதவி கோருவது, சமூக மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களைப் பிரார்த்திப்பது போன்ற துஆக்களை இதற்குதாரணமாகக் குறிப்பிடலாம். துஆ என்பது, பலவீனமான, பணிவான, ஏழ்மையான மன உணர்வுள்ள ஒருவரிலிருந்தே வெளிப்படக் கூடியது. ஆகவே, யாரேனும் துஆக் கேட்கும் போது பலஹீனமான தொனியிலோ, உள்ளச்சத்துடனோ, பணிவுத் தன்மையுடனோ துஆ கேட்கவில்லையெனில் அவரும் துஆவில் வரம்பு மீறியவரே''

25) மனிதர்களுக்கு அநீதியிழைப்பதைத் தவிர்ந்து கொள்ளல். ஏனெனில், அநீதியாளர்களுடைய பிரார்த்தனைகளுக்கு அல்லாஹ் பதிலளிப்பதில்லை.

26) மறைவாக துஆச் செய்தல். முஃமின்கள், தம்மை விட்டும் தூரமாகவோ, மறைவாகவோ உள்ள தம் சகோதரர்களுக்காக, அல்லது நண்பர்களுக்காக துஆச் செய்வதை இது குறிக்கின்றது. ''ஒரு முஃமின் தன்னை விட்டும் மறைவாக இருக்கின்ற ஒருவருக்காகப் பிரார்த்தித்தால், அதற்கு மிக விரைவாக அல்லாஹ்வின் பதில் கிடைத்து விடுகின்றது'' என்பதாக நபி

(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். தவிரவும், அவ்வாறு துஆச் செய்பவருக்கும் அளவற்ற கூலிகள் வழங்கப்படுகின்றன.

27) சோதனைகளோ, நெருக்கடிகளோ ஏற்படுவதற்கு முன்னமேயே அவற்றை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோரி துஆக் கேட்டுக் கொள்ளல்.

28) துஆவின் நிறைவில், நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் ஸலவாத் கூறுதல். ஏனெனில், ''யாருக்கேனும் ஏதாவது தேவைகள் இருப்பின், அவர் நபியவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் ஸலவாத் கூறிக் கொண்டு தனது தேவைகளை அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். அதன்பின், ஸலவாத் கூறி துஆவை நிறைவு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால், அவரது துஆ நிச்சயம் ஏற்றுக் கொள்ளப்படும்'' என்பதாக ஹதீஸ்களில் வந்துள்ளது.

29) ஸலவாத்துக்குப் பின், அல்லாஹ்வைப் புகழ்ந்து துஆவை நிறைவு செய்தல்

30) துஆவை முடித்துக் கொண்டபின், துஆவுக்காக ஏந்தியிருந்த இரு கைகளையும் முகம், தலை, நெஞ்சு முதலான இடங்களில் தடவிக் கொள்வது சுன்னத்தாகும். உமர் (ரழி) அவர்கள் கூறுவதாவது; ''நபி (ஸல்) அவர்கள் துஆக் கேட்பதற்காக தமது கைகளை ஏந்திவிட்டார்களானால், துஆவின் நிறைவில் அக்கைகளைத் தம் திருமுகத்தில் தடவாமல் விடமாட்டார்கள்'' (திர்மிதீ)

# دُعَاءُ كُمَيْلٍ

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَللَّهُمَّ اِنِّى اَسْئَلُكَ بِرَحْمَتِكَ الَّتِى وَسِعَتْ كُلَّ شَىْءٍ وَبِقُوَّتِكَ الَّتِى قَهَرْتَ بِهَا كُلَّ شَىْءٍ وَخَضَعَ لَهَا كُلُّ شَىْءٍ وَبِجَبَرُوْتِكَ الَّتِى غَلَبْتَ بِهَا كُلَّ شَىْءٍ وَبِعِزَّتِكَ الَّتِى لاَيَـقُوْمُ لَهَا شَىْءٌ وَبِعَظَمَتِكَ الَّتِى مَلَأَتْ كُلُّ شَىْءٍ وَبِسُلْطَانِكَ الَّذِى عَلاَ كُلُّ شَىْءٍ وَبِوَجْهِكَ الْبَاقِى بَعْدَ فَنَاءِ كُلِّ شَىْءٍ وَبِأَسْمَائِكَ الَّتِى مَلَأَتْ اَرْكَانَ كُلِّ شَىْءٍ وَبِعِلْمِكَ الَّذِى اَحَاطَ بِكُلِّ شَىْءٍ وَبِنُوْرِ وَجْهِكَ الَّذِى اَضَاءَ لَهُ كُلُّ شَىْءٍ يَانُوْرُ يَاقُدُّوْسُ يَا اَوَّلَ اْلاوَّلِيْنَ وَيَا آخِرَ اْلآخِرِيْنَ اَللَّهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تَهْتِكُ الْعِصَمَ اَللَّهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تُنْزِلُ النِّقَمَ اَللَّهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تُغَيِّرُ النِّعَمَ اَللَّهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تَحْبِسُ الدُّعَاءَ اَللَّهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تَقْطَعُ الرَّجَاءَ اَللَّهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تُنْزِلُ الْبَلاَءَ اَللَّهُمَّ اغْفِرْ لِى كُلَّ ذَنْبٍ اَذْنَبْتُهُ وَكُلَّ

خَطِيْئَةٍ اَخْطَاْتُهَا اَللَّهُمَّ اِنِّى اَتَقَرَّبُ اِلَيْكَ بِذِكْرِكَ وَاَسْتَشْفِعُ بِكَ اِلَى
نَفْسِكَ وَاَسْئَلُكَ بِجُوْدِكَ اَنْ تُدْنِيَنِى مِنْ قُرْبِكَ وَاَنْ تُوْزِعَنِى شُكْرَكَ
وَاَنْ تُلْهِمَنِى ذِكْرَكَ اَللَّهُمَّ اِنِّى اَسْئَلُكَ سُؤَالَ خَاضِعٍ مُتَذَلِّلٍ خَاشِعٍ
مُتَضَرِّعٍ اَنْ تُسَامِحَنِى وَتَرْحَمَنِى وَتَجْعَلَنِى بِقِسْمِكَ رَاضِيًا قَانِعًا
وَفِى جَمِيْعِ اْلاَحْوَالِ مُتَوَاضِعًا اَللَّهُمَّ وَاَسْئَلُكَ سُؤَالَ مَنِ اشْتَدَّتْ
اِلَى رَحْمَتِكَ فَاقَتُهُ وَاَنْزَلَ بِكَ عِنْدَ الشَّدَائِدِ حَاجَتَهُ وَعَظُمَ فِيْمَا
عِنْدَكَ رَغْبَتُهُ اَللَّهُمَّ عَظُمَ سُلْطَانُكَ وَعَلاَ مَكَانُكَ وَخَفِيَ مَكْرُكَ
وَظَهَرَ اَمْرُكَ وَغَلَبَ قَهْرُكَ وَجَرَتْ قُدْرَتُكَ وَلاَ يُمْكِنُ الْفِرَارُ مِنْ
حُكُوْمَتِكَ اَللَّهُمَّ لاَ اَجِدُ لِذُنُوْبِى غَافِرًا وَلاَ لِقَبَائِحِى سَاتِرًا وَلاَ
لِشَىْءٍ مِنْ عَمَلِيَ الْقَبِيْحِ بِالْحَسَنِ مُبَدِّلاً غَيْرَكَ لاَ اِلَهَ اِلاَّ اَنْتَ
سُبْحَانَكَ وَبِحَمْدِكَ ظَلَمْتُ نَفْسِى وَتَجَرَّاْتُ بِجَهْلِى وَسَكَنْتُ اِلَى
قَدِيْمِ ذِكْرِكَ لِى وَمَنِّكَ عَلَيَّ اَللَّهُمَّ مَوْلاَىَ كَمْ مِنْ قَبِيْحٍ سَتَرْتَهُ
وَكَمْ مِنْ فَادِحٍ مِنَ الْبَلاَءِ اَقَلْتَهُ وَكَمْ مِنْ عِثَارٍ وَقَيْتَهُ وَكَمْ مِنْ
مَكْرُوْهٍ دَفَعْتَهُ وَكَمْ مِنْ ثَنَاءٍ جَمِيْلٍ لَسْتُ اَهْلاً لَهُ نَشَرْتَهُ اَللَّهُمَّ
عَظُمَ بَلاَئِى وَاَفْرَطَ بِى سُوْءُ حَالِى وَقَصُرَتْ بِى اَعْمَالِى وَقَعَدَتْ

بِى اَغْلاَلِى وَحَبَسَنِى عَنْ نَـفْعِى بُعْدُ آمَالِى وَخَدَعَـتْـنِيَ الدُّنْيَا

بِغُرُوْرِهَا وَنَفْسِى بِخِيَانَتِهَا وَمِطَالِى يَاسَيِّدِى فَاَسْئَلُكَ بِعِزَّتِكَ اَنْ لاَ

يَحْجُبَ عَنْكَ دُعَائِى سُوْءُ عَمَلِى وَفِعَالِى وَلاَ تَفْضَحْنِى بِخَفِيِّ

مَااطَّلَعْتُ عَلَيْهِ مِنْ سِرِّى وَلاَ تُعَاجِلْنِى بِالْعُقُوْبَةِ عَلَى مَاعَمِلْتُهُ

فِى خَلَوَاتِى مِنْ سُوْءِ فِعْلِى وَاِسَاءَتِى وَدَوَامِ تَفْرِيْطِى وَجَهَالَتِى

وَكَثْرَةِ شَهْوَاتِى وَغَفْلَتِى وَكُنِ اللَّهُمَّ بِعِزَّتِكَ لِى فِى كُلِّ الْاَحْوَالِ

رَؤُوْفًا وَعَلَيَّ فِى جَمِيْعِ الْاُمُوْرِ عَطُوْفًا اِلَهِى وَرَبِّى مَنْ لِى غَيْرُكَ

اَسْئَلُهُ كَشْفَ ضُرِّى وَالنَّظْرَ فِى اَمْرِى اِلَهِى وَمَوْلاَىَ اَجْرَيْتَ عَلَيَّ

حُكْمًا اتَّبَعْتُ فِى هَوَى نَفْسِى وَلَمْ اَحْتَرِسْ فِيْهِ مِنْ تَزْيِيْنِ

عَدُوِّى فَغَرَّنِى بِمَا اَهْوَى وَاَسْعَدَهُ عَلَى ذَلِكَ الْقَضَاءِ فَتَجَاوَزْتُ بِمَا

جَرَى عَلَيَّ مِنْ ذَلِكَ بَعْضَ حُدُوْدِكَ وَخَالَفْتُ بَعْضَ اَوَامِرِكَ فَلَكَ

الْحَمْدُ عَلَيَّ فِى جَمِيْعِ ذَلِكَ وَلاَ حُجَّةَ لِى فِيْمَا جَرَى عَلَيَّ فِيْهِ

قَضَاؤُكَ وَاَلْزَمَنِى حُكْمُكَ وَبَلاَؤُكَ وَقَدْ اَتَيْتُكَ يَااِلَهِى بَعْدَ تَقْصِيْرِى

وَاِسْرَافِى عَلَى نَفْسِى مُعْتَذِرًا نَادِمًا مُنْكَسِرًا مُسْتَقِيْلاً مُسْتَغْفِرًا

مُنِيْبًا مُقِرًّا مُذْعِنًا مُعْتَرِفًا لاَ اَجِدُ مَفَرًّا مِمَّا كَانَ مِنِّى وَلاَ مَفْزَعًا

اَتَوَجَّهُ اِلَيْهِ فِى اَمْرِى غَيْرَ قَبُوْلِكَ عُذْرِىَ وَاِدْخَالِكَ اِيَّاىَ فِى سَعَةٍ مِنْ رَحْمَتِكَ اَللّٰهُمَّ فَاقْبَلْ عُذْرِى وَارْحَمْ شِدَّةَ ضُرِّى وَفُكَّنِى مِنْ شَدِّ وَثَاقِى يَارَبِّ ارْحَمْ ضَعْفَ بَدَنِى وَرِقَّةَ جِلْدِى وَدِقَّةَ عَظْمِى يَامَنْ بَدَءَ خَلْقِى وَذِكْرِى وَتَرْبِــيَــتِى وَبِرِّى وَتَغْذِيَتِى هَبْنِى لاِبْتِدَاءِ كَرَمِكَ وَسَالِفِ بِرِّكَ بِى يَااِلَهِى وَسَيِّدِى وَرَبِّى اَتُرَاكَ مُعَذِّبِى بِنَارِكَ بَعْدَ تَوْحِيْدِكَ وَبَعْدَ مَاانْطَوَى عَلَيْهِ قَلْبِى مِنْ مَعْرِفَتِكَ وَلَهِجَ بِهِ لِسَانِى مِنْ ذِكْرِكَ وَاعْتَقَدَهُ ضَمِيْرِى مِنْ حُبِّكَ وَبَعْدَ صِدْقِ اعْتِرَافِى وَدُعَائِى خَاضِعًا لِرُبُوْبِيَّتِكَ هَيْهَاتَ اَنْتَ اَكْرَمُ مِنْ اَنْ تُضَيِّعَ مَنْ رَبَّيْتَهُ اَوْ تُبَعِّدَ مَنْ اَدْنَيْتَهُ اَوْ تُشَرِّدَ مَنْ آوَيْتَهُ اَوْ تُسَلِّمَ اِلَى الْبَلاَءِ مَنْ كَفَيْتَهُ وَرَحِمْتَهُ وَلَيْتَ شِعْرِى يَاسَيِّدِى وَاِلَهِى وَمَوْلاَىَ اَتُسَلِّطُ النَّارَ عَلَى وُجُوْهٍ خَرَّتْ لِعَظَمَتِكَ سَاجِدَةً وَعَلَى اَلْسُنٍ نَطَقَتْ بِتَوْحِيْدِكَ صَادِقَةً وَبِشُكْرِكَ مَادِحَةً وَعَلَى قُلُوْبٍ اعْتَرَفَتْ بِاِلَهِيَّتِكَ مُحَقِّقَةً وَعَلَى ضَمَائِرَ حَوَتْ مِنَ الْعِلْمِ بِكَ حَتَّى صَارَتْ خَاشِعَةً وَعَلَى جَوَارِحَ سَعَتْ اِلَى اَوْطَانِ تَعَبُّدِكَ طَائِعَةً وَاَشَارَتْ بِاسْتِغْفَارِكَ مُذْعِنَةً مَا هَكَذَا الظَّنُّ بِكَ وَلاَ اُخْبِرْنَا

بفَضْلِكَ عَنْكَ يَاكَرِيْمِ يِارَبِّ وَاَنْتَ تَعْلَمُ ضَعْفِى عَنْ قَلِيْلٍ مِنْ بَلاَءِ
الدُّنْيَا وَعُقُوْبَاتِهَا وَمَا يَجْرِى فِيْهَا مِنَ الْمَكَارِهِ عَلَى اَهْلِهَا عَلَى اَنَّ
ذَلِكَ بَلاَءٌ وَمَكْرُوْهٌ قَلِيْلٌ مَكْثُهُ يَسِيْرٌ بَقَاؤُهُ قَصِيْرٌ مُدَّتُهُ فَكَيْفَ
احْتِمَالِى لِبَلاَءِ اْلآخِرَةِ وَجَلِيْلِ وُقُوْعِ الْمَكَارِهِ فِيْهَا وَهُوَ بَلاَءٌ
تَطُوْلُ مُدَّتُهُ وَيَدُوْمُ مَقَامُهُ وَلاَ يُخَفَّفُ عَنْ اَهْلِهِ لاَنَّهُ لاَيَكُوْنُ اِلاَّ
عَنْ غَضَبِكَ وَانْتِقَامِكَ وَسَخْطِكَ وَهَذَا مَالاَتَـقُوْمُ لَهُ السَّمَاوَاتُ
وَاْلاَرْضُ يَاسَيِّدِى فَكَيْفَ لِى وَاَنَا عَبْدُكَ الضَّعِيْفُ الذَّلِيْلُ الْحَقِيْرُ
الْمِسْكِيْنُ الْمُسْتَكِيْنُ يَااِلَهِى وَرَبِّى وَسَيِّدِى وَمَوْلاَىَ لاَيِّ اْلاُمُوْرِ
اِلَيْكَ اَشْكُو وَلِمَا مِنْهَا اَضِجُّ وَاَبْكِى لاَلِيْمِ الْعَذَابِ وَشِدَّتِهِ اَمْ لِطُوْلِ
الْبَلاَءِ وَمُدَّتِهِ فَلَئِنْ صَيَّرْتَنِى لِلْعُقُوْبَاتِ مَعَ اَعْدَائِكَ وَجَمَعْتَ بَيْنِى
وَبَيْنَ اَهْلِ بَلاَئِكَ وَفَرَّقْتَ بَيْنِى وَبَيْنَ اَحِبَّائِكَ وَاَوْلِيَائِكَ فَهَبْنِى يَا
اِلَهِى وَسَيِّدِى وَمَوْلاَىَ وَرَبِّى صَبَرْتُ عَلَى عَذَابِكَ فَكَيْفَ اَصْبِرُ
عَلَى فِرَاقِكَ وَهَبْنِى صَبَرْتُ عَلَى حَرِّ نَارِكَ فَكَيْفَ اَصْبِرُ عَنِ
النَّظْرِ اِلَى كَرَامَتِكَ اَمْ كَيْفَ اَسْكُنُ فِى النَّارِ وَرَجَائِى عَفْوُكَ
فَبِعِزَّتِكَ يَاسَيِّدِى وَمَوْلاَى اُقْسِمُ صَادِقًا لَئِنْ تَرَكْتَنِى نَاطِقًا

لاَضِجَّنَّ اِلَيْكَ بَيْنَ اَهْلِهَا ضَجِيْجَ اْلآمِلِيْنَ وَلَاَصْرُخَنَّ اِلَيْكَ صُرَاخَ الْمُسْتَصْرِخِيْنَ وَلَاَبْكِيَنَّ عَلَيْكَ بُكَاءَ الْفَاقِدِيْنَ وَلَاُنَادِيَنَّكَ اَيْنَ كُنْتَ يَاوَلِيَّ الْمُؤْمِنِيْنَ يَاغَايَةَ آمَالِ الْعَارِفِيْنَ يَاغِيَاثَ الْمُسْتَغِيْثِيْنَ يَاحَبِيْبَ قُلُوْبِ الصَّادِقِيْنَ وَيَااِلَهَ الْعَالَمِيْنَ اَفَتُرَاكَ سُبْحَانَكَ يَااِلَهِى وَبِحَمْدِكَ تَسْمَعُ فِيْهَا صَوْتَ عَبْدٍ مُسْلِمٍ سُجِنَ فِيْهَا بِمُخَالَفَتِهِ وَذَاقَ طَعْمَ عَذَابِهَا بِمَعْصِيَّتِهِ وَحُبِسَ بَيْنَ اَطْبَاقِهَا بِجُرْمِه وَجَرِيْرَتِهِ وَهُوَ يَضِجُّ اِلَيْكَ ضَجِيْجَ مُؤَمِّلٍ لِرَحْمَتِكَ وَيُنَادِيْكَ بِلِسَانِ اَهْلِ تَوْحِيْدِكَ وَيَتَوَسَّلُ اِلَيْكَ بِرُبُوبِيَّتِكَ يَامَوْلاَىَ فَكَيْفَ يَبْقَى فِى الْعَذَابِ وَهُوَ يَرْجُو مَا سَلَفَ مِنْ حِلْمِكَ وَرَأْفَتِكَ وَرَحْمَتِكَ اَمْ تُؤْلِمُهُ النَّارُ وَهُوَ يَأْمُلُ فَضْلَكَ وَرَحْمَتِكَ اَمْ كَيْفَ يُحْرِقُهُ لَهِيْبُهَا وَاَنْتَ تَسْمَعُ صَوْتَهُ وَتَرَى مَكَانَهُ اَمْ كَيْفَ يَشْتَمِلُ عَلَيْهِ زَفِيْرُهَا وَاَنْتَ تَعْلَمُ ضَعْفَهُ اَمْ كَيْفَ يَتَــقَلْقَلُ بَيْنَ اَطْبَاقِهَا وَاَنْتَ تَعْلَمُ صِدْقَهُ اَمْ كَيْفَ تَزْجُرُهُ زَبَانِيَّتُهَا وَهُوَ يُنَادِيْكَ يَارَبَّهُ اَمْ كَيْفَ يَرْجُو فَضْلَكَ فِى عِتْقِهِ مِنْهَا فَـتَــتْرُكَهُ فِيْهَا هَيْهَاتَ مَا ذَلِكَ الظَّنُّ بِكَ وَلاَالْمَعْرُوْفَ مِنْ فَضْلِكَ وَلاَ مُشْبِهُ لِمَا عَامَلْتَ بِهِ الْمُوَحِّدِيْنَ مِنْ

بِرِّكَ وَاِحْسَانِكَ فَبِالْيَقِيْنِ اَقْطَعُ لَوْلاَ مَا حَكَمْتَ لَهُ مِنْ تَعْذِيْبِ جَاحِدِيْكَ وَقَضَيْتَ بِهِ مِنْ اِخْلاَدِ مُعَانِدِيْكَ لَجَعَلْتَ النَّارَ كُلَّهَا بَرْدًا وَسَلاَمًا وَمَا كَانَتْ لِاَحَدٍ فِيْهَا مَقَرًّا وَلاَ مُقَامًا لَكِنَّكَ تَـقَدَّسَتْ اَسْمَاؤُكَ اَقْسَمْتَ اَنْ تَمْلَاَهَا مِنَ الْكَافِرِيْنَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ وَاَنْ تُخَلِّدَ فِيْهَا الْمُعَانِدِيْنَ وَاَنْتَ جَلَّ ثَنَاؤُكَ قُلْتَ مُبْتَدِئًا وَتَطَوَّلْتَ بِالْاِنْعَامِ مُتَكَرِّمًا اَفَمَنْ كَانَ مُؤْمِنًا كَمَنْ كَانَ فَاسِقًا لاَيَسْتَوُونَ اِلَهِى وَسَيِّدِى فَاَسْئَلُكَ بِالْقُدْرَةِ الَّتِى قَدَّرْتَهَا وَبِالْقَضِيَّةِ الَّتِى حَتَمْتَهَا وَحَكَمْتَهَا وَغَلَبْتَ مَنْ عَلَيْهِ اَجْرَيْتَهَا اَنْ تَهَبَ لِى فِى هَذِهِ اللَّيْلَةِ وَفِى هَذِهِ السَّاعَةِ كُلَّ جُرْمٍ اَجْرَمْتُهُ وَكُلَّ ذَنْبٍ اَذْنَبْتُهُ وَكُلَّ قَبِيْحٍ اَسْرَرْتُهُ وَكُلَّ جَهْلٍ عَمِلْتُهُ كَتَمْتُهُ اَوْ اَعْلَنْتُهُ اَخْفَيْتُهُ اَوْ اَظْهَرْتُهُ وَكُلَّ سَيِّئَةٍ اَمَرْتَ بِاِثْبَاتِهَا الْكِرَامَ الْكَاتِبِيْنَ الَّذِيْنَ وَكَّلْتَهُمْ بِحِفْظِ مَايَكُوْنُ مِنِّى وَجَعَلْتَهُمْ شُهُوْدًا عَلَيَّ مَعَ جَوَارِحِى وَكُنْتَ اَنْتَ الرَّقِيْبَ عَلَيَّ مِنْ وَرَائِهِمْ وَالشَّاهِدَ لِمَا خَفِيَ عَنْهُمْ وَبِرَحْمَتِكَ اَخْفَيْتَهُ وَبِفَضْلِكَ سَتَرْتَهُ وَاَنْ تُوَفِّرَ حَظِّى مِنْ كُلِّ خَيْرٍ تُنْزِلُهُ اَوْ اِحْسَانٍ تُفْضِلُهُ اَوْ بِرٍّ تَنْشُرُهُ اَوْ رِزْقٍ تَبْسُطُهُ اَوْ ذَنْبٍ تَـغْـفِرُهُ اَوْ

خَطَاءٍ تَسْتُرُهُ يَارَبِّ يَارَبِّ يَارَبِّ يَااِلَهِى وَسَيِّدِى وَمَوْلاَىَ وَمَالِكَ
رِقِّى يَامَنْ بِيَدِهِ نَاصِيَتِى يَاعَلِيْمًا بِضُرِّى وَمَسْكَنَتِى يَاخَبِيْرًا
بِفَقْرِى وَفَاقَتِى يَارَبِّ يَارَبِّ يَارَبِّ اَسْئَلُكَ بِحَقِّكَ وَقُدْسِكَ وَاَعْظَمِ
صِفَاتِكَ وَاَسْمَائِكَ اَنْ تَجْعَلَ اَوْقَاتِى مِنَ اللَّيْلِ وَالنَّهَارِ بِذِكْرِكَ
مَعْمُوْرَةً وَبِحَمْدِكَ مَوْصُوْلَةً وَاَعْمَالِى عِنْدَكَ مَقْبُوْلَةً حَتَّى تَكُوْنَ
اَعْمَالِى وَاَوْرَادِى كُلُّهَا وِرْدًا وَاحِدًا وَحَالِى فِى خِدْمَتِكَ سَرْمَدًا
يَاسَيِّدِى يَامَنْ عَلَيْهِ مُعَوِّلِى يَامَنْ اِلَيْهِ شَكَوْتُ اَحْوَالِى يَارَبِّ
يَارَبِّ يَارَبِّ قَوِّ عَلَى خِدْمَتِكَ جَوَارِحِى وَاشْدُدْ عَلَى الْعَزِيْمَةِ
جَوَانِحِى وَهَبْ لِيَ الْجِدَّ فِى خَشْيَتِكَ وَالدَّوَامَ فِى اْلاِتِّصَالِ
بِخِدْمَتِكَ حَتَّى اَسْرَحَ اِلَيْكَ فِى مَيَادِيْنِ السَّابِقِيْنَ وَاُسْرِعَ اِلَيْكَ فِى
الْبَارِزِيْنَ وَاَشْتَاقَ اِلَى قُرْبِكَ فِى الْمُشْتَاقِيْنَ وَاَدْنُوَ مِنْكَ دُنُوَّ
الْمُخْلِصِيْنَ وَاَخَافَكَ مَخَافَةَ الْمُوْقِنِيْنَ وَاَجْتَمِعَ فِى جِوَارِكَ مَعَ
الْمُؤْمِنِيْنَ اَللَّهُمَّ وَمَنْ اَرَادَنِى بِسُوْءٍ فَاَرِدْهُ وَمَنْ كَادَنِى فَكِدْهُ
وَاجْعَلْنِى مِنْ اَحْسَنِ عَبِيْدِكَ نَصِيْبًا عِنْدَكَ وَاَقْرَبِهِمْ مَنْزِلَةً مِنْكَ
وَاَخَصِّهِمْ زُلْفَةً لَدَيْكَ فَاِنَّهُ لاَيُنَالُ ذَلِكَ اِلاَّ بِفَضْلِكَ وَجُدْلِى بِجُوْدِكَ

وَاعْطِفْ عَلَيَّ بِمَجْدِكَ وَاحْفَظْنِى بِرَحْمَتِكَ وَاجْعَلْ لِسَانِى بِذِكْرِكَ لَهِجًا وَقَلْبِى بِحُبِّكَ مُتَيَّمًا وَمُنَّ عَلَيَّ بِحُسْنِ اِجَابَتِكَ وَاَقِلْنِى عَثْرَتِى وَاغْفِرْ زَلَّتِى فَاِنَّكَ قَضَيْتَ عَلَى عِبَادِكَ بِعِبَادَتِكَ وَاَمَرْتَهُمْ بِدُعَائِكَ وَضَمِنْتَ لَهُمُ اْلاِجَابَةَ فَاِلَيْكَ يَارَبِّ نَصَبْتُ وَجْهِى وَاِلَيْكَ يَارَبِّ مَدَدْتُ يَدِى فَبِعِزَّتِكَ اسْتَجِبْ لِى دُعَائِى وَبَلِّغْنِى مُنَاىَ وَلاَ تَـقْطَعْ مِنْ فَضْلِكَ رَجَائِى وَاكْفِنِى شَرَّ الْجِنِّ وَاْلاِنْسِ مِنْ اَعْدَائِى يَاسَرِيْعَ الرِّضَا اِغْفِرْ لِمَنْ لاَيَمْلِكُ اِلاَّ الدُّعَاءَ فَاِنَّكَ فَعَّالٌ لِمَا تَشَاءُ يَامَن اسْمُهُ دَوَاءٌ وَذِكْرُهُ شِفَاءٌ وَطَاعَتُهُ غِنَى اِرْحَمْ مَنْ رَأسُ مَالِهِ الرَّجَاءُ وَسِلاَحُهُ الْبُكَاءُ يَاسَابِغَ النِّعَمِ يَادَافِعَ النِّقَمِ يَانُوْرَ الْمُسْتَوْحِشِيْنَ فِى الظُّلَمِ يَا عَالِمًا لاَ يُعَلَّمُ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَآلِ مُحَمَّدٍ وَافْعَلْ بِى مَا اَنْتَ اَهْلُهُ وَصَلَّى اللهُ عَلَى رَسُوْلِهِ وَاْلاَئِمَّةِ الْمَيَامِيْنَ مِنْ آلِهِ وَسَلَّمَ تَسْلِيْمًا كَثِيْرًا.

## துஆ குமைல்

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருநாமத்தால்,

அல்லாஹ்வே! எல்லாப் பொருட்களையும் சூழ்ந்துள்ள உனது பேரருளைக் முன்னிறுத்தியும்,, அனைத்தையும் அடக்கியாளும் உனது வல்லமையை முன்னிறுத்தியும், நான் உன்னிடம் இரைஞ்சுகின்றேன். அவையனைத்தும் உனது வல்லமைக்குப் பணிந்து விட்டன. அவையனைத்துமே தாழ்ந்ததாகி விட்டன. யாவற்றையும் மிகைத்து விட்ட உனது அதிகாரத்தை முன்னிறுத்தியும்,, தன்னிகரற்ற உனது கண்ணியத்தை முன்னிறுத்தியும்,, யாவற்றையும் நிரப்பமாக்கிய உனது மகாத்மியத்தைக் முன்னிறுத்தியும்,, அனைத்தையும் மிகைத்து விட்ட உனது அரசாட்சியை முன்னிறுத்தியும்,, எல்லாமே அழிந்த பின் எஞ்சியிருக்கும் உனது திருமுகத்தை முன்னிறுத்தியும், எல்லாப் பொருட்களினதும் அடிப்படையில் நிரம்பிவிட்ட உனது அழகுத் திருநாமங்களை முன்னிறுத்தியும், அனைத்தையும் அவதானிக்கின்ற உனது பேரறிவினை முன்னிறுத்தியும், அனைத்தையும் பிரகாசமடையச் செய்யும் உனது திருமுகப் பேரொளியை முன்னிறுத்தியும் உன்னிடம் இரைஞ்சுகின்றேன்.

ஒளிமயமானவனே! தூய்மையானவனே! அனைத்திற்கும் ஆரம்பமானவனே! இறுதியானவனே! அல்லாஹ்வே! உனது பாதுகாவலைத் தகர்த்தெறியக்கூடிய எனது பாவங்களை மன்னிப்பாயாக! வேதனைகளை இறக்கி வைக்கக்கூடிய எனது பாவங்களை மன்னிப்பாயாக! அருட்கொடைகளை அழித்து விடும் எனது பாவங்களை மன்னிப்பாயாக! பிரார்த்தனைகளைத் தடுத்து விடும் எனது பாவங்களை மன்னிப்பாயாக! எதிர்பார்ப்பைத் துண்டித்து விடும் எனது பாவங்களை மன்னிப்பாயாக! சோதனைகளை இறக்கி வைக்கும் எனது பாவங்களை மன்னிப்பாயாக! நான் செய்த ஒவ்வொரு பாவத்தையும் தவறையும் மன்னிப்பாயாக! அல்லாஹ்வே! உன்னைத் தியானிப்பதன் மூலம் நான் உன்னை நெருங்குகிறேன். உன்னைக் கொண்டே உன்னிடம் சிபாரிசு செய்கின்றேன். உனது தயாளத்தின் மூலம் நீ என்னை உனக்கு நெருக்கமாக்கிக் கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன். உனக்கு நன்றி செலுத்தும் பண்பை

வழங்கும்படியும், உன்னைத் தியானிக்க உணர்வூட்டும்படியும் யாசிக்கின்றேன்.

அல்லாஹ்வே! உன்னை அடிபணிந்து தொழுது உன்னிடம் இரைஞ்சிக் கேட்கின்றேன். என்னை மன்னித்து அருள்புரிவாயாக. உனது பங்குவைப்பை தன்னிறைவோடு பொருந்திக் கொண்டவனாகவும், எல்லாவற்றிலும் பணிவடக்கம் உடையவனாகவும் என்னை ஆக்குவாயாக. அல்லாஹ்வே! நெருக்கடி வேளையில், உன்னிடம் அதிக தேவையுள்ளவனாக இரந்து கேட்கிறேன். உன்னிடத்தில் உள்ளவற்றின் மீது தேவை அதிகரித்து விட்டது. அல்லாஹ்வே! உனது அரசாட்சி மகத்துவம் வாய்ந்தது உனது அந்தஸ்து உயர்ந்தது. உனது திட்டம் மறைந்து உனது சட்டம் வெளியாகி விட்டது. உனது அதிகாரம் மிகைத்து, உனது சக்தி நிலைத்து விட்டது. உனது அதிகாரத்திலிருந்து வெருண்டோட முடியாது. அல்லாஹ்வே! உன்னைத் தவிர எனது பாவங்களை மன்னிக்கக் கூடிய வேறெவரையும் நான் காணவில்லை. எனது அலங்கோலங்களை அழகாக்ககூடியவன் உன்னையன்றி வேறு யாருமில்லை. வணக்கத்திற்குரியோன் உன்னையன்றி வேறு யாருமில்லை. உன்னைப் புகழ்ந்து தூய்மைப்படுத்துகிறேன். எனது மடமை துணிச்சலடைந்து, எனக்கு நானே தீங்கிழைத்துக் கொண்டேன். உன்னை நினைவு கூர்வதன் மூலமாகவும், உனது அருட்கொடைகள் மூலமாகவும் அமைதியடைந்து விட்டேன்.

எனது எஜமானனாகிய அல்லாஹ்வே! எனது எத்தனை அலங்கோலங்களை மறைத்துள்ளாய். எனது எத்தனை சோதனைகளின் சுமைகளைக குறைத்துள்ளாய். எத்தனை கஷ்டங்கிலிருந்து என்னைப் பாதுகாத்துள்ளாய். எத்தனை கெடுதிகளைத் தடுத்துள்ளாய். எனக்குத் தகுதியற்ற எத்தனை புகழை எனக்கு நீ சூட்டியுள்ளாய். அல்லாஹ்வே! எனது சோதனைகள் மிகைத்து, எனது தீயநிலை என்னைச் சிரமத்தில் ஆழ்த்தியுள்ளது. எனது நற்செயல்கள் சுருங்கி, எனது விலங்குகள் இறுக்கமடைந்து விட்டன. எனது உயர்ந்த இலட்சியங்கள் எனக்குப் பயனற்றுப் போய்விட்டன. இந்த உலகம் ஏமாற்று வித்தையினாலும் எனது ஆன்மா மோசடியினாலும் எனக்கு துரோகமிழைத்து விட்டன. எனது எஜமானே! உனது கண்ணியத்தை முன்னிற்றுத்திக் கேட்கிறேன். எனது தீய் செயலையும் நடவடிக்கைகளையும் எனது பிரார்த்தனைகள் உன்னையடைவதற்குத் திரையாக ஆக்கிவிடாதே. நீ தெரிந்து

வைத்திருக்கும் எனது இரகசிய வாழ்விலுள்ள அந்தரங்கங்களை அம்பலமாக்கி விடாதே. நான் தனித்திருக்கும் வேளையில் எனது மடமையினாலும், எனது இச்சை மேலீட்டாலும், மறதியினாலும், தீய செயல்களினாலும் நான் செய்த தவறுகளுக்கு தண்டனைகளைத் தீவிரப்படுத்தி விடாதே. அல்லாஹ்வே! உனது கண்ணியத்தின் மூலமாக எனது எல்லா நிலைகளிலும் என் மீது இரக்கமுடையவனாக நீ இருப்பாயாக. எனது எல்லாக் கருமங்களிலும் என் மீது கருணையுள்ளவனாகவும் இருப்பாயாக. என் இரட்சகனே! இறைவனே! எனது நெருக்கடிகளைப் போக்குமாறும், எனது விடயத்தில் கரிசனை காட்டுமாறும் உன்னையன்றி வேறு யாரிடம் நான் கேட்க முடியும்.

எனது எஜமானனே! இறைவனே! நீ என் மீது அதிகாரத்தை அமுலாக்கினாய். நானோ எனது இச்சைக்குப் பணிந்து எனது எதிரியான ஷைத்தானிலிருந்து பாதுகாப்புப் பெறாது இருந்து விட்டேன். எனது ஆசைகள் என்னை மயக்கி, என்னை அழிவுக்குள்ளாக்கி விட்டன. என் மீது அமுலாக்கியிருந்த எல்லைகளை நான் மீறிவிட்டேன். உனது நியதி அமுலாகப்படும் போதும், உனது சோதனையும் அதிகாரமும் என்னைக் கட்டுப்படுத்தும் போதும் உனது ஆணைகளுக்கு நான் மாறு செய்து விட்டேன். இவையனைத்திற்கும் உன்னிடத்திலே ஆதாரம் இருக்கின்றது. எனது இறைவனே! எனது அமல்களில் குறைவு செய்தவனாகவும், என் ஆன்மாவின் மீது வரம்பு கடந்தவனாகவும் உன்னிடத்தில் வந்துள்ளேன். வருந்தியவனாக, திருந்தியவனாக, பாவமன்னிப்புக் கோரியவனாக எனது குற்றங்குறைகளை ஏற்றுக் கொண்டவனாக உனது சந்நிதியில் நிற்கிறேன். என்னில் நிகழ்ந்து விட்டதை ஒளிவுமறைவின்றி உன்னிடம் சமர்ப்பித்து விட்டேன். எனது பணிவான இந்த பாவமீட்சியை ஏற்று, உனது பரந்த அருட்கடாட்சத்தில் என்னை ஏற்றுக கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை நாயனே! அல்லாஹ்வே! எனது மன்னிப்பை ஏற்று எனது கஷ்ட நஷ்டங்களில் அன்பு காட்டுவாயாக. எனது நெருக்கடிகளைப் போக்கி வைப்பாயாக.

இரட்சகனே! எனது பலவீனமான உடலுக்கும் எனது மென்மையான தோலுக்கும், எனது நுட்பமான எலும்புக்கும் நீ அருள்புரிவாயாக. என்னைத் தொடக்கத்தில் உருவாக்கி, பராமரித்து, உணவளித்து, சிந்தனாசக்தியைத் தந்து நன்மை பல புரிந்தவன் நீயே. நீ ஆரம்பத்தில் எனக்குப் புரிந்த அன்பையும் அருளையும் மீண்டும்

எனக்கு வாரி வழங்குவாயாக. என் எஜமானனே! இறைவேன! என்னை ஆளும் வல்லோனே! உன்னை மட்டும் நம்பி வழிபட்ட பின் உனது நரகத்தில் போட்டு என்னை நீ வேதனை செய்வாய் என்று நான் நினைக்கவில்லை. அதுவும் உன்னை அறிவதால் என் உள்ளம் நிரம்பி, உனது நினைவினால் எனது நாவு நனைந்து, எனது அகம் உனது நேசத்தால் உருகி, எனது பிரார்த்தனையும் உள்ளுணர்வும் உனது தெய்வீகத் தன்மைக்கு முற்றிலும் அடிபணிந்து விட்ட பின்னர், என்னைத் தண்டித்து வேதனை செய்யக் கூடியவனாக உன்னை நான் காணவில்லை. நீ மிக சங்கையானவன். நீ உருவாக்கி வளர்த்த ஒருவனை நீயே பழுதாக்குவதா? நீ அபயமளித்து அரவணைத்துக் கொண்ட ஒருவனை நீயே அழித்து விரட்டுவதா? நீ அன்பு காட்டி ஆதரவு கொடுத்த ஒருவனை சோதனைக்குள்ளாக்குவாயா? எனது எஜமானனே! பாதுகாவலனே! உனது மகத்துவத்திற்காக உன்னைத் தொழுது பணிந்த முகங்கள் மீது நீ நரக நெருப்பை சாட்டி விடுவாயா? இன்னும் உனது ஏகத்துவத்தை உண்மையாகவே மொழிந்து, உன்னைப் புகழ்ந்து நன்றி கூறிய நாவுகளின் மீதும் உனது தன்னிகரற்ற தெய்வீகத் தன்மையை திட உறுதியோடு ஏற்றுக் கொண்ட இதயங்கள் மீதும் உன்னைப் பற்றிய அறிவால் நிரம்பி, உன்னைப் பணிந்த உள்ளுறுப்புகள் மீதும் உனக்கு வழிபட்ட நிலையில் உன்னை வணங்கும் தேகங்கள் மீதும், தூய நல்லெண்ணத்தோடு பாவமன்னிப்புக் கோரிய அவயவங்கள் மீதும் நீ நரகத்தைச் சாட்டி விடுவாயா? உன்னைப் பற்றி இவ்வாறு எண்ண முடியுமா?

சங்கையானவனே! உனது சிறப்புகள் எமக்கு முழுமையாக அறிவிக்கப்படவில்லை. எனது இறைவேன! இவ்வுலகின் சோதனைகளும் வேதனைகளும் இங்கு நிகழும் வெறுப்பான நெருக்கடிகளும் நிச்சயமாக அற்பமானவையே. இவ்வுலகத்தார் மீது நடக்கும் வெறுப்பான விடயங்கள் மிகக் குறுகிய காலத்தில் நீங்கிவிடக் கூடியவையே. அவ்வாறிருந்தும் கூட, இவற்றையே தாங்கிக் கொள்ளச் சக்தியற்ற நான், மறுமையின் மிகக் கொடிய வேதனைகளையும் நீண்டகாலத் தண்டனைகளையும் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்? அது நீண்ட காலமும் நிரந்தரமுமான சோதனையாகும். அது, வேதனையுடையோருக்கு இலகுவாக இருக்கமாட்டாது. ஏனெனில், அது உனது கோபத்தினாலும், தண்டனையினாலும் சீற்றத்தினாலுமேயன்றி நிகழமாட்டாது. வானங்களும் பூமியும் கூட அதற்கு ஈடுகொடுக்க முடியாது. எனது

எஜமானனே! அப்படியான தண்டனையை நான் எவ்வாறு தாங்கிக் கொள்வேன். நான் எளிய, அற்பமான பரம ஏழையாகிய, பலவீனமான உனது அடிமை. என் இறைவனே! என்னைப் படைத்துப் பரிபாலிப்பவனே! என் தலைவனே! எஜமானனே! நான் எந்த விடயத்திற்காக உன்னிடம் முறையீடு செய்கின்றேன். எதற்காக உன்னிடம் அழுது பிரலாபிக்கின்றேன். கொடிய கடின வேதனைக்காகவா? அல்லது நீண்ட நெடிய சோதனைக்காகவா? நீ என்னை எதிரிகளுடன் சேர்த்து தண்டிப்பாயேயானால், உனது வேதனைக்கு உள்ளானவர்களுடன் என்னையும் சேர்த்துக் கொள்வாயேயானால், உனது நேசர்களை விட்டும் என்னைப் பிரித்து விடுவாயேயானால் என்பதற்காகவே நான் உனது அருளை வேண்டி நிற்கின்றேன். எனது இறைவனே! எஜமானனே! தலைவனே! இரட்சகனே! நீ என்னை வேதனைக்குள்ளாக்கிய போது நான் பொறுத்துக் கொண்டேன். நீ என்னை விட்டுப் பிரிந்திருப்பதை என்னால் எவ்வாறு பொறுத்துக் கொள்ள முடியும்? உனது நரக நெருப்பின் உஷ்ணத்தைப் பொறுத்துக் கொண்டேன். உனது கொடையைக் காணாதிருப்பதை எவ்வாறு பொறுத்துக் கொள்வேன். அல்லது உனது பரந்த மன்னிப்பை இரந்து கேட்கும் நான் நரக நெருப்பில் எவ்வாறு அமைதியடைவேன். எனது எஜமானனே! தலைவனே! உண்மையாகவே உனது கண்ணியத்தின் மீது சத்தியமிட்டுச் சொல்கிறேன். என்னை நீ பேசக்கூடியவனாக ஆக்கியுள்ளமையால், நம்பிக்கையுள்ளோரின் கூச்சலாக நான் உன்னிடம் கூச்சலிட்டுப் பிரார்த்திக்கிறேன். அவலக்குரல் எழுப்புபவர்களின் அபயக்குரலாக நான் உன்னை அழைக்கிறேன். சகலதையும் இழந்து விட்டவர்களின் அழுகையாக உன்னிடம் அழுது மன்றாடுகின்றேன். விசுவாசிகளின் காவலனே! மெய்ஞானிகளின் இலக்கானவனே! நீ எங்கிருந்த போதிலும் உன்னை நான் அழைக்கின்றேன்.

உதவி கோருவோருக்கு உதவுபவனே! உண்மையாளர்களின் உளப்பூர்வ நண்பனே! உலகத்தாரின் இறைவனே! உன்னைப் புகழ்ந்து துதிக்கிறேன். தனது முரண்பட்ட செயலுக்காக சிறையிடப்பட்டுள்ள ஒரு முஸ்லிமின் அவலக்குரலை நீ கேட்கிறாய். அந்த மனிதன், தனது குற்றச் செயல்களுக்காக வேதனையைச் சுவைத்துக் கொண்டிருக்கிறான். அவன உன்னிடம் அபயம் தேடியவனாக அவலக்குரல் எழுப்புகிறான். உன்னை ஒருமைப்படுத்தியவர்களின் நாவினால் உன்னை அழைக்கின்றேன். உனது பராமரித்தல்,

பாதுகாத்தல் உயர்ந்த தன்மையின் மீது நம்பிக்கை வைத்து உன்னிடம் உதவி தேடுகின்றேன். எனது எஜமானனே! உனது கடந்த கால அரவணைப்பை வேண்டி நிற்கும் அவன் எப்படி வேதனையில் நிலைத்திருக்க முடியும். உனது அருளையும் கொடையையும் கேட்டுத் துடிக்கும் அவனை நரக நெருப்பு எவ்வாறு நோவிக்க முடியும்? அவன இருக்கும் இடத்தை நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய். அவனது ஈனக்குரலை நீ கேட்டுக் கொண்டிருக்கிறாய். நரக நெருப்பின் கொழுந்துகள் அவனை எவ்வாறு எரிக்க முடியும்? நரகின் கொடிய சத்தத்தை அவன் எப்படி சகிப்பான்? அவனது பலவீனத்தை நீ நன்கறிந்திருக்கின்றாய். அவனது உள்ளத்தை நீ அறிந்திருக்க நரகின் படிகளில் அவன் எவ்வாறு புரள முடியும்? அவன், என் எஜமானனே என்று உன்னைக் கூவியழைத்துக் கொண்டிருக்கும் போது, நரகின் பாதுகாவலர்களான ஸபானியர்கள் அவனை எப்படி அடித்து விரட்ட முடியும்? தன் விடுதலைக்காக உன் கருணையை வேண்டி நிற்கும் ஒருவனை சிறைக்கைதியாக நீ எப்படி விட்டுவைப்பாய்? இது ஒரு போதும் நடவாது. உன் கொடையை மிஞ்சிய கொடையில்லை. உன்னை ஏகத்துவப்படுத்தியோருக்கு ஒப்பில்லை. திட்டவட்டமாக உன்னை நிராகரிப்பவனைத் தண்டித்து உன்னோடு பிணங்கி நிற்பவனை வேதனையில் நிலைப்படுத்துவது என்று நீ சட்டமியற்றி தீர்ப்புச் செய்யாமல் இருந்திருந்தால் முழு நரகையும் குளுமையாகவும் செழுமையாகவும் ஆக்கியிருப்பாய். அங்கு தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ எவரும் தங்கியிருக்க மாட்டார்கள். நிச்சயமாக உனது பெயர்கள் பரிசுத்தம் வாய்ந்தவை. மனிதர்களிலும் ஜின்களிலுமுள்ள நிராகரிப்பாளர்களைக் கொண்டு நரகத்தை நிரப்பி, அடங்காப் பிடாரிகளை அதில் நிலைப்படுத்துவேன் என முன்னரே நீ சத்தியம் செய்து விட்டாய். சங்கைமிக்க உனது அருள் ஓங்கி, உனது புகழ் மகத்துவம் அடைந்து விட்டது. கெட்டவர்கள் விசுவாசிகளைப் போலிருப்பார்களா? அவர்கள் ஒருபோதும் சமமாகமாட்டார்கள்.

எனது எஜமானனே! நாயனே! வியாபித்த உனத உவல்லமையை முன்னிறுத்தியும், நீ முடிவு செய்து விட்ட உனது தீர்ப்பை முன்னிறுத்தியும் உன்னிடம் இரந்து கேட்கிறேன். இந்த இரவிலே இந்த வேளையிலே நான் செய்த குற்றங்களுக்காக உன் அருள்வேண்டி நிற்கிறேன். நான் புரிந்த ஒவ்வொரு குற்றங்களையும் நான் மறைத்துள்ள ஒவ்வொரு இழிவுகளையும் நான் இரகசியமாகவோ பரகசியமாகவோ செய்த எல்லா மடமைச் செயல்களையும் எனது உடல் உறுப்புகளுடன் சேர்ந்த எனது குற்றச்

செயல்களைப் பதிவு செய்யுமாறு நீ பணித்துள்ள சங்கைக்குரிய பதிவாளர்கள் சாட்சியாக, அனைத்திற்கும் மேலாக நீ என் இயக்கங்களின் மீது மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றாய். என் குற்றங்களை உன் அருளினால் மறைத்து, உன் கொடையினால் ஒழித்து விட்டாய். நீ இறக்கி வைத்துள்ள எல்லா நலவுகளிலிருந்தும் என் சௌபாக்கியங்களை அதிகப்படுத்துவாயாக. நீ வழங்கியுள்ள பேருபகாரங்களிலும், நீ பரப்பியுள்ள நன்மைகளிலும் நீ விசாலப்படுத்தியுள்ள கொடைகளிலும் நீ மன்னிக்ககூடிய பாவங்களிலும், நீ மறைத்துள்ள தவறுகளிலும் என் சௌபாக்கியத்தை மிகைப்படுத்துவாயாக. என் இரட்சகனே! எஜமானனே! இந்த அடிமையின் சொந்தக்காரனே! என்னை நினைத்தவாறெல்லாம் ஆட்டிப்படைப்போனே! எனது கஷ்ட நஷ்டங்களை அறிந்தோனே! எனது வறுமையையும் ஏழ்மையையும் நன்கறிந்தோனே! உனது உள்ளமை, புனிதத்துவம், உனது திருநாமங்களின் மகத்துவத்தினால் உன்னிடத்தில் கேட்கின்றேன். இரவிலும் பகலிலுமான எனது நேரங்களை உனது தியானத்தால் நிரப்பி வைக்குமாறும், உனக்குப் பணிவிடை செய்வதில் சேர்த்து வைக்குமாறும், எனது செயல்களும் நடவடிக்கைகளும் ஒன்றாக இருக்குமாறும் அவற்றை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆக்கி வைக்குமாறும் கேட்கிறேன். என் எல்லா நிலைகளிலும் உனக்கு நிரந்தரமாக ஊழியம் செய்யக்கூடியவனாகவும் என்னை ஆக்கியருள்வாயாக. என் எஜமானனே! என்னைக் கட்டுப்படுத்துபவனே! எனது நிலைமைகளை முறையிடுவதற்குத் தகுதியானவனே! என் இறைவனே! உனக்குப் பணிவிடை செய்வதன் மீது எனது உறுப்புகளை பலப்படுத்துவாயாக. திடமாக உன் பக்கம் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக. உன்னை அஞ்சி வழிபடுவதில் உறுதியைத் தந்தருள்வாயாக உனக்கு நிரந்தரமாக பணி செய்வதற்கு அருள் புரிவாயாக. முன்னைய நல்லடியார்களின் வட்டத்தில் நான் சேர்ந்து கொள்ளும் பொருட்டு முந்திக் கொண்டவர்களில் நான் உன் பக்கம் முந்திக் கொள்வதற்கும், அவா வைத்தவர்களில் உனது நெருக்கத்தை நான் ஆசை கொள்வதற்கும், பரிசுத்தவான்களின் நெருக்கத்தை மிஞ்சிய உனது நெருக்கத்தை நான் பெறுவதற்கும் திடமான நம்பிக்கையாள்ரகளின் பயபக்தியாக உன்னை நான் பயப்படுவதற்கும், விசுவாசிகளுடன் சேர்ந்து உனது பக்கத்தில் நான் கூடியிருப்பதற்கும் எனக்கு நீ அருள்புரிவாயாக.

அல்லாஹ்வே! எவனாவது எனக்கு தீமை செய்ய நாடினால், அதை

அவனுக்கே காட்டிவிடு. உனது பாக்கியங்களைப் பெற்ற அடியார்களில் சிறந்தவனாக என்னை நீ ஆக்கி, எவனாவது எனக்கு சதி செய்ய முனைந்தால், அவனையே அச்சதிக்கு ஆளாக்கி விடுவாயாக. மிகச் சிறந்த பேறுபெற்ற அடியானாகவும், உன்னிடத்தில் மிக நெருக்கமானவனாகவும், உன்னிடத்தில் அந்தஸ்து குறிப்பாக்கப்பட்டவனாகவும் என்னை ஆக்கியருள்வாயாக. நிச்சயமாக இந்தப் பெறுபேறுகளை உனது சிறப்பினாலன்றி பெற்றுக் கொள்ள முடியாது. மேலும், உனது கொடையை எனக்கு வழங்குவாயாக. என் மீது இரக்கம் காட்டுவாயாக. உனது அருளினால் என்னைப் பாதுகாப்பாயாக. எனது நாவை உன்னைத் தியானிப்பதிலேயே திளைத்திருக்கச் செய்வாயாக. எனது உள்ளத்தை உன் மீதான நேசத்தால் நிரப்பி விடுவாயாக. எனது முறையீட்டுக்கு உனது அழகிய பதிலளிப்பைத் தருவாயாக. என் சுமைகளை இறக்கி என் தவறுகளை மன்னிப்பாயாக. நிச்சயமாக நீ உனக்குப் பணி புரியும் அடியார்கள் மீது தீர்ப்புச் செய்துள்ளாய். அவர்களுக்கு உன்னை இறைஞ்சுமாறு கட்டளையிட்டுள்ளாய். அவர்களுக்குப் பதில் சொல்வதற்கு நீ பொறுப்பேற்றுள்ளாய். என் இரட்சகனே! உன் பக்கமே என் முகத்தைத் திருப்பி விட்டேன். உன்னிடமே கையேந்தி இரந்து நிற்கின்றேன். உனது கண்ணியத்தின் பொருட்டினால் எனது பிரார்த்தனையை ஏற்பாயாக. என் நாட்டங்களை நிறைவேற்றித் தந்தருள்வாயாக. எனது தயவான வேண்டுதல்களை உன் அருளிலிருந்து தவிர்ந்து விடாதே. மனிதர்களிலும் ஜின்களிலும் உள்ள எனது எதிரிகளிடமிருந்து என்னைப் பாதுகாப்பாயாக. பொருந்திக் கொள்வதில் விரைவானவனே! பிரார்த்தனையைத் தவிர வேறெதுவுமற்ற இந்த அடியானை மன்னித்தருள்வாயாக. நிச்சயமாக நீ நாடுபவற்றை செய்யக்கூடியவன். தனது பெயரை நோய் நிவாரணியாகவும், தனது திக்ரை சுகமாகவும், தனக்கு வழிப்படுதலை செல்வமாகவும் கொண்டவனே! தயவான வேண்டுதலை தன் மூலதனமாகவும், அழுகையை தன் ஆயுதமாகவும் கொண்ட இந்த அடியான் மீது அருள் புரிவாயாக. அருட்கொடைகளை சொரிபவனே! சோதனைகளைப் போக்குபவனே! இருளில் தத்தளிப்பவர்களுக்கு ஒளியானவனே! யார் துணையுமின்றி சகலமும் அறிந்தவனே!

முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார் மீதும் கருணையையும் அன்பையும் சொரிவாயாக. உன் தகுதிக்கு ஏற்றவாறு என்னை நடத்துவாயாக.

அல்லாஹ் தன் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த பரிசுத்தமான இமாம்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் அதிகமாகச் சொல்லியருள்வானாக!.

# دُعَاءُ التَّوَسُّلِ

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَللَّهُمَّ اِنِّى اَسْئَلُكَ وَاَتَوَجَّهُ اِلَيْكَ بِنَبِيِّكَ نَبِيِّ الرَّحْمَةِ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ يَا اَبَا الْقَاسِمِ يَارَسُوْلَ اللهِ يَا اِمَامَ الرَّحْمَةِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْنَاَ وَتَوَسَّلْنَاَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْنَاكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِنَاَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَنَاَ عِنْدَ اللهِ . يَا اَبَا الْحَسَنِ يَا اَمِيْرَ الْمُؤْمِنِيْنَ يَاعَلِيَّ بْنَ اَبِى طَالِبٍ يَاحُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْنَاَ وَتَوَسَّلْنَاَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْنَاكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِنَاَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَنَاَ عِنْدَ اللهِ . يَا فَاطِمَةُ الزَّهْرَاءُ يَا بِنْتَ مُحَمَّدٍ يَا قُرَّةَ عَيْنِ الرَّسُوْلِ يَاسَيِّدَتَنَاَ وَمَوْلاَتَنَاَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْنَاَ وَتَوَسَّلْنَاَ بِكِ اِلَى اللهِ وَقَدَّمْنَاكِ بَيْنَ يَدَيْ حَاجَاتِنَاَ يَا وَجِيْهَةً عِنْدَ اللهِ اِشْفَعِى لَنَاَ عِنْدَ اللهِ . يَا اَبَا مُحَمَّدٍ يَاحَسَنَ بْنَ عَلِيٍّ اَيُّهَا الْمُجْتَبَى يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ اِنَّا

تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْناَ وَتَوَسَّلْناَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْناَكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِناَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَناَ عِنْدَ اللهِ . يَا اَبَا عَبْدِ اللهِ يَا حُسَيْنَ بْنَ عَلِيٍّ اَيُّهَا الشَّهِيْدُ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَناَ وَمَوْلاَناَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْناَ وَتَوَسَّلْناَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْناَكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِناَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَناَ عِنْدَ اللهِ . يَا اَبَا الْحَسَنِ يَا عَلِيَّ بْنَ الْحُسَيْنِ يَا زَيْنَ الْعَابِدِيْنَ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَناَ وَمَوْلاَناَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْناَ وَتَوَسَّلْناَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْناَكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِناَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَناَ عِنْدَ اللهِ . يَا اَبَا جَعْفَرٍ يَا مُحَمَّدَ بْنَ عَلِيٍّ اَيُّهَا الْبَاقِرُ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَناَ وَمَوْلاَناَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْناَ وَتَوَسَّلْناَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْناَكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِناَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَناَ عِنْدَ اللهِ . يَا اَبَا عَبْدِ اللهِ يَا جَعْفَرَ بْنَ مُحَمَّدٍ اَيُّهَا الصَّادِقُ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَناَ وَمَوْلاَناَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْناَ وَتَوَسَّلْناَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْناَكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِناَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَناَ عِنْدَ اللهِ .

يَا اَبَا الْحَسَنِ يَامُوْسَى بْنَ جَعْفَرٍ اَيُّهَا الْكَاظِمُ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْنَاَ وَتَوَسَّلْنَاَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْنَاكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِنَاَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَنَاَ عِنْدَ اللهِ .يَا اَبَا الْحَسَنِ يَا عَلِيَّ بْنَ مُوْسَى اَيُّهَا الرِّضَا يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْنَاَ وَتَوَسَّلْنَاَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْنَاكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِنَاَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَنَاَ عِنْدَ اللهِ . يَا اَبَا جَعْفَرٍ يَا مُحَمَّدَ بْنَ عَلِيٍّ اَيُّهَا التَّـقِيُّ الْجَوَادُ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْنَاَ وَتَوَسَّلْنَاَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْنَاكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِنَاَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَنَاَ عِنْدَ اللهِ . يَا اَبَا الْحَسَنِ يَا عَلِيَّ بْنَ مُحَمَّدٍ اَيُّهَا الْهَادِى النَّـقِيُّ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْنَاَ وَتَوَسَّلْنَاَ بِكَ اِلَى اللهِ وَقَدَّمْنَاكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِنَاَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَنَاَ عِنْدَ اللهِ . يَا اَبَا مُحَمَّدٍ يَا حَسَنَ بْنَ عَلِيٍّ اَيُّهَا الزَّكِيُّ الْعَسْكَرِيُّ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ

عَلَى خَلْقِهِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْناَ وَتَوَسَّلْناَ بكَ
اِلَى اللهِ وَقَدَّمْناَكَ بَيْنَ يَدَيْ حَاجَاتِناَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَناَ
عِنْدَ اللهِ . يَا وَصِيَّ الْحَسَنِ وَالْخَلَفَ الْحُجَّةَ اَيُّهَا الْقَائِمُ الْمُنْتَظَرُ
الْمَهْدِيُّ يَابْنَ رَسُوْلِ اللهِ يَا حُجَّةَ اللهِ عَلَى خَلْقِهِ يَاسَيِّدَنَاَ وَمَوْلاَنَاَ
اِنَّا تَوَجَّهْنَا وَاسْتَشْفَعْناَ وَتَوَسَّلْناَ بكَ اِلَى اللهِ وَقَدَّمْناَكَ بَيْنَ يَدَيْ
حَاجَاتِناَ يَا وَجِيْهاً عِنْدَ اللهِ اِشْفَعْ لَناَ عِنْدَ اللهِ .

# تعقيبات الصلوات الخمس

## ஐவேளை தொழுகைகளுக்குப் பின்னால் ஓதும் துஆக்கள்

### சுபஹ் தொழுகை – صَلاَةُ الصُّبْح

சுபஹ் தொழுகையின் பின், ஆயதுல் குர்ஸீயையும் சூரா இஹ்லாஸையும் ஓதிக் கொள்வது சிறந்ததாகும். அதன்பின், கீழ்க்காணும் துஆவை ஓதிக் கொள்ளலாம்.

اَصْبَحْنَا وَاَصْبَحَ الْمُلْكُ ِللهِ اَللَّهُمَّ اِنَّا عَبِيْدُكَ وَاَبْنَاءُ عَبِيْدِكَ اَللَّهُمَّ احْفَظْنَا مِنْ حَيْثُ نَحْتَفِظُ وَمِنْ حَيْثُ لاَ نَحْتَفِظُ اَللَّهُمَّ احْرُسْنَا مِنْ حَيْثُ نَحْتَرِسُ وَمِنْ حَيْثُ لاَ نَحْتَرِسُ اَللَّهُمَّ اسْتُرْنَا مِنْ حَيْثُ نَسْتَتِرُ وَمِنْ حَيْثُ لاَ نَسْتَتِرُ اَللَّهُمَّ اسْتُرْنَا بِالْغِنَى وَالْعَافِيَةِ اَللَّهُمَّ ارْزُقْنَا الْعَافِيَةَ وَدَوَامَ الْعَافِيَةِ وَارْزُقْنَا الشُّكْرَ عَلَى الْعَافِيَةِ

நாம் காலை நேரத்தை அடைந்தோம். அல்லாஹ்வின் ஆட்சியும் காலை நேரத்தை அடைந்தது. அல்லாஹ்வே! நிச்சயமாக நாங்கள் உன் அடியார்களாகவும், உன் அடியாரின் புதல்வர்களாகவும் இருக்கின்றோம். நாம் எம்மை எவ்வாறு பாதுகாக்கின்றோமோ, எவ்வாறு பாதுகாக்கத் தவறிவிடுகின்றோமோ அவ்வாறெல்லாம் நீ எங்களைப் பாதுகாப்பாயாக. அல்லாஹ்வே! நாம் எம்மை எவ்வாறு காவல் காக்கின்றோமோ, எவ்வாறு காவல் காக்கத் தவறிவிடுகின்றோமோ, அவ்வாறெல்லாம் நீ எங்களைக் காவல் காப்பாயாக. அல்லாஹ்வே! நாம் எமது குறைகளை எவ்வாறு மறைக்கின்றோமோ, எவ்வாறு மறைக்கத் தவறிவிடுகின்றோமோ,

அவ்வாறெல்லாம் எமது குறைகளை நீ மறைப்பாயாக. செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் எமக்கு நல்குவாயாக. நிரந்தரமான உடற்சுகத்தையும் வழங்குவாயாக. நீ வழங்கிய உடற்சுகத்துக்காக உனக்கு நன்றி கூறும் தன்மையையும் எமக்கு வழங்குவாயாக.

## ளுஹர் தொழுகை – صَلاَةُ الظُّهْرِ

*ளுஹர் தொழுகையின் பின், கீழ்க்காணும் துஆவை ஓதிக் கொள்வது சிறந்ததாகும்.*

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . لاَ اِلَهَ اِلاَّ اللهُ الْعَظِيْمُ الْحَلِيْمُ . لاَ اِلَهَ اِلاَّ اللهُ رَبُّ الْعَرْشِ الْكَرِيْمِ . اَلْحَمْدُ ِللهِ رَبِّ الْعَالَمِيْنَ اَللَّهُمَّ اِنِّى اَسْئَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ مَغْفِرَتِكَ وَالْغَنِيْمَةَ مِنْ كُلِّ بِرٍّ وَالسَّلاَمَةَ مِنْ كُلِّ اِثْمٍ اَللَّهُمَّ لاَ تَدَعْ لِى ذَنْبًا اِلاَّ غَفَرْتَهُ وَلاَ هَمًّا اِلاَّ فَرَّجْتَهُ وَلاَ سُقْمًا اِلاَّ شَفَيْتَهُ وَلاَ عَيْبًا اِلاَّ سَتَرْتَــهُ وَلاَ رِزْقًا اِلاَّ بَسَطْتَهُ وَلاَ خَوْفًا اِلاَّ آمَنْتَهُ وِلاَ سُوْءً اِلاَّ صَرَفْتَهُ وَلاَ حَاجَةً هِيَ لَكَ رِضًا وَلِيَ فِيْهَا صَلاَحٌ اِلاَّ قَضَيْتَهَا يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ آمِيْنَ يَارَبَّ الْعَالَمِيْنَ .

அன்பும் மகத்துவமும் மிக்க அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியோன் வேறு யாருமில்லை. அகில உலக இரட்சகனான அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். அல்லாஹ்வே! உனது அருளை அவசியமாக்கக் கூடியதையும், உனது மன்னிப்பை உறுதியாக்கக் கூடியவதையும், ஒவ்வொரு நன்மையிலிருந்தும் அதிகமாகப் பெற்றுக் கொள்வதையும், ஒவ்வொரு தீங்கிலிருந்தும் ஈடேற்றம் பெறுவதையும் நான் உன்னிடத்தில் கேட்கிறேன். அல்லாஹ்வே! எனது பாவங்களை மன்னிக்காமலும், எனது

கஷ்டங்களை நீக்காமலும், எனது நோய்களை சுகப்படுத்தாமலும், எனது குறைகளை மறைக்காமலும், எனது உணவை விஸ்தீரணப்படுத்தாமலும், எனது பயத்தை நீக்காமலும், எனது தீங்கை தட்டி விடாமலும், நீ பொருந்திக் கொள்ளக்கூடியதும் எனக்குப் பயனுள்ளதுமான எனது தேவைகளை நிறைவேற்றாமலும் விட்டுவிடாதே. அருள் புரிவோரிலெல்லாம் மிகச் சிறந்த அருளாளனே! அகில உலக இரட்சகனே! இதனை ஏற்றுக் கொள்வாயாக.

## அஸர் தொழுகை – صَلاَةُ الْعَصْرْ

*அஸர் தொழுகையின் பின், கீழ்க்காணும் துஆவை ஓதிக் கொள்வது சிறந்ததாகும்.*

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَسْتَغْفِرُ اللهَ الَّذِى لاَ اِلَهَ اِلاَّ هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ الرَّحْمَنُ الرَّحِيْمُ ذُو الْجَلاَلِ وَالْاِكْرَامِ وَاَسْئَلُهُ اَنْ يَتُوْبَ عَلَيَّ تَوْبَةَ عَبْدٍ ذَلِيْلٍ خَاضِعٍ فَقِيْرٍ بَآئِسٍ مِسْكِيْنٍ مُسْتَكِيْنٍ مُسْتَجِيْرٍ لاَ يَمْلِكُ لِنَفْسِهِ نَفْعًا وَلاَضَرًّا وَلاَ مَوْتًا وَلاَ حَيَوةً وَلاَ نُشُوْرًا .

اَللَّهُمَّ اِنِّى اَعُوْذُ بِكَ مِنْ نَفْسٍ لاَ تَشْبَعُ وَمِنْ قَلْبٍ لاَيَخْشَعُ وَمِنْ عِلْمٍ لاَيَنْفَعُ وَمِنْ صَلاَةٍ لاَ تُرْفَعُ وَمِنْ دُعَاءٍ لاَيُسْمَعُ اَللَّهُمَّ اِنِّى اَسْئَلُكَ الْيُسْرَ بَعْدَ الْعُسْرِ وَالْفَرَجَ بَعْدَ الْكَرْبِ وَالرَّخَاءَ بَعْدَ الشِّدَّةِ

اَللَّهُمَّ مَابِنَا مِنْ نِعْمَةٍ فَمِنْكَ لاَ اِلَهَ اِلاَّ اَنْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ

வணக்கத்திற்குரியோன் அவனையன்றி வேறு யாருமில்லை, அவன் உயிருள்ளவன், நிலையானவன், அருளாளன், அன்புடையோன்,

மகத்துவமும் சங்கையும் பொருந்தியவன், அத்தகைய அல்லாஹ்விடம் நான் பாவமன்னிப்புத் தேடுகின்றேன். ஒரு இழிவான், தாழ்மையான, ஏழ்மையான, அநாதரவான, பலவீனமான, நன்மையையோ தீமையையோ வாழ்வையோ மரணத்தையோ மீளுயிர்ப்பையோ தனக்கென மேற்கொள்ள முடியாத ஒரு இயலாமையாளனான அடியானைப் போன்று அல்லாஹ்விடம் நான் பிழைபொறுக்கத் தேடுகின்றேன்.
அல்லாஹ்வே! திருப்தியடையாத ஆன்மாவிலிருந்தும், பயபக்தியற்ற உள்ளத்திலிருந்தும், பயன் தராத அறிவிலிருந்தும், ஏற்றுக் கொள்ளப்படாத தொழுகையிலிருந்தும், செவிமடுக்கப்படாத பிரார்த்தனையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். அல்லாஹ்வே! கஷ்டத்திற்குப் பிறகான இலகு நிலையையும், துன்பத்திற்குப் பிறகான இன்பத்தையும், கடின நிலைக்குப் பிறகான மென்மையையும் உன்னிடத்தில் நான் வேண்டுகின்றேன். அல்லாஹ்வே! எம்மிடமுள்ள அருட்கொடைகளெல்லாம் உன்னிடமிருந்து வழங்கப்பட்டவையாகும். உன்னைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவன் வேறு யாருமில்லை. நான் உன்னிடத்திலே பிழை பொறுக்கத் தேடுகின்றேன். பாவமன்னிப்பும் கோருகின்றேன்.

## மஃரிப் தொழுகை – صَلاَةُ الْمَغْرِب

*ம∴ரிப் தொழுகையின் பின், கீழ்க்காணும் துஆவை ஓதிக் கொள்வது சிறந்ததாகும்.*

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَللَّهُمَّ اِنِّى اَسْئَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ مَغْفِرَتِكَ وَالسَّلاَمَةَ مِنْ كُلِّ اِثْمٍ وَالْغَنِيْمَةَ مِنْ كُلِّ بِرٍّ وَالنَّجَاةَ مِنَ النَّارِ وَمِنْ كُلِّ بَلِيَّةٍ وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالرِّضْوَانَ فِى دَارِ السَّلاَمِ وَجِوَارَ نَبِيِّكَ مُحَمَّدٍ وَآلِهِ عَلَيْهِمُ السَّلاَمُ . اَللَّهُمَّ مَابِنَا مِنْ نِعْمَةٍ فَمِنْكَ لاَ اِلَهَ اِلاَّ اَنْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ .

اَللَّهُمَّ اَجِرْنَا مِنَ النَّارِ سَالِمِيْنَ وَاَدْخِلْنَا الْجَنَّةَ بِسَلاَمٍ آمِنِيْنَ وَتَوَفَّنَا مُسْلِمِيْنَ وَاَلْحِقْنَا بِالصَّالِحِيْنَ بِفَضْلِكَ وَرَحْمَتِكَ ياَاَرْحَمَ الرَّاحِمِيْنَ

.

அல்லாஹ்வே! உனது அருளை அவசியமாக்கக் கூடியதையும், உனது மன்னிப்பை உறுதியாக்கக் கூடியதையும், நரகிலிருந்தும் ஒவ்வொரு சோதனையிலிருந்துமான மீட்சியையும் சுவனத்தின் வெற்றியையும் சாந்தி மிக்க மறுவுலகில் உன் திருப்பொருத்தத்தையும் உனது நபியவர்களுக்குப் பக்கத்திலிருப்பதையும் நான் உன்னிடத்தில் கேட்கிறேன். அல்லாஹ்வே! எம்மிடமுள்ள அருட்கொடைகளெல்லாம் உன்னிடமிருந்து வழங்கப்பட்டவையாகும். உன்னைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவன் வேறு யாருமில்லை. நான் உன்னிடத்திலே பிழை பொறுக்கத் தேடுகின்றேன். பாவமன்னிப்பும் கோருகின்றேன்.

அருளாளர்களிலெல்லாம் மிகச் சிறந்த அருளாளனே! உனது அருளினாலும் சிறப்பினாலும் நரகிலிருந்து ஈடேற்றம் பெற்றவர்களாக எம்மைக் காப்பாயாக. அபயம் பெற்றவர்களாக சாந்தியுடன் சுவனத்தில் எம்மை நுழைவிப்பாயாக. முஸ்லிம்களாக எம்மை மரணிக்கச் செய்து, நல்லடியார்களுடன் எம்மை இணைத்தருள்வாயாக.

## இஷா தொழுகை – صَلاَةُ الْعِشَاءِ

*இஷா தொழுகையின் பின், கீழ்க்காணும் துஆவை ஓதிக் கொள்வது சிறந்ததாகும்.*

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَللَّهُمَّ عَافِنَا مِنْ كُلِّ بَلاَءِ الدُّنْيَا وَاصْرِفَ عَناَّ شَرَّ الدُّنْياَ وَشَرَّ اْلآخِرَةِ وَارْزُقْنَا خَيْرَ الدُّنْيَا وَخَيْرَ اْلآخِرَةِ بِفَضْلِكَ وَرَحْمَتِكَ ياَاَرْحَمَ الرَّاحِمِيْنَ .

اَللَّهُمَّ هَذِهِ صَلاَتِى صَلَّيْتُهَا لاَ لِحَاجَةٍ مِنْكَ اِلَيْهَا وَلاَ رَغْبَةٍ مِنْكَ فِيْهَا اِلاَّ تَعْظِيْمًا وَطَاعَةً وَاِجَابَةً لَكَ اِلَى مَا اَمَرْتَنِى بِهِ اِلَهِى اِنْ كَانَ فِيْهَا خَلَلٌ اَوْ نَقْصٌ مِنْ رُكُوْعِهَا اَوْ سُجُوْدِهَا اَوْ قِيَامِهَا اَوْ قُعُوْدِهَا فَلاَ تُؤَاخِذْنِى وَتَفَضَّلْ عَلَيَّ بِالْقُبُوْلِ وَالْغُفْرَانِ بِرَحْمَتِكَ يَاآَرْحَمَ الرَّاحِمِيْنَ.

அருளாளர்களிலெல்லாம் மிகச் சிறந்த அருளாளனே! அல்லாஹ்வே! துன்யாவின் அனைத்து சோதனைகளிலிருந்தும் எங்களைப் பாதுகாப்பாயாக. இம்மை-மறுமையின் தீங்குகளை எங்களிலிருந்து விலக்கி விடுவாயாக. உனது அருளினாலும் சிறப்பினாலும் இம்மை-மறுமையின் நன்மைகளை எங்களுக்கு வழங்கியருள்வாயாக.
அல்லாஹ்வே! இந்தத் தொழுகையை, உன்னிலிருந்து ஒரு தேவையைப் பெறுவதற்கோ ஆசைவைத்தோ அல்லாமல், உன்னை மகத்துவப்படுத்துவதற்காகவும், உன்னை வழிப்படுவதற்காகவும், நீ எனக்குக் கட்டளையிட்டதற்கு பதிலளிப்பதற்காகவுமே நான் தொழுதேன். என் இறைவனே! இந்தத் தொழுகையின் ருகூஉ, சுஜூது, நிலை, இருப்பு என்பனவற்றில் ஏதேனும் தவறோ குறையோ இருப்பின் நீ என்னைத் தண்டித்து விடாதே. உனது அருளினால் அவற்றை ஏற்று எனக்கு மன்னிப்பளிப்பாயாக அருளாளர்களிலெல்லாம் மிகச் சிறந்த அருளாளனே!

## دُعَاءُ يَوْمِ اْلاِثْنَيْنِ – திங்கட்கிழமை துஆ

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ ِللهِ الَّذِى لَمْ يُشْهِدَ اَحَدًا حِيْنَ فَطَرَ السَّمَاوَاتِ وَاْلاَرْضِ وَلاَ اتَّخَذَ مُعِيْنًا حِيْنَ بَرَأَ النَّسَمَاتِ ، وَلَمْ يُشَارَكْ فِى اْلاِلَهِيَّةِ وَلَمْ يُظَاهَرْ فِى الْوَحْدَانِيَّةِ ، كَلَّتِ اْلاَلْسُنُ عَنْ غَايَةِ صِفَتِهِ وَانْحَسَرَتِ الْعُقُوْلُ عَنْ كُنْهِ مَعْرِفَتِهِ وَتَوَاضَعَتِ الْجَبَابِرَةُ لِهَيْبَتِهِ وَعَنَتِ الْوُجُوْهُ لِخَشْيَتِهِ وَانْقَادَ كُلُّ عَظِيْمٍ لِعَظَمَتِهِ ، فَلَكَ الْحَمْدُ مُتَوَاتِرًا مُتَّسِقًا وَمُتَوَالِيًا مُسْتَوْسِقًا ، وَصَلَوَاتُهُ عَلَى رَسُوْلِهِ اَبَدًا وَسَلاَمُهُ دَائِمًا سَرْمَدًا ، اَللَّهُمَّ اجْعَلْ اَوَّلَ يَوْمِى هَذَا صَلاَحًا وَاَوْسَطَهُ فَلاَحًا وَآخِرَهُ نَجَاحًا وَاَعُوْذُ بِكَ مِنْ يَوْمٍ اَوَّلُهُ فَزَعٌ وَاَوْسَطُهُ جَزَعٌ وَآخِرُهُ وَجَعٌ ، اَللَّهُمَّ اِنِّى اَسْتَغْفِرُكَ لِكُلِّ نَذْرٍ نَذَرْتُهُ وَلِكُلِّ وَعْدٍ وَعَدْتُهُ وَلِكُلِّ عَهْدٍ عَاهَدْتُهُ ثُمَّ لَمْ اَفِ لَكَ بِهِ ، وَاَسْأَلُكَ فِى مَظَالِمِ عِبَادِكَ عِنْدِى فَاَيُّمَا عَبْدٍ مِنْ عَبِيْدِكَ اَوْ اَمَةٍ مِنْ اِمَائِكَ كَانَتْ لَهُ قِبَلِى مَظْلِمَةٌ ظَلَمْتُهَا اِيَّاهُ فِى نَفْسِهِ اَوْ فِى

عِرْضِهِ اَوْ فِى مَالِهِ اَوْ فِى اَهْلِهِ وَوَلَدِهِ اَوْ غَيْبَةٌ نِ اغْتَبْتُهُ بِهَا اَوْ

تَحَامُّل عَلَيْهِ بِمَيْلٍ اَوْ هَوَى اَوْ اَنَفَةٍ اَوْ حَمِيَّةٍ اَوْ رِيَاءٍ اَوْ عَصَبِيَّةٍ

غَائِبًا كَانَ اَوْ شَاهِدًا وَحَيًّا كَانَ اَوْ مَيِّتًا فَقَصُرَتْ يَدِى وَضَاقَ

وُسْعِى عَنْ رَدِّهَا اِلَيْهِ وَالتَّحَلُّلِ مِنْهَ ، فَاَسْئَلُكَ يَا مَنْ يَمْلِكُ

الْحَاجَاتِ وَهِيَ مُسْتَجِيْبَةٌ بِمَشِيْتِهِ وَمُسْرِعَةٌ اِلَى اِرَادَتِهِ اَنْ تُصَلِّيَ

عَلَى مُحَمَّدٍ وَآلِ مُحَمَّدٍ وَاَنْ تُرْضِيَهُ عَنِّى بِمَا شِئْتَ وَتَهَبَ لِى مِنْ

عِنْدِكَ رَحْمَةً اِنَّهُ لاَ تَـنْـقُصُكَ الْمَغْفِرَةُ وَلاَ تَضُرُّكَ الْمَوْهِبَةُ يَا

اَرْحَمَ الرَّاحِمِيْنَ ، اَللَّهُمَّ اَوْلِنِى فِى كُلِّ يَوْمٍ اثْنَيْنِ نِعْمَتَيْنِ مِنْكَ

ثِنْتَيْنِ سَعَادَةً فِى اَوَّلِهِ بِطَاعَتِكَ وَنِعْمَةً فِى آخِرِهِ بِمَغْفِرَتِكَ يَا مَنْ

هُوَ اْلاِلَهُ وَلاَ يَغْفِرُ الذُّنُوْبَ سِوَاهُ .

1. அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்த போது சாட்சிக்கு யாரையும் அழைக்காதவன். சிருஷ்டிகளை உருவாக்கிய போது யாரின் உதவியையும் பெறாதவன். 2. தன் இறைமையில் சமமாக யாரையும் கொள்ளாதவன். ஏகத்துவத்தில் ஈடில்லாதவன். 3. அவனை வர்ணிக்கச் சென்ற நாவுகள் களைப்படைந்ததுதான் மிச்சம். அவனைப் புரிந்து கொள்ள முடியாமல் சிந்தனைகள் திக்குமுக்காடுகின்றன. அவனது ராஜகம்பீரத்துக்கு முன்னால் எல்லா எதேச்சாதிகாரிகளும் மண்டியிடுகின்றனர். அவனது உச்சத்தால் முகங்கள் கவிழ்கின்றன. அவனுடைய மகத்துவத்தின் முன்னால் எல்லா மகத்துவங்களும் தலை பணிகின்றன. 4. நிலையான, இடைவிடாத, பூரணமான அனைத்துப் புகழும் உனக்கு மட்டுமே உரித்தானவை. 5. அவனது

சாந்தியும் ஆசியும் அவனது தூதர் மீது நித்தமும் எப்பொழுதும் உண்டாவதாக. 6. இன்றைய தினத்தின் ஆரம்பத்தை எனக்குச் சிறந்ததாகவும், மத்தியானத்தை வெற்றிகரமானதாகவும், இறுதியை ஈடேற்றம் கொண்டதாகவும் ஆக்கிக் கொடு. ஆரம்பமே திடுக்கமும், மத்தியானத்தில் நஷ்டமும், இறுதியில் கலக்கமும் வருகின்ற நாளை விட்டும் உன்னிடம் காவல் தேடுகின்றேன். 7. இறைவா! உனக்காக நான் வைத்த நேர்ச்சைகள், நான் உனக்கு அளித்த வாக்குகள், நான் உன்னோடு செய்த ஒப்பந்தங்கள் ஆகியவற்றில் நான் நிறைவேற்றாமல் விட்டவற்றுக்கு உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன். 8. மேலும் உன் அடியார்களுக்கு நான் செய்த தப்புகள், ஆண், பெண் வேறுபாடின்றி, என்னால் அவருக்கோ, அவரது மரியாதைக்கோ, அவரது செல்வத்துக்கோ, அவரது குடும்பத்துக்கோ, பிள்ளைகளுக்கோ அநியாயம் நடந்திருந்தால், அல்லது அவர் பற்றி புறம் பேசியிருந்தால், பேராசையால் அத்துமீறி நடந்திருந்தால் அல்லது பெருமையால், துவேசத்தால், வெறியால், பிடிவாதத்தால், அவர் இருக்கும் போதும், இல்லாத போதும், வாழுகின்ற போதும், மரணித்த பிறகும் என் கையால் நடந்த தப்புகளை மன்னித்து விடுவாயாக. தற்போது எனது வசதிகள் குறைந்து விட்டன. அவற்றை ஈடு செய்யும் அளவுக்கு என் நிலைமையும் இல்லை. அதனால் அவர்களின் மன்னிப்பைப் பெற்றுத் தருவாயாக. 9. தேட்டங்களையெல்லாம் தன் கையில் கொண்ட இறைவா! உன்னிடத்தில் நாம் கேட்கிறோம். உன் நாட்டப்படிதான் அவை நிறைவேறலாம். உன் திட்டமிருந்தால் அவசரமாக நிகழலாம். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது திருக்குடும்பத்தார் மீதும் ஸலவாத் கூறுவாயாக. என் தப்புகளுக்குப் பகரமாக நீ விரும்பிய விதத்தில் அவரை மகிழ்விப்பாயாக. உன்னுடைய றஹ்மத்தை எனக்கு அள்ளிக் கொடுப்பாயாக. கருணையாளர்களில் பெரியோனே! மன்னிப்பதால் உன்னிடம் குறைவு ஏற்படாது. அள்ளிக் கொடுப்பதால் உனக்கு நஷ்டம் வருவதில்லை. 10. அல்லாஹ்வே! ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் எனக்கு இரண்டு நிஃமத்துகளை வழங்குவாயாக. முதலாவது, நாளின் ஆரம்பத்தில் உன்னைப் பணிந்து நடக்கும் பாக்கியத்தைத் தா. இரண்டாவது, நாளின் முடிவில் உன்னுடைய மன்னிப்பைக் கொடு. பாவத்தை மன்னிக்கும் இறைவன் உன்னையன்றி யாரும் இல்லையே.

## செவ்வாய்க்கிழமை துஆ – دُعَاءُ يَوْمِ الثُّلاثَاء

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلّٰهِ وَالْحَمْدُ حَقُّهُ كَمَا يَسْتَحِقُّهُ حَمْدًا كَثِيْرًا ، وَاَعُوْذُ بِهِ مِنْ شَرِّ نَفْسِى اِنَّ النَّفْسَ لَأَمَّارَةٌ بِالسُّوْءِ اِلاَّ مَارَحِمَ رَبِّى ، وَاَعُوْذُ بِهِ مِنْ شَرِّ الشَّيْطَانِ الَّذِى يَزِيْدُنِى ذَنْبًا اِلَى ذَنْبِى ، وَاَحْتَرِزُ بِهِ مِنْ كُلِّ جَبَّارٍ فَاجِرٍ وَسُلْطَانٍ جَائِرٍ وَعَدُوٍّ قَاهِرٍ ، اَللَّهُمَّ اجْعَلْنِى مِنْ جُنْدِكَ فَاِنَّ جُنْدَكَ هُمُ الْغَالِبُوْنَ وَاجْعَلْنِى مِنْ حِزْبِكَ فَاِنَّ حِزْبَكَ هُمُ الْمُفْلِحُوْنَ وَاجْعَلْنِى مِنْ اَوْلِيَائِكَ فَاِنَّ اَوْلِيَائَكَ لاَخَوْفٌ عَلَيْهِمْ وَلاَهُمْ يَحْزَنُوْنَ ، اَللَّهُمَّ اَصْلِحْ لِى دِيْنِى فَاِنَّهُ عِصْمَةُ اَمْرِى وَاَصْلِحْ لِى آخِرَتِى فَاِنَّهَا دَارُ مَقَرِّى وَاِلَيْهَا مِنْ مُجَاوَرَةِ اللِّئَامِ مَفَرِّى وَاجْعَلِ الْحَيَاةَ زِيَادَةً لِى فِى كُلِّ خَيْرٍ وَالْوَفَاةَ رَاحَةً لِى مِنْ كُلِّ شَرٍّ ، اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ خَاتَمِ النَّبِيِّيْنَ وَتَمَامِ عِدَّةِ الْمُرْسَلِيْنَ وَعَلَى آلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ وَاَصْحَابِهِ الْمُنْتَجَبِيْنَ وَهَبْ لِى فِى الثُّلَثَاءِ ثَلاَثًا ، لاَتَدَعْ لِى ذَنْبًا اِلاَّ

غَفَرْتَهُ وَلاَ غَمًّا اِلاَّ اَذْهَبْتَهُ وَلاَ عَدُوًّا اِلاَّ دَفَعْتَهُ بِبِسْمِ اللهِ خَيْرِ الْاَسْمَاءِ بِسْمِ اللهِ رَبِّ الْاَرْضِ وَالسَّمَاءِ ، اَسْتَدْفِعُ كُلَّ مَكْرُوْهٍ اَوَّلُهُ سَخَطُهُ وَاَسْتَجْلِبُ كُلَّ مَحْبُوْبٍ اَوَّلُهُ رِضَاهُ ، فَاخْتِمْ لِى مِنْكَ بِالْغُفْرَانِ يَا وَلِيَّ الْاِحْسَانِ .

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். புகழ் அவனுக்கு மட்டும் சொந்தமானது. அளவிலா புகழுக்கு அவன் உரியவன். 2. என் ஆத்மாவில் இருந்து அவனிடத்தில் காவல் தேடுகின்றேன். நிச்சயமாக மனோ இச்சை, ஆத்மா, எனது இரட்சகன் அருள் புரிந்ததைத் தவிர, தீமையின் பக்கமே ஈர்க்கப்படக் கூடியதாகும். 3. என் பாவத்துக்கு மேலும் பாவத்தைக் கூட்டி விடுகின்ற சைத்தானை விட்டும் உன்னிடம் காவல் தேடுகின்றேன். துர்நடத்தையுள்ள கொடுங்கோலன், நீதி மறந்த ஆட்சியாளன், இரக்கமற்ற பலமான எதிரி ஆகியோரின் தீங்கில் இருந்தும் பாதுகாக்கக் கோருகின்றேன். 4. இறைவா, என்னை உன்னுடைய படையைச் சேர்ந்தவனாக ஆக்கி விடுவாயாக. ஏனெனில், உனது படையே ஜெயிக்கின்றது. என்னை உனது கட்சிக்காரனாக ஆக்கிக் கொள். ஏனெனில், உனது கட்சியே வெற்றி பெறுகின்றது. என்னை உன் நேசர்களில் சேர்த்து விடு. ஏனெனில் உன் நேசர்கள் அச்சமோ கவலையோ இல்லாதவர்கள். 6. மார்க்க விடயத்தில் என்னைச சீர்திருத்துவாயாக. ஏனெனில் எனக்கிருக்கும் ஒரேயொரு பாதுகாப்பு அதுதான். என்னுடைய மறுமை வாழ்வையும் சீர்படுத்தித் தருவாயாக. எனது நிரந்தர வதிவிடம் அதுதான். பேதைகளின் சகவாசத்தில் இருந்து நான் ஓடிச் செல்லுமிடம் அதுதான். எல்லா நற்காரியங்குக்காகவும் என் வாழ்நாளை நீடிப்பாயாக. என் மரணத்தை தீங்குகளில் இருந்து விடுதலையாக அமைத்துக் கொடு. 7. இறைவா, உன்னுடைய திரு நபி மீதும் மொத்தமாக எல்லா தூதர்கள் மீதும் பரிசுத்தவான்களான அன்னாரின் திருக்குடும்பத்தினர், தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது தோழர்கள் மீதும் ஸலவாத் ஓதுவாயாக. செவ்வாய்க்கிழமையில் எனக்கு மூன்று விடயங்களைத் தருவாயாக. 8. இந்நாளில் மன்னிக்காத எந்தக் குற்றத்தையும் விட்டு வைக்காதே. எந்தக் கவலையையும் நீக்காமல்

வைக்காதே. எந்தவொரு எதிரியையும் என்னை விட்டுத் தடுக்காமல் விடாதே. பெயர்களில் சிறந்ததான அல்லாஹ்வின் திருப்பெயரால், வானங்களினதும் பூமியினதும் இரட்சகனான அல்லாஹ்வின் திருப்பெயரால் உன்னிடம் வேண்டுகிறேன். 9. எந்தவித ஆபத்தும் வராமல் தடுக்குமாறு உன்னிடம் கோருகிறேன். அதில் முதலாவது, உன்னுடைய கோபம் ஆகும். உன் விருப்பத்துக்குரிய எல்லாவற்றையும் தருமாறு கோருகிறேன். அதில் முதலாவது, உன் திருப்தியாகும். 10. நற்பேறுகளின் அதிபதியே, இறுதியில் எல்லாவற்றையும் மன்னிப்பைக் கொண்டு பூர்த்தியாக்கி வைப்பாயாக.

## புதன்கிழமை துஆ – دُعَاءُ يَوْمِ الاَرْبِعَاء

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِى جَعَلَ اللَّيْلَ لِبَاسًا وَالنَّوْمَ سُبَاتًا وَجَعَلَ النَّهَارَ نُشُوْرًا ، لَكَ الْحَمْدُ اَنْ بَعَثْتَنِى مِنْ مَرْقَدِى وَلَوْ شِئْتَ جَعَلْتَهُ سَرْمَدًا حَمْدًا دَائِمًا لاَ يَنْقَطِعُ اَبَدًا وَلاَ يُحْصِى لَهُ الْخَلاَئِقُ عَدَدًا ، اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ اَنْ خَلَقْتَ فَسَوَّيْتَ وَقَدَّرْتَ وَقَضَيْتَ وَاَمَتَّ وَاَحْيَيْتَ وَاَمْرَضْتَ وَشَفَيْتَ وَعَافَيْتَ وَاَبْلَيْتَ وَعَلَى الْعَرْشِ اسْتَوَيْتَ وَعَلَى الْمُلْكِ احْتَوَيْتَ ، اَدْعُوْكَ دُعَاءَ مَنْ ضَعُفَتْ وَسِيْلَتُهُ وَانْقَطَعَتْ حِيْلَتُهُ وَاقْتَرَبَ اَجَلُهُ وَتَدَانَى فِى الدُّنْيَا اَمَلُهُ وَاشْتَدَّتْ اِلَى رَحْمَتِكَ فَاقَتُهُ وَعَظُمَتْ لِتَفْرِيطِهِ حَسْرَتُهُ وَكَثُرَتْ زَلَّتُهُ وَعَثْرَتُهُ وَخَلُصَتْ لِوَجْهِكَ تَوْبَتُهُ ، فَصَلِّ

عَلَى مُحَمَّدٍ خَاتَمِ النَّبِيِّيْنَ وَعَلَى اَهْلِ بَيْتِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ

وَارْزُقْنِى شَفَاعَةَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَلاَ تَحْرِمْنِى صُحْبَتَهُ

اِنَّكَ اَنْتَ اَرْحَمُ الرَّاحِمِيْنَ ، اَللَّهُمَّ اقْضِ لِى فِى الْاَرْبَعَاءِ اَرْبَعًا

اِجْعَلْ قُوَّتِى فِى طَاعَتِكَ وَنَشَاطِى فِى عِبَادَتِكَ وَرَغْبَتِى فِى

ثَوَابِكَ وَزُهْدِى فِيْمَا يُوْجِبُ لِى اَلِيْمَ عِقَابِكَ اِنَّكَ لَطِيْفٌ لِمَا تَشَاءُ .

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரியது. அவன் இரவை ஆடையாக்கினான். தூக்கத்தை உற்சாகம் தருவதாக ஆக்கினான். பகலை ஜீவனோபாயத்துக்காப் பரந்து செல்லும் நேரமாக அமைத்துத் தந்தான். 2. என்னைத் தூக்கத்தில் இருந்து எழுப்பி விட்ட உனக்கே புகழ் அனைத்தும். நீ விரும்பியிருந்தால் அதனை நிரந்தர தூக்கமாகவே ஆக்கியிருக்கலாம். என்றும் இடைவிடாததும் படைப்பினங்களால் எண்ணிக் கணக்கிட முடியாததுமான புகழ் உன் மீது உண்டாகட்டும். 3. அல்லாஹ்வே புகழ் உனக்கேயுரியது. நீ படைத்தாய், வடிவமைத்தாய், தலைவிதியை நிர்ணயித்தாய், மரணிக்கச் செய்தாய், வாழ்வு கொடுத்தாய், நோயைக் கொடுத்தாய், சுகத்தையும் வழங்கினாய், சோதனையைக் கொடுத்தாய், இன்பத்தையும் தந்தாய். அர்சின் மீது ஸ்திரமானாய். அனைத்தின் ஆட்சியையும் சூழ்ந்து கொண்டாய். 4. தன் சாதனங்கள் வலுவிழந்த ஓர் அடியான் போல் உன்னிடம் கோருகிறேன். அவனுடைய திட்டங்களும் பாழாகி விட்டன. அவனது முடிவு நெருங்கி விட்டது. இம்மையில் அவன் ஆசையெல்லாம் முடிவுக்கு வந்து விட்டன. உன்னுடைய றஹ்மத்தின் மீதான தேவை வலுவடைந்து விட்டது. தன் அடங்காமையினால் ஏற்பட்ட நஷ்டம் அதிகமாகி விட்டது. தப்புகளும் குற்றங்களும் மிகைத்து விட்டன. உளத்தூய்மையோடு உன்னிடம் பாவமீட்சி கோருகின்றான். 5. நபிமார்கள் வரிசையில் இறுதித் தூதரான முஹம்மத் அவர்கள் மீதும் பரிசுத்தவான்களான அவரது குடும்பத்தினர் மீதும் ஸலவாத் உண்டாவதாக. திருத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களின் ஷபாஅத்தை

எனக்குப் பெற்றுத் தருவாயாக. அவரது நெருக்கத்தை எனக்குத் தடுத்து விடாதே. நீ நிச்சயமாகவே கருணை புரிபவர்களில் மிகவும் கருணையாளன். 6. புதன் கிழமையில் எனக்கு நான்கு விடயத்தைத் தருவாயாக. உன்னைப் பணிந்து நடப்பதற்கு எனக்கு வலிமையைத் தருவாயாக. உன்னை வணங்குவதில் உற்சாகத்தைத் தருவாயாக. உன்னுடை நற்பேறுகளில் ஆவல் கொண்டவனாக ஆக்குவாயாக. உனது தண்டனையைத் தரும் விடயங்களில் எந்தப் பற்றும் அற்றவனாக ஆக்கு. நீயோ விரும்பியவாறு இரக்கம் காட்டுகிறாய்.

## வியாழக்கிழமை துஆ – دُعَاءُ يَوْمِ الْخَمِيس

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِى اَذْهَبَ اللَّيْلَ مُظْلِمًا بِقُدْرَتِهِ وَجَاءَ بِالنَّهَارِ مُبْصِرًا بِرَحْمَتِهِ وكَسَانِى ضِيَاءَهُ وَآتَانِى نِعْمَتَهُ ، اَللَّهُمَّ فَكَمَا اَبْقَيْتَنِى لَهُ فَاَبْقِنِى لِأَمْثَالِهِ وَصَلِّ عَلَى النَّبِيِّ مُحَمَّدٍ وَآلِهِ وَلاَ تَـفْجَعْنِى فِيْهِ وَفِى غَيْرِهِ مِنَ اللَّيَالِى وَالْأَيَّامِ بِارْتِكَابِ الْمَحَارِمِ وَاكْتِسَابِ الْمَآثِمِ وَارْزُقْنِى خَيْرَهُ وَخَيْرَ مَا فِيْهِ وَخَيْرَ مَا بَعْدَهُ وَاصْرِفْ عَنِّى شَرَّهُ وَشَرَّ مَافِيْهِ وَشَرَّ مَا بَعْدَهُ ، اَللَّهُمَّ اِنِّى بِذِمَّةِ الْاِسْلاَمِ اَتَوَسَّلُ اِلَيْكَ وبِحُرْمَةِ الْقُرْآنِ اَعْتَمِدُ عَلَيْكَ وَبِمُحَمَّدِ نِ الْمُصْطَفَى صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ اَسْتَشْفِعُ لَدَيْكَ فَاعْرِفِ اللَّهُمَّ ذِمَّتِى الَّتِى رَجَوْتُ بِهَا قَضَاءَ حَاجَتِى يَااَرْحَمَ الرَّاحِمِيْنَ ، اَللَّهُمَّ اقْضِ لِى فِى الْخَمِيْسِ خَمْسًا لاَ يَتَّسِعُ لَهَا اِلاَّ كَرَمُكَ وَلاَ

يُطِيْقُهَا اِلاَّ نعمُكَ سَلاَمَةً اَقْوَى بِهَا عَلَى طَاعَتِكَ وَعِبَادَةً اَسْتَحِقُّ

بِهَا جَزِيْلَ مَثُوْبَتِكَ وَسَعَةً فِى الْحَالِ مِنَ الرِّزْقِ الْحَلاَلِ وَاَنْ

تُؤْمِنَنِى فِى مَوَاقِفِ الْخَوْفِ بِاَمْنِكَ وَتَجْعَلَنِى مِنْ طَوَارِقِ الْهُمُوْمِ

وَالْغُمُوْمِ فِى حِصْنِكَ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَآلِهِ وَاجْعَلْ تَوَسُّلِى بِهِ

شَافِعًا يَوْمَ الْقِيَامَةِ نَافِعًا اِنَّكَ اَنْتَ اَرْحَمُ الرَّاحِمِيْنَ .

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரித்தானது. இருண்ட இரவை தன் வல்லமையால் அனுப்பி விட்டான். தன் அருட்கொடைகளைச் சுமந்ததாக பகற் காலம் விடிந்துள்ளது. அதன் கொடைகளை எனக்கும் தந்தான். 2. இந்த நாளை அடையும் வரை என்னை நிலைபெறச் செய்திருந்தது போல இது போன்ற இன்னும் பல நாட்களுக்கு என்னை வைத்திரு. திரு நபி முஹம்மத் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் ஸலவாத் ஓதுவாயாக. இந்நாளிலும் ஏனைய இரவுகளிலும் பகற்களிலும் தடுக்கப்பட்டவற்றைச செய்தும் பாவங்களைச் சம்பாதித்தும் வருத்தத்தை வாங்கிக் கொண்ட நிலையை ஏற்படுத்தி விடாதே. இந்த நாளின் நலவையும் இதில் உள்ள நலவையும் இதற்குப் பிறகு வரும் நாளிலுள்ள நலவையும் எனக்குத் தருவாயாக. இந்த நாளின் தீங்கையும் இதில் உள்ள தீங்கையும் இதன் பிறகுள்ள நாளின் தீங்கையும் அகற்றி விடு. 3. அல்லாஹ்வே, இஸ்லாத்தின் பிணைப்பினை வைத்து நான் உன்னிடம் கோருகிறேன். குருஆனின் சங்கையின் பொருட்டால் நான் உன் மீது அசையாத நம்பிக்கை வைக்கிறேன். நபி முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களைக் கொண்டே உன்னிடம் ஷபாஅத்துக் கோருகிறேன். என்னுடைய நாட்டங்களை நிறைவேற்றித் தருவாயாக. கருணையாளர்களில் மிகக் கருணை காட்டுபவனே. 4. வியாழக்கிழமை தினத்தில் ஐனக்கு ஐந்து விடயங்களைக் கொடு. அவற்றை உன்னுடைய கொடைச்சிறப்பாலேயே வழங்க முடியும். உன் நிஃமத்தால் மாத்திரமே அது நிலைத்திருக்க முடியும். உன்னைப் பணிவதற்குப் போதிய பலமுள்ள சரீர சுகம், உன்னுடைய வற்றாத

தவாபுகளைப் பெற அருகதையான இபாதத், மிக விசாலமான ஹலாலான றிஸ்கின் தாராளம், அச்சமுள்ள கட்டங்களில் உன்னுடைய தைரியமும் பாதுகாப்பும், துன்பங்கள் மற்றும் கவலைகளில் இருந்து பாதுகாக்கின்ற அரண் என்பவற்றையே இந்நாளில் வேண்டுகிறேன். திருத்தூதர் முஹம்மத் அவர்கள் மீதும் அன்னாரது திருக்குடும்பத்தார் மீதும் ஸலவாத் உண்டாவதாக. அவரை முன்னிறுத்தி நான் பிரார்த்திக்கும் போது அவரை ஷபாஅத் செய்பவராகவும் மறுமையில் பலன தரக்கூடியதாகவும் ஏற்றுக் கொள். நிச்சயமாக நீ கருணையாளர்களில் மிகக் கருணையாளன்.

## வெள்ளிக்கிழமை துஆ – دُعَاءُ يَوْمِ الْجُمُعَةِ

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيْمِ . اَلْحَمْدُ للهِ الاَوَّلِ قَبْلَ الاِنْشَاءِ وَالاِحْيَاءِ وَالآخِرِ بَعْدَ فَنَاءِ الاَشْيَاءِ الْعَلِيْمِ الَّذِى لاَيَنْسَى مَنْ ذَكَرَهُ وَلاَيَــنْقُصُ مَنْ شَكَرَهُ وَلاَ يُخَيِّبُ مَنْ دَعَاهُ وَلاَ يَقْطَعُ رَجَاءَ مَنْ رَجَاهُ ، اَللَّهُمَّ اِنِّى اُشْهِدُكَ وَكَفَى بِكَ شَهِيْدًا وَاُشْهِدُ جَمِيْعَ مَلاَئِكَتِكَ وَسُكَّانَ سَمَاوَاتِكَ وَحَمَلَةَ عَرْشِكَ وَمَنْ بَعَثْتَ مِنْ اَنْبِيَائِكَ وَرُسُلِكَ وَاَنْشَأْتَ مِنْ اَصْنَافِ خَلْقِكَ اَنِّى اَشْهَدُ اَنَّكَ اَنْتَ اللهُ لاَ اِلَهَ اِلاَّ اَنْتَ وَحْدَكَ لاَشَرِيْكَ لَكَ وَلاَ عَدِيْلَ وَلاَ خُلْفَ لِقَوْلِكَ وَلاَ تَبْدِيْلَ وَاَنَّ مُحَمَّدًا صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ عَبْدُكَ وَرَسُوْلُكَ اَدَّى مَا حَمَّلْتَهُ اِلَى الْعِبَادِ وَجَاهَدَ فِى اللهِ حَقَّ الْجِهَادِ

وَاَنَّهُ بَشَّرَ بِمَا هُوَ حَقٌّ مِنَ الثَّوَابِ وَاَنْذَرَ بِمَا هُوَ صِدْقٌ مِنَ الْعِقَابِ ، اَللَّهُمَّ ثَبِّتْنِى عَلَى دِيْنِكَ مَا اَحْيَيْتَنِى وَلاَ تُزِغْ قَلْبِى بَعْدَ اِذْ هَدَيْتَنِى وَهَبْ لِى مِنْ لَدُنْكَ رَحْمَةً اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَآلِ مُحَمَّدٍ وَاجْعَلْنِى مِنْ اَتْبَاعِهِ وَشِيْعَتِهِ وَاحْشُرْنِى فِى زُمْرَتِهِ وَوَفِّقْنِى لأَدَاءِ فَرْضِ الْجُمُعَاتِ وَمَا اَوْجَبْتَ عَلَيَّ فِيْهَا مِنَ الطَّاعَاتِ وَقَسَمْتَ لأَهْلِهَا مِنَ الْعَطَاءِ فِى يَوْمِ الْجَزَاءِ اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ .

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன. அவனே ஆரம்பமானவன், சிருஷ்டிகளைப் படைத்து உயிர் கொடுக்க முன்னரே இருப்பவன். அவன் இறுதியானவன். எல்லாமே அழிந்து விட்ட பிறகும் எஞ்சியுள்ளவன். அவன் அறிந்து வைத்துள்ளவன். அவனை ஞாபகம் செய்தவரை அவன மறக்க மாட்டான். அவனுக்கு நன்றி சொல்பவருக்கு குறைவைக்காதவன். அவனை அழைப்பவரை நிராசையாக்கி விடாதனவன். அவன் மீது ஆவல் கொண்டவரை துண்டித்து விடாதன். 2. இறைவா, நான் உன்னை சாட்சியாகக் கொள்கிறேன். உனது சாட்சி போதுமானது. உன்னுடைய மலக்குகள் அனைவரையும் விண்ணுலகவாசிகளையும் அர்சைச் சுமப்போரையும் உன்னுடைய எல்லா நபிமார்களையும் றசூல்மார்களையும் விதம் விதமாக நீ உருவாக்கிய படைப்பினங்களையும் சாட்சியாகக் கொண்டு கூறுகிறேன். நீதான் அல்லாஹ். உன்னைத் தவிர கடவுள் கிடையாது. நீ தனித்த ஏகன். உனக்கு இணையாகவோ சமமாகவோ யாரும் கிடையாது. உன்னுடைய வார்த்தைகளில் பின்னடைவோ மாற்றமோ வருவதில்லை. நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி, உன்னுடைய அடியாரும் தூதரும் ஆவார். அடியாருக்கென நீ வழங்கிய பொறுப்பை அவர் செவ்வனே நிறைவேற்றினார்.

அல்லாஹ்வுக்காக முறையான விதத்தில் ஜிஹாத் புரிந்தார். நன்மையைத் தேடித் தருபவை பற்றி அவர் நற்செய்தி கூறினார். தண்டனையைப் பெற்றுத் தருபவை பற்றி எச்சரிகை விடுத்தார். 3. நான் உயிர் வாழ்கின்ற காலமெல்லாம் உன்னுடைய மார்க்கத்தில் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக. எனக்கு நேர்வழி காட்டிய பிறகு எனது மனதைக் குழப்பி விடாதே. உன்னிடமிருந்து கருணையை நமக்குத் தருவாயாக. நீயே கொடையாளன். திரு நபி முஹம்மத் மீதும் அவரது திருக்குடும்பத்தினர் மீதும் ஸலவாத் பொழியட்டும். அன்னாரைப் பின்பற்றுபவராகவும் அவரது கூட்டத்தில் இணைந்தவராகவும் செய்து விடு. அவர்களுடைய கூட்டத்தோடு சேர்த்தே என்னையும் எழுப்புவாயாக. ஜும்ஆ தினத்தின் கடமைகளையும் அந்தத் தினத்துக்கென நீ விதித்த நடைமுறைகளையும் நிறைவேற்றும் பாக்கியத்தையும் இந்நாளை அடைந்தோருக்கு மறுமையில் கொடுக்கவுள்ள சிறப்புகளையும் கொடுப்பாயாக. நீ கண்ணியமுள்ளவன். ஞானவான்.

## சனிக்கிழமை துஆ – دُعَاءُ يَوْمِ السَّبْتِ

بِسْمِ اللهِ كَلِمَةِ الْمُعْتَصِمِيْنَ وَمَقَالَةِ الْمُتَحَرِّزِيْنَ وَاَعُوْذُ بِاللهِ تَعَالَى
مِنْ جَوْرِ الْجَائِرِيْنَ وَكَيْدِ الْحَاسِدِيْنَ وَبَغْيِ الظَّالِمِيْنَ وَاَحْمَدُهُ فَوْقَ
حَمْدِ الْحَامِدِيْنَ ، اَللَّهُمَّ اَنْتَ الْوَاحِدُ بِلاَ شَرِيْكَ وَالْمَلِكُ بِلاَ تَمْلِيْكٍ
لاَ تُضَادُّ فِى حُكْمِكَ وَلاُ تُنَازَعُ فِى مُلْكِكَ ، اَسْئَلُكَ اَنْ تُصَلِّي
عَلَى مُحَمَّدٍ وَآلِهِ عَبْدُكَ وَرَسُوْلُكَ وَاَنْ تُوْزِعَنِى مِنْ شُكْرِ نَعْمَاكَ
مَا تَبْلُغُ بِى غَايَةَ رِضَاكَ وَاَنْ تُعِيْنَنِى عَلَى طَاعَتِكَ وَلُزُوْمِ عِبَادَتِكَ
وَاسْتِحْقَاقِ مَثُوبَتِكَ بِلُطْفِ عِنَايَتِكَ وَتَرْحَمَنِى وَتَصُدَّنِى عَنْ

مَعَاصِيْكَ مَا اَحْيَيْتَنِى وَتُوَفِّقَنِى لِمَا يَنْفَعُنِى مَا اَبْـقَـيْتَـنِى وَاَنْ تَشْرَحَ بِكِتَابِكَ صَدْرِى وَتَحُطَّ بِتِلاَوَتِهِ وِزْرِى وَتَمْنَحَنِى السَّلاَمَةَ فِى دِيْنِى وَنَفْسِى وَلاَ تُوْحِشَ بِى اَهْلَ اُنْسِى وَتُـتِمَّ اِحْسَانَكَ فِيْمَا بَقِيَ مِنْ عُمْرِى كَمَا اَحْسَنْتَ فِيْمَا مَضَى مِنْهَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ .

1. பாவங்களில் இருந்து பரிசுத்தம் அடைந்தவர்களின் சுலோகமும் தாய்மையான நல்லோர் நிதமும் சொல்லும் வார்த்தையுமான 'அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன்'. 2. கொடூரர்களின் கொடுமையில் இருந்தும் பொறாமைக்காரர்களின் சதியில் இருந்தும் அநியாயக்காரரின் அத்துமீறலில் இருந்தும் உன்னிடம் காவல் தேடுகின்றேன். புகழ்வோரின் புகழையெல்லாம் மிகைத்ததாக உன்னைப் புகழ்கிறேன். 3. இறைவா, நீ தனித்தவன், துணையில்லாதவன். நீ அரசன், எதையும் உரிமையாக்கிக் கொள்ளும் அவசியம் இல்லாதவன். உன் ஆட்சியில் யாரும் போரிட முடியாது. 3. முஹம்மது நபி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் ஸலவாத் கூறுவாயாக. உன்னுடைய உச்ச திருப்தியைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் உன்னுடைய நிஃமத்துகளுக்கு நன்றி சொல்லும் சந்தர்ப்பத்தை எனக்குத் தா. உன்னைப் பணிவதில் எனக்கு உதவி செய். உனது அடிமையாகவே வாழ்வதற்கும் உன்னுடைய கனிவான கரிசனையின் விளைவாக உன்னிடமுள்ள நற்கூலியைப் பெறத் தகுதியுள்ளவனாக மாறுவதற்கும் உதவி செய். எனக்கு அருள் புரிந்து வாழ்நாளில் பாவச் செயல்களில் இருந்து எனக்கு பாதுகாப்பையும் வழங்குவாயாக. நான் இருக்கும் காலமெல்லாம் எனக்குப் பிரயோசனமுள்ள விடயங்களில் சித்தியைத் தருவாயாக. உன் வேதத்தைக் கொண்டு என்னுடைய நெஞ்சத்தை விசாலமாக்கி விடுவாயாக. அதனை ஓதுவதன் மூலம் என்னுடைய பாவச்சுமையை நீக்குவாயாக. என்னுடைய நப்ஸுக்கும் மார்க்க விவகாரங்களிலும் ஸலாமத்தைத் தருவாயாக. என்னோடு சகவாசம்

வைத்திருப்பவர்களுக்கு அச்சுறுத்தலாக என்னை ஆக்காதே. கடந்த காலங்களில் எனக்கு நன்மையே செய்தது போல எஞ்சியிருக்கும் என் வாழ்நாளிலும் உன்னுடைய பேறுகளை பரிபூரணமாக்கித் தருவாயாக. கருணையாளர்களில் மிகக் கருணையாளனே.

## ஞாயிற்றுக்கிழமை துஆ – دُعَاءُ يَوْمِ الاَحَدِ

بِسْمِ اللهِ الَّذِى لاَ اَرْجُو اِلاَّ فَضْلَهُ وَلاَ اَخْشَى اِلاَّ عَدْلَهُ وَلاَ اَعْتَمِدُ اِلاَّ قَوْلَهُ وَلاَ اَتَمَسَّكُ اِلاَّ بِحَبْلِهِ ، بِكَ اَسْتَجِيْرُ يَاذَا الْعَفْوِ وَالرِّضْوَانِ مِنَ الظُّلْمِ وَالْعُدْوَانِ وَمِنْ غِيَرِ الزَّمَانِ وَتَوَاتُرِ اْلاَحْزَانِ وَمِنْ طَوَارِقِ الْحَدَثَانِ وَمِن انْـقِضَآءِ الْمُدَّةِ قَبْلَ التَّأَهُّبِ وَالْعُدَّةِ ، وَاِيَّاكَ اَسْتَرْشِدُ لِمَا فِيْهِ الصَّلاَحُ وَاْلاِصْلاَحُ ، وَبِكَ اَسْتَعِيْنُ فِيمَا يَقْتَرِنُ بِهِ النَّجَاحُ وَاْلاِنْجَاحُ ، وَاِيَّاكَ اَرْغَبُ فِى لِبَاسِ الْعَافِيَةِ وَتَمَامِهَا وَشُمُولِ السَّلاَمَةِ وَدَوَامِهَا وَاَعُوذُ بِكَ يَارَبِّ مِنْ هَمَزَاتِ الشَّيَاطِيْنِ وَاَحْتَرِزُ بِسُلْطَانِكَ مِنْ جَوْرِ السَّلاَطِيْنِ فَتَقَبَّلْ مَا كَانَ مِنْ صَلاَتِى وَصَوْمِى وَاجْعَلْ غَدِى وَمَا بَعْدَهُ اَفْضَلَ مِنْ سَاعَتِى وَيَوْمِى وَاَعِزَّنِى فِى عَشِيْرَتِى وَقَوْمِى وَاحْفَظْنِى فِى يَقْظَتِى وَنَوْمِى فَاَنْتَ اللهُ خَيْرٌ حَافِظًا وَاَنْتَ اَرْحَمُ الرَّاحِمِيْنَ ، اَللَّهُمَّ اِنِّى

اَبْرَءُ اِلَيْكَ فِى يَوْمِى هَذَا وَفِيْمَا بَعْدَهُ مِنَ اْلآحَادِ مِنَ الشِّرْكِ وَاْلاِلْحَادِ وَاُخْلِصُ لَكَ دُعَائِى تَعَرُّضًا لِلإِجَابَةِ ، فَصَلِّ عَلَى مُحَمَّدٍ وَآلِ مُحَمَّدٍ خَيْرِ خَلْقِكَ الدَّاعِى اِلَى حَقِّكَ وَاَعِزَّنِى بِعِزِّكَ الَّذِى لاَيُضَامُ وَاحْفَظْنِى بِعَيْنِكَ الَّتِى لاَتَنَامُ وَاخْتِمْ بِاْلإِنْقِطَاعِ اِلَيْكَ اَمْرِى وَبِالْمَغْفِرَةِ عُمْرِى اِنَّكَ اَنْتَ الْغَفُوْرُ الرَّحِيمِ .

1. அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன். அவனது கிருபையை அன்றி ஒன்றையும் ஆசிக்க மாட்டேன். அவனது நீதியை அன்றி வேறெதையும் அஞ்சமாட்டேன். அவனது வார்த்தையையன்றி வேறு ஒன்றையும் நம்ப மாட்டேன். அவனது கயிறையன்றி வேறெதையும் பிடிக்க மாட்டேன். 2. மன்னிப்பும் இறைதிருப்தியும் வழங்குபவனே, அநியாயத்திலும் பகைமையிலுமிருந்தும் நிகழ்வுகள் மாற்றமடைவதிலிருந்தும் துன்பங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருவதிலிருந்தும் சம்பவங்கள் மாறி மாறி வருவதிலிருந்தும் நாங்கள் எதையும் தயார் செய்து கொள்ளாத நிலையில் நமது வாழ்நாள் முடிவடைந்து விடுவதிலிருந்தும் உன்னிடம் காவல் தேடுகின்றேன். 3. பொருத்தமும் சீர்திருத்தமும் எதிலிருக்கிறதோ அதன் பால் வழிநடத்த உன்னையே கோருகிறேன். 4. வெற்றியும் விமோசனமும் எதோடு இணைந்திருக்கிறதோ அதன் பால் எனக்கு உதவுமாறு உன்னிடம் கேட்கிறேன். 5. ஆரோக்கியத்தின் ஆடையைப் பரிபூரணமாகவும், நித்தியமான பூரண நிவாரணத்தையும் உன்னிடம் ஆசிக்கிறேன். ஷைத்தானின் சேஷ்டைகளிலிருந்து உன்னிடம் காவல் தேடுகிறேன். அதிகாரிகளின் கெடுபிடிகளிலிருந்து உன் அதிகாரத்தைக் கொண்டு மீட்சி கோருகிறேன். நான் மேற்கொண்ட நோன்பையும் தொழுகையையும் ஏற்றுக் கொள். நாளைய தினத்தையும் அதன் பிறகுள்ளவற்றையும் இன்றைய தினத்தை விடச் சிறப்பானதாக ஆக்கித் தா. என் குடும்பத்திலும் சமூகத்திலும் என்னைக் கண்ணியப்படுத்துவாயாக. தூக்கத்திலும் விழிப்பிலும் என்னைக் காப்பாயாக. நீயே சிறந்த காவலனும் கருணையாளர்களில் மிகச்

சிறந்தவனும் ஆவாய். 6. இன்றைய தினத்திலும் இனி வரும் எல்லா ஞாயிறு தினங்களிலும் இணை வைத்தலிலிருந்தும் இறை மறுப்பிலிருந்தும் நான் விலகியுள்ளதை பிரகடனப்படுத்துகிறேன். நீ விடையளிக்கும் நம்பிக்கையுடன் நான் உளத்தூய்மையோடு பிரார்த்திக்கிறேன். 7. சிருஷ்டிகளில் மேலானவரும் உன் சத்தியத்தின் பால் அழைப்பு விடுத்தவருமான உன் திரு நபி மீதும் அன்னாரது திருக்குடும்பத்தினர் மீதும் உன் ஆசீர்வாதம் உண்டாகட்டும். உன் கண்ணியத்தின் பொருட்டால் இழிவே வராத நித்திய கண்ணியத்தை எனக்குத் தா. உறங்காத உன் கண்களின் கண்காணிப்பை எனக்குக் கொடு. என் விவகாரங்களை பற்றுகளை அறுத்துக் கொண்டு உன்னிடம் வருவதாக முற்றுப் பெறச் செய். என் வாழ்வையும் உன் மன்னிப்போடு முடிவடையச் செய். நீ மன்னிப்பவனும் கருணையாளனும் ஆவாய்.

# دُعَاءُ اْلاِمَامِ الْمَهْدِى (عج)

## இமாம் மஹ்தி (அலை) அவர்களின் துஆ

اَللَّهُمَّ ارْزُقْنَا تَوْفِيْقَ الطَّاعَةِ وَبُعْدَ الْمَعْصِيَّةِ وَصِدْقَ النِّيَّةِ وَعِرْفَانَ الْحُرْمَةِ وَاَكْرِمْنَا بِالْهُدَى وَاْلاِسْتِقَامَةِ وَسَدِّدْ اَلْسِنَتَنَا بِالصَّوَابِ وَالْحِكْمَةِ وَامْلاَ قُلُوبَنَا بِالْعِلْمِ وَالْمَعْرِفَةِ وَطَهِّرْ بُطُونَنَا مِنَ الْحَرَامِ وَالشُّبْهَةِ وَاكْفُفْ اَيْدِيَنَا عَنِ الظُّلْمِ وَالسَّرِقَةِ وَاغْضُضْ اَبْصَارَنَا عَنِ الْفُجُورِ وَالْخِيَانَةِ وَاسْدُدْ اَسْمَاعَنَا عَنِ اللَّغْوِ وَالْغِيْبَةِ وَتَفَضَّلْ عَلَى عُلَمَائِنَا بِالزُّهْدِ وَالنَّصِيحَةِ وَعَلَى الْمُتَعَلِّمِيْنَ بِالْجُهْدِ وَالرَّغْبَةِ وَعَلَى الْمُسْتَمِعِيْنَ بِاْلاِتِّبَاعِ وَالْمَوْعِظَةِ وَعَلَى مَرْضَى الْمُسْلِمِيْنَ بِالشِّفَاءِ وَالرَّاحَةِ وَعَلَى مَوْتَاهُمْ بِالرَّأْفَةِ وَالرَّحْمَةِ وَعَلَى مَشَائِخِنَا بِالْوَقَارِ وَالسَّكِيْنَةِ وَعَلَى الشَّبَابِ بِاْلاِنَابَةِ وَالتَّوْبَةِ وَعَلَى النِّسَاءِ بِالْحَيَاءِ وَالْعِفَّةِ وَعَلَى اْلاَغْنِيَاءِ بِالتَّوَاضُعِ وَالسَّعَةِ وَعَلَى الْفُقَرَاءِ بِالصَّبْرِ وَالْقَنَاعَةِ وَعَلَى الْغُزَاةِ بِالنَّصْرِ وَالْغَلَبَةِ وَعَلَى اْلاُسَرَاءِ بِالْخَلاَصِ وَالرَّاحَةِ وَعَلَى اْلاُمَرَاءِ بِالْعَدْلِ وَالشَّفَقَةِ وَعَلَى الرَّعِيَّةِ

بِالْاِنْصَافِ وَحُسْنِ السِّيْرَةِ وَبَارِكْ لِلْحُجَّاجِ وَالزُّوَّارِ فِى الزَّادِ وَالنَّـفَقَةِ وَاقْضِ مَا اَوْجَبْتَ عَلَيْهِمْ مِنَ الْحَجِّ وَالْعُمْرَةِ بِفَضْلِكَ وَرَحْمَتِكَ يَااَرْحَمَ الرَّاحِمِيْنَ .

யாஅல்லாஹ்! உனக்கு வழிப்பட்டு நடக்கும் பாக்கியத்தையும் பாவங்களை விட்டும் தூரமாயிருப்பதையும, எண்ணத்தில் தூய்மையையும், ஹராமானவை பற்றிய தெளிவையும் எமக்குத் தருவாயாக. நேர்வழியின் மூலமும் நிலையான இருப்பின் மூலமும் எம்மை சங்கைப்படுத்துவாயாக. உண்மையின் மூலமும் ஞானத்தின் மூலமும் எமது நாவுகளைப் பலப்படுத்துவாயாக. அறிவினாலும் ஞானத்தினாலும் எமது உள்ளங்களை நிரப்புவாயாக. விலக்கப்பட்டவைகளிலிருந்தும் சந்தேகத்திற்குரியவைகளிலிருந்தும் எமது வயிறுகளை சுத்தப்படுத்துவாயாக. களவு, அநீதிகளை விட்டும் எமது கைகளைத் தடுத்து விடுவாயாக. மோசடிகள் தீங்குகளிலிருந்து எமது பார்வையைத் தாழ்த்தி விடுவாயாக. புறம்பேசுதல் வீண்விடயங்கள் போன்றவற்றிலிருந்து எமது செவிகளைச் சீர்படுத்துவாயாக. எமது அறிஞர்களுக்கு உலகப்பற்றற்ற தன்மையையும் உபதேசத்தையும் வழங்குவாயாக. மாணவர்களுக்கு முயற்சியையும் ஆர்வத்தையும் கொடுப்பாயாக. செவிமடுப்போர்களுக்கு வழிப்படும் தன்மையையும் உபதேசம் பெறும் நிலையையும் வழங்குவாயாக. முஸ்லிம் நோயாளிகளுக்கு ஓய்வையும் உடல்நலத்தையும் வழங்குவாயாக. மரணித்த முஸ்லிம்கள் மீது இரக்கமும் அன்பும் நல்குவாயாக. எமது வயோதிபர்களுக்கு கௌரவத்தையும் அமைதியையும் வழங்குவாயாக. இளைஞர்களுக்கு பாவமன்னிப்பையும் உன்னளவில் மீளும் நிலையையும் ஏற்படுத்துவாயாக. பெண்களுக்கு நாணத்தையும் கற்பையும் கொடுப்பாயாக. செல்வந்தர்களுக்கு பணிவுத்தன்மையையும் விசாலத்தையும் ஏற்படுத்துவாயாக. ஏழைகளுக்கு பொறுமையையும் போதுமென்ற மனப்பாங்கையும் கொடுப்பாயாக. எமது போராளிகளுக்கு உதவியையும் வீரத்தையும் கொடுப்பாயாக. போர்க்கைதிகளுக்கு விடுதலையையும் மகிழ்வையும் வழங்குவாயாக. தலைவர்களுக்கு நீதத்தையும் அன்புணர்வையும் ஏற்படுத்துவாயாக. பொறுப்பாளர்கள் நீதியாகவும் நன்னடத்தையோடும் நடந்து

கொள்ளும் நிலையை ஏற்படுத்துவாயாக. ஹாஜிகளுக்கும் சியாரத் செய்வோருக்கும் அவர்களது செலவு சாதனங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்துவாயாக. அருளாளர்களிலெல்லாம் மிகச் சிறந்த அருளாளனே! நீ மனிதர்களுக்கு விதியாகிய ஹஜ், உம்ரா கடமைகளை உனது அருளினாலும் சிறப்பினாலும் அவர்களிலிருந்து ஏற்றுக் கொள்வாயாக.

# اَدَعِيَّةُ الْاَيَّامِ الْمَخْصُوْصَةِ

## விசேட நாட்களின் துஆக்கள்

துஆ என்பது முஸ்லிமின் ஆயதம் என்ற வகையிலும், அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையிலான நேரடித் தொடர்பாடல் என்ற வகையிலும், வருடத்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும் பொருத்தமான துஆக்களை ஓதிக் கொள்வது வாழ்க்கை செழிப்புறக் காரணமாக அமைவதுடன், மறுமையில் அளவற்ற நன்மைகைள ஈட்டித் தருவதாகவும் அமையும். இவ்வகையில், வருடத்தின் முக்கிய மாதங்கள் சிலவற்றிலும், முக்கிய தினங்கள் சிலவற்றிலும் ஓதும் துஆக்கள் சில கீழே விபரிக்கப்படுகின்றன.

## ரஜப் மாதம் – شهر رجب

ரஜப், ஷ:.பான், ரமழான் என்பன வருடத்தில் மிக முக்கியத்துவம் பெற்ற மாதங்களாகும். ரஜப் என்பது அல்லாஹ்வுக்குரிய மாதம், எனவே அம்மாதத்தில் அல்லாஹ்விடம் அதிகமாக பாவமன்னிப்பைத் தேடுங்கள் என்றும், ஷ:.பான் என்பது எனக்குரிய மாதம் என்றும், ரமழான் என்பது எனது உம்மத்தினருக்குரிய மாதம் என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, ரஜப் மாதத்தில் அதிகமாக பாவமன்னிப்புத் தேடும் பொருட்டு கீழ்க்காணும் துஆவை தொடர்ந்து ஓதிக் கொள்ள வேண்டும்.

اَسْتَغْفِرُ اللهَ وَاَسْئَلُهُ التَّوْبَةَ

அல்லாஹ்விடம் பிழைபொறுக்கத் தேடுகிறேன்; அவனிடத்தில் பாவமன்னிப்புக் கோருகிறேன்.

ரஜப் மாதம் அல்லாஹ்வின் அருளுக்குரிய மாதமாகும். அதனால், இம்மாதத்தில் அல்லாஹ்வின் அருளைப் பெறும் பொருட்டு, பின்வரும் துஆவை அதிகமாக ஓதிக் கொள்வது சிறந்ததாகும்.

يَامَنْ يَمْلِكُ حَوَائِجَ السَّآئِلِينَ وَيَعْلَمُ ضَمِيرَ الصَّامِتِينَ لِكُلِّ مَسْئَلَةٍ مِنْكَ سَمْعٌ حَاضِرٌ وَجَوَابٌ عَتِيدٌ اَللَّهُمَّ وَمَوَاعِيدُكَ الصَّادِقَةُ وَاَيَادِيكَ الْفَاضِلَةُ وَرحَمَتُكَ الْوَاسِعَةُ فَاَسْئَلُكَ اَنْ تُصَلِّيَ عَلَى مُحَمَّدٍ وَآلِ مُحَمَّدٍ وَاَنْ تَـقْضِيَ حَوَائِجِى لِلدُّنْيَا وَالْآخِرَةِ اِنَّكَ عَلَى كُلِّ شَىْءٍ قَدِيرٌ .

யாசிப்போரின் தேவைகளை நிறைவேற்றுபவனே! யாசிக்காது மௌனமாயிருப்போரின் அந்தரங்கத்தை அறிந்தவனே! ஒவ்வொரு யாசிப்புக்கும் உன்னிடத்தில் அவதானிப்பும் சிறந்த பதிலும் இருக்கின்றன. யாஅல்லாஹ்! உனது வாக்கு உண்மையானது; உனது அன்பு சிறப்பானது; உனது அருள் விசாலமானது. முஹம்மத் அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் ஸலவாத்துச் சொல்லும்படியாகவும், எனது இம்மை மறுமை தேவைகளை எனக்கு நிறைவு செய்து தரும்படியாகவும் உன்னை நான் வேண்டுகிறேன். நிச்சயமாக நீ எல்லா விடயங்களைப் புரிவதற்கும் ஆற்றலுள்ளவன்.

**பின்வரும் துஆ ரஜப் மாதத்தில் ஓதுவதற்கான துஆவாகும். இதனை ஒரு தடைவ ஓதுவோருக்கு அல்லாஹ்வின் அருள் கிடைக்கின்றது என்றும், மாதத்தில் 100 தடவை ஓதுவோருக்கு 100 ஷஹீதுகளுடைய நன்மை கிடைக்கும் என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.**

اَسْتَغْفِرُ اللهَ الَّذِى لآاِلَهَ اِلاَّ هُوَ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَاَتُوبُ اِلَيْهِ

1. இறைவா, உன் கொடைகள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து கொண்டிருந்தமையால், உனக்கு நன்றி சொல்லவும் முடியாமல் திகைத்திருந்தேன். உன் அருட்கொடைகளை அள்ளி அள்ளி வழங்கியதால் எண்ணிக் கணக்கிட்டு நன்றி கூற இயலாதவனாகி விட்டேன். உன் கருணையைத் தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருந்ததனால் உன் சிறப்புகளைப் பாடாது அதில் ஈடுபட்டு விட்டேன். உன் அருட்கரத்தை அனுபவிக்கத் தொடங்கியதால் உன் சிறப்பைப் பரப்புவதை விட்டு விட்டேன். நானோ, இறைவன் அள்ளித் தந்த நிஃமத்துகளை நான் ஏற்கிறேன். ஆனால் மெச்சுவதில் நான் குறை வைத்து விட்டேன். அலட்சியத்தாலும் விரயத்தாலும் எனக்கெதிரான சாட்சியாக மாறினேன். நீ அன்பும் கருணையும் கொண்டவன். தாராளமாக நன்மை புரிபவன். தன்னிடம் நாடி வருவோரை நிராசையாக்கி விடாதவன். தன் வாசலில் வந்த யாசகனைத் துரத்தி விடாதவன். ஆர்வலர்களின் வண்டிகள் உன் முற்றத்தை நோகியே புறப்படுகின்றன. ஆதரவு கோரி வருவோர் உன் வாசலிலேயே முகாமிடுகின்றனர். எங்கள் நம்பிக்கைகளை நிராசையாக்கி தவிடுபொடியாக்கி விடாதே. அவநம்பிக்கையையும் மனமுறிவையும் நம் மீது போர்த்தி விடாதே. 2. இறைவா, உன்னுடைய பிரமாண்டமான அருட்கொடைகளின் முன்னால் என்னுடைய நன்றி மிகவும் சிறியது. எனக்குக் காட்டுகின்ற உன் கொடையினதும் பெருந்தன்மையினதும் முன்னால் என்னுடைய புகழும் பாராட்டும் அற்பமானவை. ஈமானின் கிரணங்கள் கொடுத்த நிஃமத்துகளே என்னை உச்சி முகட்டில் ஏற்றி வைத்தன. நீ பொழிந்த கனிவும் கருணையும் என் தலையில் கண்ணியத்தின் கிரீடத்தையே சூட்டி விட்டன. நீ அளித்த பேறுகள் ஒளிரும் மாலைகளாக என் கழுத்தை அலங்கரிக்கின்றன. உன்னுடைய அருட்கொடைகளின் எண்ணிக்கையோ கணக்கிட முடியாதவை. அவற்றை எண்ணிக் கணக்கிடுவதில் என் நாவு சோர்ந்து விட்டது. உன்னுடைய அளப்பரிய நிஃமத்துகளை அடையாளம் காணுவது எப்படிப் போனாலும் புரிந்து கொள்வதே இயலாமல் இருக்கிறது. நான் இவற்றுக்கெல்லாம் நன்றி சொல்வது எவ்வாறு? நான் உனக்கு நன்றி

சொல்லக் கிடைத்தமைக்கு தனியாக நன்றி சொல்ல வேண்டும். நான், உனக்கே புகழ் அனைத்தும் உரியது எனக் கூறும் போதெல்லாம் அவ்வாறு சொல்லக் கிடைத்தமைக்காகவும் உன்னைப் புகழ்கிறேன். 3. இறைவா, உன் இரக்கத்தினால் நம்மைப் போசித்தது போன்றே, உன் நன்மையால் நம்மை இரட்சித்தது போன்றே உன்னுடைய அருட்கொடைகளை நம் மீது பூரணப்படுத்துவாயாக. துன்பங்களின் தீங்குகளை எங்களை விட்டும் அகற்றி விடு. இம்மையினதும் மறுமையினதும் இன்பங்களில் மிக நல்லதையும் மிக உயர்வானதையும் இம்மையிலும் மறுமையிலும் நமக்குத் தருவாயாக. உனக்கே புகழ் அனைத்தும் உரித்தாகட்டும். நீ சிறப்பான முறையில் சோதிக்கிறாய். அருட்கொடைகளை அள்ளி வழங்குகிறாய். உன் திருப்தியைப் பெறும் விதமாக புகழ்கிறேன். பெரும் நன்மைகளையும் நிஃமத்துகளையும் நீயே வழங்குகிறாய். மகத்துவமும் பெருந்தன்மையும் உள்ளவனே. பிரஹ்மதிக யாஅர்ஹமர் ராஹிமீன்.

## اَلْمُنَاجَاتُ السَّابعَةُ مُنَاجَاتُ الْمُطِيعِينَ ِللهِ

**بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيم**

اِلَهِى اَلْهِمْنَا طَاعَتَكَ وَجَنِّبْنَا مَعْصِيَتَكَ وَيَسِّرْلَنَا بُلُوغَ مَا نَتَمَنَّى مِن ابْتِغَاءِ رِضْوَانكَ وَاَحْلِلْنَا بِحُبُوحَةِ جِنَانكَ وَاقْشَعْ عَنْ بَصَائِرِنَا سَحَابَ اْلإرْتِيَاب وَاَكْشِفْ عَنْ قُلُوبنَا اَغْشِيَةَ الْمِرْيَةِ وَالْحِجَاب وَاَزْهِقِ الْبَاطِلَ عَنْ ضَمَائِرِنَا وَاَثْبتِ الْحَقَّ فِى سَرَائِرِنَا فَاِنَّ الشُّكُوكَ وَالظُّنُونَ لَوَاقِحُ الْفِتَنِ وَمُكَدِّرَةٌ لِصَفْوِ الْمَنَائِحِ وَالْمِنَنِ ، اَللَّهُمَّ احْمِلْنَا فِى سُفُنِ نَجَاتِكَ وَمَتِّعْنَا بِلَذِيذِ مُنَاجَاتِكَ وَاَوْرِدْنَا

حِيَاضَ حُبِّكَ وَاَذِقْنَا حَلاَوَةَ وُدِّكَ وَقُرْبِكَ وَاجْعَلْ جِهَادَنَا فِيكَ وَهَمَّنَا فِى طَاعَتِكَ وَاَخْلِصِ نِيَّاتِنَا فِى مُعَامَلَتِكَ فَاِنَّا بِكَ وَلَكَ وَلاَ وَسِيلَةَ لَنَا اِلَيْكَ اِلاَّ اَنْتَ ، اِلَهِى اجْعَلْنِى مِنَ الْمُصْطَفِيْنَ اْلاَخْيَارِ وَاَلْحِقْنِى بِالصَّالِحِينَ اْلاَبْرَارِ السَّابِقِينَ اِلَى الْمَكْرُمَاتِ الْمُسَارِعِينَ اِلَى الْخَيرَاتِ الْعَامِلِينَ لِلْبَاقِيَاتِ الصَّالِحَاتِ السَّاعِينَ اِلَى رَفِيعِ الدَّرَجَاتِ اِنَّكَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ وَبِالإِجَابَةِ جَدِيرٌ بِرَحْمَتِكَ يَااَرْحَمَ الرَّاحِمِينَ .

முனாஜாத் 7

## வழிபடுகின்றவர்களின் முனாஜாத்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. இறைவா, உன்னைப் பணியும் உணர்வை நமக்குக் கொடு. உனக்கு மாறு செய்யாமல் நம்மைக் காப்பாற்று. நாம் விரும்புகின்றவாறு உன்னுடைய திருப்பொருத்தத்தைப் பெறுவதை நமக்கு இலகுபடுத்திக் கொடு. உன்னுடைய சுவனத்து மாளிகைகளில் நம்மைக் குடியிருக்கச் செய். நம் பார்வைகளின் மீது படர்ந்துள்ள சந்தேகத்தின் திரைகளை அகற்றி விடு. நமது இதயங்களைச் சூழ்ந்துள்ள தடுமாற்றத்தினதும் புரியாமையினதும் இருண்ட மேகங்களை விலக்கி விடு. நமது உள்ளுணர்வுகளில் இருந்து போலித் தன்மையை நீக்கி விடு. நமது அந்தரங்கங்களில் எல்லாம் சத்தியத்தை நட்டி விடு. கெட்ட எண்ணங்களும் சந்தேகங்களும் குழப்பங்களையே தருவன. நன்மைகளையும் அருட்கொடைகளையும் அழித்துத் துடைத்தெறவன. 2. இறைவா, உன்னுடைய விடுதலையின் கப்பலில் நம்மையும் சுமந்து செல். உன்னுடன் உரையாடுவதில் உள்ள இன்பத்தைத் தருவாயாக. உன் அன்பின் ஊற்றுகளிடத்தில் நாமும் செல்ல வழிசெய்வாயாக. உன் நெருக்கத்தினதும் காதலினதும் இனிமையை சுவைக்கச் செய்வாயாக. நமது ஜிஹாதை உனக்காகவே செய்பவர்களாகவும் உன்னை வழிப்படுவதிலே முழுமூச்சாக உள்ளவர்களாகவும் ஆக்குவாயாக. உன்னுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதில் பரிசுத்தத் தன்மையை நம்முள் ஏற்படுத்து. நிச்சயமாக நாங்கள் உன் கருணையால் உனக்காகவே வாழ்கிறோம். உன்னை அடைவதற்கு உன்னை அன்றி நமக்கு வேறு வழி கிடையாது. 3. இறைவா, நீ தெரிவு செய்து கொண்ட சிறப்பானோர்களில் என்னையும் சேர்த்துக் கொள். நல்லவர்களான அடக்கமுள்ள அடியார்களோடு என்னைச் சேர்த்து விடு. அவர்கள், உயர்ந்த இடங்களுக்கு ஏற்கனவே சென்று விட்டார்கள். நன்மைகளின் பால் விரைந்து சென்றார்கள். நிரந்தரமான நன்மைகளைச் செய்தார்கள். உயர்ந்த அந்தஸ்துகளை அடைந்து கொண்டார்கள். நீயோ எல்லாவற்றின் மீதும் வல்லமை உள்ளவன். பிரார்த்தனைகளை ஏற்பவன். கருணையாளர்களில் எல்லாம் மிக்க கருணையாளன்.

## اَلْمُنَاجَاتُ الثَّامِنَةُ مُنَاجَاتُ الْمُرِيدِينَ

**بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيم**

سُبْحَانَكَ مَا اَضْيَقَ الطُّرُقَ عَلَى مَنْ لَمْ تَكُنْ دَلِيلُهُ وَمَا اَوْضَحَ الْحَقَّ عِنْدَ مَنْ هَدَيْتَهُ سَبِيْلَهُ ، اِلَهِى فَاسْلُكْ بِنَا سُبُلَ الْوُصُول اِلَيْكَ وَسَيِّرْنَا فِى اَقْرَبِ الطُّرُق لِلْوُفُودِ عَلَيْكَ قَرِّبْ عَلَيْنَا الْبَعِيدَ وَسَهِّلْ عَلَيْنَا الْعَسِيرَ الشَّدِيدَ وَاَلْحِقْنَا بِعِبَادِكَ الَّذِينَ هُمْ بِالْبِدَار اِلَيْكَ يُسَارِعُونَ وَبَابَكَ عَلَى الدَّوَامِ يَطْرُقُون وَاِيَّاكَ فِى اللَّيْلِ وَالنَّهَار يَعْبُدُونَ وَهُمْ مِنْ هَيْبَتِكَ مُشْفِقُونَ الَّذِينَ صَفَّيْتَ لَهُمُ الْمَشَارِبَ وَبَلَّغْتَهُمُ الرَّغَائِبَ وَاَنْجَحْتَ لَهُمُ الْمَطَالِبَ وَقَضَيْتَ لَهُمْ مِنْ فَضْلِكَ الْمَئَآرِبَ وَمَلأْتَ لَهُمْ ضَمَائِرَهُمْ مِنْ حُبِّكَ وَرَوَّيْتَهُمْ مِنْ صَافِى شِرْبِكَ فَبِكَ اِلَى لَذِيذِ مُنَاجَاتِكَ وَصَلُوا وَمِنْكَ اَقْصَى مَقَاصِدِهُمْ حَصَّلُوا فَيَامَنْ هُوَ عَلَى الْمُقْبِلِينَ عَلَيْهِ مُقْبِلٌ وَبِالْعَطْفِ عَلَيْهِمْ عَآئِدٌ مُفْضِلٌ وَبِالْغَافِلِينَ عَنْ ذِكْرِهِ رَحِيمٌ رَءُوفٌ وَبِجَذْبِهِمْ اِلَى بَابِهِ وَدُودٌ عَطُوفٌ اَسْأَلُكَ اَنْ تَجْعَلَنِى مِنْ اَوْفَرِهِمْ مِنْكَ حَظًّا وَاَعْلاَهُمْ

عِنْدَكَ مَنْزِلاً وَاَجْزَلِهِمْ مِنْ وُدِّكَ قِسْمًا وَاَفْضَلِهِمْ فِى مَعْرِفَتِكَ

نَصِيبًا فَقَدِ انْقَطَعَتْ اِلَيْكَ هِمَّتِى وَانْصَرَفَتْ نَحْوَكَ رَغْبَتِى فَاَنْتَ

لاَغَيْرُكَ مُرَادِى وَلَكَ لاَ لِسِوَاكَ سَهْرِى وَسُهَادِى وَلِقَآؤُكَ قُرَّةَ

عَيْنِى وَوَصْلُكَ مُنَى نَفْسِى وَاِلَيْكَ شَوْقِى وَفِى مَحَبَّتِكَ وَلَهِى وَاِلَى

هَوَاكَ صَبَابَتِى وَرِضَاكَ بُغْيَتِى وَرُؤْيَتُكَ حَاجَتِى وَجِوَارُكَ طَلَبِى

وَقُرْبُكَ غَايَةُ سُؤْلِى وَفِى مُنَاجَاتِكَ رَوْحِى وَرَاحَتِى وَعِنْدَكَ دَوَاءُ

عِلَّتِى وَشِفَاءُ غُلَّتِى وَبَرْدُ لَوْعَتِى وَكَشْفُ كُرْبَتِى فَكُنْ اَنِيسِى فِى

وَحْشَتِى وَمُقِيلَ عَثْرَتِى وَغَافِرَ زَلَّتِى وَقَابِلَ تَوْبَتِى وَمُجِيبَ

دَعْوَتِى وَوَلِيَّ عِصْمَتِى وَمُغْنِيَ فَاقَتِى وَلاَ تَـقْطَعْنِى عَنْكَ وَلاَ

تُبْعِدْنِى مِنْكَ يَا نَعِيمِى وَجَنَّتِى وَيَادُنْيَاىَ وَآخِرَتِى يَااَرْحَمَ

الرَّاحِمِينَ .

முனாஜாத் 8

**<u>இறைவனிடம் நாட்டம் கொண்டோரின் முனாஜாத்</u>**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. நீ மிக்க பரிசுத்தமானவன். உன்னை வழிகாட்டியாகக் கொள்ளாதவருக்கு பாதை எவ்வளவு கடினமாகிறது. நீ வழிகாட்டியவர்களிடம் உண்மை எவ்வளவு மிகத் தெளிவாக

இருக்கிறது. 2. இறைவா, உன்னிடம் வந்து சேருகின்ற பாதையில் நம்மை அழைத்துச் செல்வாயாக. உன்னிடம் விரைவில் வந்து சேரும் கிட்டிய பாதையை நமக்குக் காட்டுவாயாக. சேய்மையை நமக்கு அண்மையாக்கிக் கொடு. கடுமையான கஷ்டத்தை நமக்கு இலகுபடுத்திக் கொடு. உன்னை நோக்கி விரைவாகப்ப யணித்துக் கொண்டிருக்கும் நல்லடியார்களில் எம்மையும் சேர்த்து விடு. அவர்கள் நித்தமும் உன் கதவைத் தட்டிக் கொண்டேயுள்ளார்கள். இரவும் பகலும் அவர்கள் உன்னையே வணங்கி வழிபடுகிறார்கள். உன்னுடைய மகத்துவத்தில் ஆசை வைத்துள்ளார்கள். அவர்களுக்கு தவ்ஹீதின் அமுதத்தை ஊட்டினாய். அவர்களது ஆசைகளை நிறைவேற்றினாய். நோக்கங்களை வெற்றி பெறச் செய்தாய். உன் கருணையால் அவர்களின் இலட்சியங்களை நிறைவு செய்தாய். உன்னுடைய அன்பினால் அவர்களது உள்ளுணர்வுகளையெல்லாம் நிரப்பினாய். உன் அன்பின் கனையால் அவர்களின் தாகத்தைத் தீர்த்து வைத்தாய். உன் அருளால் உன்னோடு உரையாடும் இன்பத்தை அடைந்தார்கள். அவர்களது அதியுயர் இலட்சியமான உன்னை அடைந்து கொண்டார்கள். நீயோ தன்னை நோக்கி வருபவர்களிடம் முன்னே சென்று வரவேற்கிறாய். அவர்கள் மீது உன் இரக்கத்தைச் சொரிகிறாய். உன்னை ஞாபகம் செய்ய மறந்தோருக்கும் இரக்கமும் பரிவும் காட்டுகிறாய். அவர்கள் உனது வாயிலுக்கு வருவதில் நீ அக்கறையும் கரிசனையும் கொண்டுள்ளாய். அவர்களிலே கூடிய அதிஷ்டத்தைப் பெற்றவனாக என்னை ஆக்குமாறு உன்னிடம் கோருகிறேன். அதியுயர்ந்த அந்தஸ்தை உன்னிடத்தில் பெற்றவரின் அந்தஸ்திலும், அவர்களில் உன் அன்பை அதிகம் பெற்றவராகவும், உன்னைப் புரிந்து கொண்டதில் அவர்களை விட மேன்மையானவனாகவும் ஆக்குவாயாக. என் இலட்சியங்கள் அனைத்தும் நீயாகி விட்டன. என் ஆவல் உன்னை நோக்கித் திரும்பியுள்ளது. உன்னைத் தவிர யாரையும் நான் நாடுவதில்லை. விழித்திருப்பதும் அயராமையும் உனக்காக மட்டும்தான். என்னுடைய மகிழ்ச்சி உன்னைச் சந்திப்பதில் மட்டுமே உள்ளது. என் இதயத் துடிப்பு அதற்காகவே உள்ளது. உன் ஆசையெல்லாம் உன்னில்தான். என் அன்பை அடைவதே என் குறிக்கோள். உன்னுடைய திருபதியே என் எதிர்பார்ப்பு. உன் தரிசனம் தான் என்னுடைய ஒரே நாட்டம். நான் வேண்டுவதெல்லாம் உன் நெருக்கத்தை மட்டுமே. உன்னோடு உரையாடுவதில் தான் எனக்கு இன்பமும் சுகமும் இருக்கின்றன. என குறைக்கு மருந்தும் என் நோய்க்கு நிவாரணமும் உன்னிடம்தான் இருக்கின்றன. என் துன்பங்களை நீ மட்டுமே போக்க முடியும். என்

தனிமையில் எனக்கு நல்ல நண்பனாக இரு. என் தப்புகளை அழித்து விடுபவனாகவும் தவறுகளை மன்னிப்பவனாகும் பாவமீட்சியை ஏற்பவனாகவும் அழைப்பை ஏற்பவனாகவும் என் பாதுகாப்பை பொறுப்பேற்றவனாகவும் என் வறுமையை நீக்குபவனாகவும் இருப்பாயாக. உன்னோடுள்ள தொடர்பைத் துண்டித்து விடாதே. உனக்கு மிக நெருக்கத்தில் என்னை அழைத்துக் கொள். என் இன்பமும் சுவர்க்கமும் ஆனவனே, என் இம்மையும் மறுமையும் ஆனவனே, யா அர்ஹமர் ராஹிமீன்.

## اَلْمُنَاجَاتُ التَّاسِعَةُ مُنَاجَاتُ الْمُحِبِّينَ

### بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

اِلَهِى مَنْ ذَا الَّذِى ذَاقَ حَلاَوَةَ مَحَبَّتِكَ فَرَامَ مِنْكَ بَدَلاً وَمَنْ ذَا الَّذِى اَنِسَ بِقُرْبِكَ فَابْتَغَى عَنْكَ حِوَلاً ، اِلَهِى فَاجْعَلْنَا مِمَّنِ اصْطَفَيْتَهُ لِقُرْبِكَ وَوِلاَيَتِكَ وَاَخْلَصْتَهُ لِوُدِّكَ وَمَحَبَّتِكَ وَشَوَّقْتَهُ اِلَى لِقَآئِكَ وَرَضَّيْتَهُ بِقَضَآئِكَ وَمَنَحْتَهُ بِالنَّظْرِ اِلَى وَجْهِكَ وَحَبَوْتَهُ بِرِضَاكَ وَاَعَذْتَهُ مِنْ هَجْرِكَ وَقِلاَكَ وَبَوَّأْتَهُ مَقْعَدَ الصِّدْقِ فِى جِوَارِكَ وَخَصَصْتَهُ بِمَعْرِفَتِكَ وَاَهَّلْتَهُ لِعِبَادَتِكَ وَهَيَّمْتَ قَلْبَهُ لِإِرَادَتِكَ وَاجْتَبَيْتَهُ لِمُشَاهِدَتِكَ وَاَخْلَيْتَ وَجْهَهُ لَكَ وَفَرَّغْتَ فُؤَادَهُ لِحُبِّكَ وَرَغَّبْتَهُ فِيمَا عِنْدَكَ وَاَلْهَمْتَهُ ذِكْرَكَ وَاَوْزَعْتَهُ شُكْرَكَ وَشَغَلْتَهُ بِطَاعَتِكَ وَصَيَّرْتَهُ مِنْ صَالِحِى بَرِيَّتِكَ وَاخْتَرْتَهُ لِمُنَاجَاتِكَ

وَقَطَعْتَ عَنْهُ كُلَّ شَيْءٍ يَقْطَعُهُ عَنْكَ ، اَللَّهُمَّ اجْعَلْنَا مِمَّنْ دَأْبُهُمُ الْإِرْتِيَاحُ اِلَيْكَ وَالْحَنِينُ وَدَهْرُهُمُ الزَّفْرَةُ وَالْأَنِينُ جِبَاهُهُمْ سَاجِدَةٌ لِعَظَمَتِكَ وَعُيُونُهُمْ سَاهِرَةٌ فِى خِدْمَتِكَ وَدُمُوعُهُمْ سَآئِلَةٌ مِنْ خَشْيَتِكَ وَقُلُوبُهُمْ مُتَعَلِّقَةٌ بِمَحَبَّتِكَ وَاَفْئِدَتُهُمْ مُنْخَلِعَةٌ مِنْ مَهَابَتِكَ يَامَنْ اَنْوَارُ قُدْسِهِ لِأَبْصَارِ مُحِبِّيهِ رَآئِـقَةٌ وَسُبُحَاتُ وَجْهِهِ لِقُلُوبِ عَارِفِيهِ شَآئِـقَةٌ يَامُنَى قُلُوبِ الْمُشْتَاقِينَ وَيَاغَايَةَ آمَالِ الْمُحِبِّينَ اَسْأَلُكَ حُبَّكَ وَحُبَّ مَنْ يُحِبُّكَ وَحُبَّ كُلِّ عَمَلٍ يُوصِلُنِى اِلَى قُرْبِكَ وَاَنْ تَجْعَلَكَ اَحَبَّ اِلَيَّ مِمَّا سِوَاكَ وَاَنْ تَجْعَلَ حُبِّى اِيَّاكَ قَآئِدًا اِلَى رِضْوَانِكَ وَشَوْقِى اِلَيْكَ ذَآئِدًا عَنْ عِصْيَانِكَ وَامْنُنْ بِالنَّظَرِ اِلَيكَ عَلَيَّ وَانْظُرْ بِعَيْنِ الْوُدِّ وَالْعَطْفِ اِلَيَّ وَلاَ تَصْرِفَ عَنِّى وَجْهَكَ وَاجْعَلْنِى مِنْ اَهْلِ الْإِسْعَادِ وَالْحُظْوَةِ عِنْدَكَ يَا مُجِيبُ يَا اَرْحَمَ الرَّاحِمِينَ .

முனாஜாத் 9

## **இறைகாதலர்களின் முனாஜாத்**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. இறைவா, உன் மீது அன்பு வைப்பதன் இன்பத்தைச் சுவைத்தவர்கள் வேறு எவரையும் தேடிப் போவதில்லை. உன் நெருக்கத்தில் தம் தனிமையை இழந்தவர்கள் உனக்குப் பகரமாக வேறு எதனையும் விரும்புவார்களா? 2. இறைவா, உன் நெருக்கத்துக்கும் நேசத்துக்கும் நீ தெரிவு செய்து கொண்டவரில் என்னையும் சேர்த்துக் கொள். நீ அவர் மீது உன் அம்பைத் தூய்மாயக்கினாய். உன்னைச் சந்திப்பதில் அவரது ஆசையைத் தூண்டினாய். உனது தீர்ப்பை ஏற்று மகிழச் செய்தாய். உன் திருமுகத்தின் ஜோதியைக் காண வைத்தாய். உன் திருப்தியை வழங்கினாய். உன்னிடம் இருந்து விலகாமல் நீ தஞ்சம் வழங்கினாய். உனக்குப் பக்கத்தில் சத்தியத்தின் இருக்கையை அவருக்கு ஏற்பாடு செய்து கொடுத்தாய். உன்னைப் பற்றிய ஞானத்தை விசேடமாக வழங்கினாய். உனக்கு அடிமையாகும் தகுதியை வழங்கினாய். உன் நாட்டத்தால் அவரது இதயத்தை ஆட்கொண்டாய். உன்னுடைய மகாத்மியத்தைக் காணும் பாக்கியத்துக்குத் தெரிவு செய்தாய். அவர் முகத்தைத் தூய்மையாகவே உன் பக்கத்தில் திருப்பினாய். அவரது இதயத்தை உனது அன்புக்குரிய இடமாக சுத்தமாக்கினாய். உன்னிடம் உள்ளவற்றின் மீது ஆசையை ஊட்டினாய். உன் நினைவையும் உனக்கு நன்றி சொல்வதையும் கற்றுக் கொடுத்தாய். உன்னை வழிபடுவதில் ஈடுபடுத்தினாய். உன நல்லடியானாக மாற்றியமைத்தாய். உனது உரையாடலுக்குத் தேர்ந்தெடுத்தாய். உன்னிடமிருந்து அவரைத் துண்டித்து விடும் எல்லாத் தொடர்புகளையும் துண்டித்து விட்டாய். 3. இறைவா, உன்னில் இன்பமும் அமைதியும் காண்போர்களில் ஒருவனாக, உன்னை அழைப்பதும் மன்றாடுவதுமே தம் வாழ்கையாகக் கொண்டவர்களில் ஒருவனாக, உன் மகத்துவத்துக்கு முன்னால் தம் நெற்றிகளை நிலத்தில் பதிய வைத்து சாஷ்டாங்கம் செய்பவர்களில் ஒருவனாக, உனக்காகப் பணி செய்வதற்காக கண் விழித்தோரில் ஒருவனாக, உன்னைப் பற்றிய அச்சத்தால் கண்ணீர் வடிப்பவர்களில் ஒருவனாக, உன் மீதான அன்பில் திளைத்த இதயமுடையவர்களில் ஒருவனாக என்னை ஆக்கி விடுவாயாக. தன் தூய்மையின் ஜோதியை தன் மீது காதல் கொண்டோருக்குப்

பளிச்சிடச் செய்பவனே, அவனை சரியாகப் புரிந்து கொண்ட ஆரிபீன்கள் உள்ளத்தில் தனது திருமுகத்தின் ஜோதியை ஜொலிக்கச் செய்பவனே, ஆசை கொண்டவர்களின் இறுதி ஆசையே உன்னிடத்தில் உன்னுடைய அன்பையும் உன் மீது அன்பு வைத்தோரின் அன்பையும் உன் நெருக்கத்துக்கு என்னை இட்டுச் செல்கின்ற செயல்கள் மீதான அன்பையும் தருமாறு உன்னிடம் கேட்கிறேன். உன்னைத் தவிர்ந்த எல்லாவற்றையும் விட உன்னிடமே அன்பு கொண்டவர்களாக, உன்னுடைய திருப்திக்கு இட்டுச் செல்லும் வகையிலான அன்பைப் பெற்றவர்களாக ஆக்குவாயாக. உன் மீதுள்ள அன்பால் என் பாவங்களைப் பொசுக்குவாயாக. உன் திருப்பார்வையை எனக்குக் கிடைக்கச் செய். என்னைக் கனிவுடனும் பரிவுடனும் பார்ப்பாயாக. உன் முகத்தை என்னில் இருந்து திருப்பிக் கொள்ளாதே. உன்னிடம் செல்வமும் இன்பமும் பெற்றவராக என்னை ஆக்கி விடு. நீ பிரார்த்தனைகளுக்கு விடையளிப்பவன். யா அர்ஹமர் ராஹிமீன்.

## اَلْمُنَاجَاتُ الْعَاشِرَةُ مُنَاجَاتُ الْمُتَوَسِّلِينَ

### بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

اِلَهِى لَيْسَ لِى وَسِيلَةٌ اِلَيْكَ اِلاَّ عَوَاطِفُ رَأفَتِكَ وَلاَ لِى ذَرِيعَةٌ اِلَيْكَ اِلاَّ عَوَارِفُ رَحْمَتِكَ وَشَفَاعَةُ نَبِيِّكَ نَبِيِّ الرَّحْمَةِ وَمُنْقِذِ الْأُمَّةِ مِنَ الْغُمَّةِ فَاجْعَلْهُمَا لِى سَبَبًا اِلَى نَيْلِ غُفْرَانِكَ وَصَيِّرْهُمَا لِى وُصْلَةً اِلَى الْفَوْزِ بِرِضْوَانِكَ وَقَدْ حَلَّ رَجَائِى بِحَرَمِ كَرَمِكَ وَحَطَّ طَمَعِى بِفِنَاءِ جُودِكَ فَحَقِّقْ فِيكَ اَمَلِى وَاخْتِمْ بِالْخَيْرِ عَمَلِى وَاجْعَلْنِى مِنْ صَفْوَتِكَ الَّذِينَ اَحْلَلْتَهُمْ بُحْبُوحَةِ جَنَّتِكَ وَبَوَّأْتَهُمْ دَارَ كَرَامَتِكَ

وَاَقْرَرْتَ اَعْيُنَهُمْ بِالنَّظْرِ اِلَيْكَ يَوْمَ لِقآئِكَ وَاَوْرَثْتَهُمْ مَنَازِلَ الصِّدْقِ فِى جِوَارِكَ ، يَامَنْ لاَ يَفِدُ الْوَافِدُونَ عَلَى اَكْرَمَ مِنْهُ وَلاَ يَجِدُ الْقَاصِدُونَ اَرْحَمَ مِنْهُ يَا خَيْرَ مَنْ خَلاَ بِهِ وَحِيدٌ وَيَا اَعْطَفَ مَنْ آوَى اِلَيْهِ طَرِيدٌ اِلَى سَعَةِ عَفْوِكَ مَدَدْتُ يَدِى وَبِذَيْلِ كَرَمِكَ اَعْلَقْتُ كَفِّى فَلاَ تُولِنِى الْحِرْمَانَ وَلاَ تُبْلِنِى بِالْخَيْبَةِ وَالْخُسْرَانِ يَا سَمِيعَ الدُّعَآءِ يَااَرْحَمَ الرَّاحِمِينَ .

முனாஜாத் 10

## இறைவனிடம் வஸீலா தேடுவோரின் முனாஜாத்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. இறைவா, உன்னுடைய கருணையின் விசாலத்தைத் தவிர உன்னிடம் வருவதற்கு வேறு சாதனம் எனக்குக் கிடையாது. உன்னுடைய றஹ்மத்தைப் பற்றி நான் புரிந்து கொண்டதையும் கருணைக் கடலான, துன்பத்தில் இருந்து மனித சமுதாயத்தை மீட்டெடுப்பவரான உன் திருத்தூதரின் சாபிரசையும் தவிர உன்னிடம் சமர்ப்பிப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை. உன்னுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு இவையிரண்டையும் காரணமாக ஏற்றுக் கொள். உன்னுடைய திருவுளத்தை வென்று கொள்வதற்கான சாதனமாக இவற்றை மாற்றி விடு. உன் பெருந்தன்மையின் முகாமில் என் நம்பிக்கைகளை இறக்கி வைத்தேன். உன் கொடையின் முற்றத்தில் என் ஆசைகளைக் கட்டி வைத்தேன். எனது ஆவலை நிறைவு செய்து கொடு. என் காரியங்களின் முடிவை சிறப்பாக்கு. உன்னுடைய சுவனபதியில் நீ குடியமர்த்திய, உன் கண்ணியமிக்க அந்தஸ்துகளை வழங்கிய தேர்ந்தெடுத்த நல்லவர்களில் என்னையும் சேர்த்துக் கொள். உன்னைச் சந்திக்க வரும் நாளில் உன அழகின் ஜோதியைக் கண்ணுறும் பாக்கியத்தை அவர்களுக்கு அளித்தாய். உனக்கு அருகில் சத்தியத்தின் இருப்பிடங்களை அவர்களுக்கு வழங்கினாய். 2. உன்னை விடச் சிறந்த ஒருவரிடத்தில் விருந்தாளிகள் செல்ல முடியாது. தேடி வருபவர்கள் உன்னை விட இரக்கமுள்ளவரைக் கண்டு கொள்ள முடியாது. தனிமையில் இருப்பதற்கு மிகச் சிறந்தவனே, போக்கிடமற்றவருக்கு தஞ்சமளிக்கும் கொடையாளனே, உன் மன்னிப்பின் விசாலத்தின் பால் கையேந்தினேன். உன் பெருங்கடையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டேன். என்னை நிராகரித்து விடாதே. நஷ்டத்தாலும் நம்பிக்கையிழப்பாலும் என்னைச் சோதிக்காதே. அழைப்பைச் செவிமடுப்பவனே. கருணையாளர்களில் மிகக் கருணையாளனே.

# اَلْمُنَاجَاتُ الْحَادِى عَشَرَ مُنَاجَاتُ الْمُفْتَقِرِينَ

## بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

اِلَهِى كَسْرِى لاَ يَجْبُرُهُ اِلاَّ لُطْفُكَ وَحَنَانُكَ وَفَقْرِى لاَ يُغْنِيهِ اِلاَّ عَطْفُكَ وَاِحْسَانُكَ وَرَوْعَتِى لاَ يُسَكِّنُهَا اِلاَّ اَمَانُكَ وَذِلَّتِى لاَ يُعِزُّهَا اِلاَّ سُلْطَانُكَ وَاُمْنِيَّتِى لاَ يُبَلِّغُنِيهَا اِلاَّ فَضْلُكَ وَخَلَّتِى لاَ يَسُدُّهَا اِلاَّ طَوْلُكَ وَحَاجَتِى لاَ يَقْضِيهَا غَيْرُكَ وَكَرْبِى لاَ يُفَرِّجُهُ سِوَى رَحْمَتِكَ وَضُرِّى لاَ يَكْشِفُهُ غَيْرُ رَأفَتِكَ وَغُلَّتِى لاَ يُبَرِّدُهَا اِلاَّ وَصْلُكَ وَلَوْعَتِى لاَ يُطْفِيهَا اِلاَّ لِقَآؤُكَ وَشَوْقِى اِلَيْكَ لاَ يَبُلُّهُ اِلاَّ النَّظْرُ اِلَى وَجْهِكَ وَقَرَارِى لاَ يَقِرُّ دُونَ دُنُوِّى مِنْكَ وَلَهْفَتِى لاَ يَرُدُّهَا اِلاَّ رَوْحُكَ وَسُقْمِى لاَ يَشْفِيهِ اِلاَّ طِبُّكَ وَغَمِّى لاَ يُزِيلُهُ اِلاَّ قُرْبُكَ وَجُرْحِى لاَ يُبْرِئُهُ اِلاَّ صَفْحُكَ وَرَيْنُ قَلْبِى لاَ يَجْلُوهُ اِلاَّ عَفْوُكَ وَوَسْوَاسُ صَدْرِى لاَ يُزِيحُهُ اِلاَّ اَمْرُكَ ، فَيَا مُنْتَهَى اَمَلِ الْآمِلِينَ وَيَاغَايَةَ سُؤْلِ السَّآئِلِينَ وَيَا اَقْصَى طِلْبَةِ الطَّالِبِينَ وَيَا اَعْلَى رَغْبَةِ الرَّاغِبِينَ وَيَاوَلِيَّ الصَّالِحِينَ وَيَا اَمَانَ الْخآئِفِينَ وَيَا

مُجيبَ دَعْوَةِ الْمُظْطَرِّينَ وَيَا ذُخْرَ الْمُعْدِمِينَ وَيَا كَنْزَ الْبآئِسِينَ وَيَا غِيَاثَ الْمُسْتَغِيْثِينَ وَيَاقَاضِىَ حَوَائِجَ الْفُقَرَآءِ وَالْمَسَاكِينِ وَيَا اَكْرَمَ الْاَكْرَمِينَ وَيَا اَرْحَمَ الرَّاحِمِينَ لَكَ تَخَضُّعِى وَسُؤَالِى وَاِلَيْكَ تَضَرُّعِى وَابْتِهَالِى اَسْئَلُكَ اَنْ تُنِيْلَنى مِنْ رَوْحِ رِضْوَانِكَ وَتُدِيمَ عَلَيَّ نِعَمَ امْتِنَانِكَ وَهَا اَنَا بِبَابِ كَرَمِكَ وَاقِفٌ وَلِنَفَحَاتِ بِرِّكَ مُتَعَرِّضٌ وَبِحَبْلِكَ الشَّدِيدِ مُعْتَصِمٌ وَبِعُرْوَتِكَ الْوُثْقَى مُتَمَسِّكٌ ، اِلَهِى ارْحَمْ عَبْدَكَ الذَّلِيلَ ذَا اللِّسَانِ الْكَلِيلِ وَالْعَمَلِ الْقَلِيلِ وَامْنُنْ عَلَيْهِ بِطَوْلِكَ الْجَزِيلِ وَاكْنُـفْهُ تَحْتَ ظِلِّكَ الظَّلِيلِ يَا كَرِيمُ يَاجَمِيلُ يَااَرْحَمَ الرَّاحِمِينَ .

முனாஜாத் 11

## இறைவனிடத்தில் தேவையுடையோரின் முனாஜாத்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. இறைவா, என்னுடைய இழப்பை உன்னுடைய இரக்கமும் பரிவும் மாத்திரமே ஈடு செய்ய முடியும். என் வறுமையை உன்னுடைய கொடையும் கனிவுமே போக்க முடியும். என்னுடைய அச்சத்தை உன்னுடைய காவலால் மட்டுமே நீக்க முடியும். என் இழி நிலையை உன்னுடைய அதிகாரத்தின் மூலமாக மட்டுமே கண்ணியப்படுத்த முடியும். என ஆசைகளை உன்னுடைய கொடையால் மட்டுமே அடையச் செய்ய முடியும். என் குறைகளை உன் மகிமையால் தான் அடைக்க முடியும். என் தேவைகளை உன்னைத் தவிர யாராலும் அடைக்க முடியாது. என் கஷ்டங்களை உன் கிருபையால் மட்டுமே அகற்ற முடியும். என் துன்பங்களை உன்னுடைய கனிவால் மட்டுமே துரத்தி விட முடியும். என் இதயத்து நெருப்பை உனது தொடர்பால் மட்டுமே குளிரடையச் செய்ய முடியும். என் தாகத்தை உன்னைச் சந்திப்பதால் மட்டுமே தீர்க்க முடியும். உன் மீதுள்ள காதல் உன் திருமுகத்தைக் காணும் வரை தணியாது. எனது தடுமாற்றம் உன்னை நெருங்கும் வரை அமைதி பெறாது. எனது துரதிஷ்டத்தையும் குழப்ப நிலையையும் உன்னுடைய பாசத்தின் தென்றலின் இதம் தான் ஆற்றி விட முடியும். என்னுடைய நோயை உன்னுடைய மருந்துதான் குணப்படுத்த முடியும். என்னுடைய ஆற்றாமையை உனது நெருக்கத்தால் மட்டுமே நீக்கி விட முடியும். எனது காயத்தை உனது தாராளத்தால் மட்டுமே சுகப்படுத்த முடியும். என் இதயக் குமுறலை உன் மன்னிப்பால் மட்டுமே சாந்தப்படுத்த முடியும். என் மனதில் நிறைந்த ஊசலாட்டங்களை உன்னுடைய கட்டளையால மட்டுமே நிவர்த்தி செய்ய முடியும். 2. நம்பிக்கையாளர்களின் இறுதி நம்பிக்கையே, யாசிப்போரின் இலட்சியமே, வேண்டுவோர் வேண்டுவதற்குள்ள ஒரே இடமே, ஆசை கொண்டோரின் மிக உயர்ந்த நம்பிக்கையே, நல்லடியார்களின் நேசனே, அச்சமடைந்தவர்களுக்கு அபயம் அளிப்பவனே, கஷ்டத்தில் அகப்பட்டு அழைக்கின்றவர்களுக்கு விடையளிப்பவனே, எல்லாவற்றையும் இழந்தவர்களுக்காக சேமித்து வைத்துள்ளவனே, எளியவர்களின் புதையலே, உதவி கேட்பவருக்கு உதவியளிப்பவனே, ஏழைகளினதும் எளியவர்களினதும் தேவைகளை நிறைவேற்றிக்

கொடுப்பவனே, கொடையாளர்களில் எல்லாம் சிறந்த கொடையாளனே, கருணையாளர்களில் சிறந்த கருணையாளனே, உனக்கே பணிந்தேன். உன்னிடமே கோருகின்றேன். உன்னிடமே மன்றாடுகின்றனே. உன்னிடமே இரைஞ்சுகின்றேன். உன்னுடைய திருப்தியின் இன்பம் என்னையும் வந்தடையக் கோருகிறேன். உன் பெருந்தன்மையின் கொடைகள் நித்தமும் எனக்குக் கிடைக்கக் கோருகிறேன். இதோ நான் உன்னுடைய பெருங்கொடையின் வாசலில் வந்து நிற்கிறேன். உன்னுடைய கனிவின் தெனலைக் காத்திருக்கிறேன். உன்னுடைய கயிற்றை இறுக்கமாகப் பற்றியிருக்கிறேன். வலுவான கைப்பிடியை விடாமல் பிடித்திருக்கிறேன். 3. இறைவா, இந்தக் கேவலப்பட்டுப் போன உன் அடியானுக்கு அருள் செய். அவனது வார்த்தைகள் ஊமையாகி விட்டன. செயல்களோ குறைந்து விட்டன. உன்னுடைய முடிவிலாக் கொடையால் அவனுக்கும் வழங்கு. உன்னுடைய பிரமாண்டமான நிழலின கீழ் அவனுக்கும் அடைக்கலம் கொடு. கொடையாளனே, அழகானவனே, கருணையாளர்களில் கருணையாளனே.

## اَلْمُنَاجَاتُ الثَّانِيَةُ عَشَرَ مُنَاجَاتُ الْعَارِفِينَ

### بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

اِلَهِى قَصُرَتِ الْاَلْسُنُ عَنْ بُلُوغِ ثَنآئِكَ كَمَا يَلِيقُ بِجَلاَلِكَ وَعَجَزَتِ الْعُقُولُ عَنْ اِدْرَاكِ كُنْهِ جَمَالِكَ وَانْحَسَرَتِ الْاَبْصَارُ دُونَ النَّظْرِ اِلَى سُبُحَاتِ وَجْهِكَ وَلَمْ تَجْعَلْ لِلْخَلْقِ طَرِيقًا اِلَى مَعْرِفَتِكَ اِلاَّ بِالْعَجْزِ عَنْ مَعْرِفَتِكَ ، اِلَهِى فَاجْعَلْنَا مِنَ الَّذِينَ تَرَسَّخَتْ اَشْجَارُ الشَّوْقِ اِلَيْكَ فِى حَدَائِقِ صُدُورِهِمْ وَاَخَذَتْ لَوْعَةُ مَحَبَّتِكَ بِمَجَامِعِ قُلُوبِهِمْ اِلَى اَوكَارِ الْاَفْكَارِ يَأوُونَ وَفِى رِيَاضِ الْقُرْبِ

وَالْمُكَاشَفَةِ يَرْتَعُونَ وَمِنْ حِيَاضِ الْمَحَبَّةِ بِكَأْسِ الْمُلاَطَفَةِ يَكْرَعُونَ وَشَرَايِعَ الْمُصَافَاتِ يَرِدُونَ قَدْ كُشِفَ الْغِطَاءُ عَنْ اَبْصَارِهِمْ وَانْجَلَتْ ظُلْمَةُ الرَّيْبِ عَنْ عَقَآئِدِهِمْ وَضَمَائِرِهِمْ وَانْـتَـفَتْ مُخَالَجَةُ الشَّكِّ عَنْ قُلُوبِهِمْ وَسَرَائِرِهِمْ وَانْشَرَحَتْ بِتَحْقِيقِ الْمَعْرِفَةِ صُدُورُهُمْ وَعَلَتْ لِسَبْقِ السَّعَادَةِ فِى الزَّهَادَةِ هِمَمُهُمْ وَعَذُبَ فِى مَعِينِ الْمُعَامَلَةِ شِرْبُهُمْ وَطَابَ فِى مَجْلِسِ الْاُنْسِ سِرُّهُمْ وَاَمِنَ فِى مَوْطِنِ الْمَخَافَةِ سِرْبُهُمْ وَاطْمَأَنَّتْ بِالرُّجُوعِ اِلَى رَبِّ الْأَرْبَابِ اَنْفُسُهُمْ وَتَيَقَّنَتْ بِالْفَوْزِ وَالْفَلاَحِ اَرْوَاحُهُمْ وَقَرَّتْ بِالنَّظْرِ اِلَى مَحْبُوبِهِمْ اَعْيُنُهُمْ وَاسْتَقَرَّ بِإِدْرَاكِ السُّؤْلِ وَنَيْلِ الْمَأْمُوْلِ قَرَارُهُمْ وَرَبِحَتْ فِى بَيْعِ الدُّنْيَا بِالآخِرَةِ تِجَارَتُهُمْ ، اِلَهِى مَاالَذَّ خَوَاطِرَ الْإِلْهَامِ بِذِكْرِكَ عَلَى الْقُلُوبِ وَمَا اَحْلَى الْمَسِيرَ اِلَيْكَ بِالْأَوْهَامِ فِى مَسَالِكِ الْغُيُوبِ وَمَا اَطْيَبَ طَعْمَ حُبِّكَ وَمَا اَعْذَبَ شِرْبَ قُرْبِكَ فَأَعِذْنَا مِنْ طَرْدِكَ وَاِبْعَادِكَ وَاجْعَلْنَا مِنْ اَخَصِّ عَارِفِيكَ وَاَصْلَحِ عِبَادِكَ وَاَصْدَقِ طَآئِعِيكَ وَاَخْلَصِ عُبَّادِكَ يَا عَظِيمُ يَاجَلِيلُ يَا كَرِيمُ يَا مُنِيلُ بِرَحْمَتِكَ يَااَرْحَمَ الرَّاحِمِينَ .

முனாஜாத் 12

## **மெய்ஞானிகளின் முனாஜாத்**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. இறைவா, உன் மகத்துவத்துக்குப் பொருத்தமான விதத்தில் உன்னைப் புகழுகின்ற அளவுக்கு ஆற்றல் பெறாமல் நாவு பின்னடைந்து விட்டது. உன்னுடைய ஜமாலின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது என் அறிவு திக்குமுகாடுகிறது. உன் திருமுகத்தின் பரிசுத்தத்தை அடைந்து கொள்ள முடியாது பார்வைகள் பலமிழந்து போயின. உன்னை அறிந்து கொள்ள முடியாது என்பதையே படைப்புகளுகு உன்னையறியும் வழியாக ஆக்கினாய்.
2. இறைவா, தம் நெஞ்சத்து நந்தவனங்களில் இறைகாதலின் மரங்களை நட்டு வேரிட்டு கிளைவிட்டுப் பரவ விட்டவர்களோடு நம்மைச் சேர்ப்பாயாக. உன் மீதான அன்பின் உணர்வுகளால் தமது உள்ளங்களை அவர்கள் முழுமையாக நிரப்பிக் கொண்டார்கள். சிந்தனைக் கூடுகளில் அவர்கள் தஞ்சம் அடைபவர்கள். உம் நெருக்கத்தினதும் ஆன்மீக வெளிப்பாட்டினதும் பசுந்தரையில் மேய்கிறார்கள். காதலின் தாடங்களில் கனிவின் கோப்பைகளில் அருந்துகிறார்கள். தூய்மையினதும் வாய்மையினதும் ஆறுகளில் நீராடுகிறார்கள். அவர்களின் பார்வையை மறைத்திருக்கும் திரைகள் நீக்கப்பட்டுள்ளன. அவர்களது நம்பிக்கைகளில் இருந்தும் உள்ளங்களில் இருந்தும் சந்தேகத்தின் இருள் நீங்கி விட்டது. அவர்களது இதயங்களிலும் அந்தரங்கங்களிலும் கலந்திருந்த ஐயங்கள் தெளிவாகி விட்டன. மெய்ஞானத்தைத் தேடிச் சென்ற அவர்களின் இதயங்கள் விசாலித்து விட்டன. பற்றற்ற வாழ்க்கை மூலம் மகிழ்ச்சைய அடைந்து கொள்வதற்கான அவர்களது முயற்சி பன்மடங்காகி விட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான அவர்களது பானத்தின் சுவை இன்பமயமாகியது. சகவாசத்தின் சபைகளில் அவர்களது இரகசியங்கள் சிறப்படைந்தன. அச்சம் கொள்ள வேண்டிய இடங்களில் எல்லாம் அவர்கள் நிர்ப்பயமாகி விட்டார்கள். இரட்சகனிடம் திரும்பிச் சென்றடைவோம் என்பதில் அவர்களது ஆத்மாக்கள் நிம்மதியடைந்துள்ளன. அவர்களது ஆன்மாக்கள் தமக்கு வெற்றி கிடைப்பது பற்றி உறுதி கொண்டுள்ளன. தாம் காதல் கொண்டுள்ளவனை நேரில் தரிசிக்க

முடியும் என்று அவர்களின் கண்கள் பளிச்சிடுகின்றன. தாம் கேட்டது கிடைத்ததாலும் ஆசைப்பட்டதை அடைந்ததாலும் அவர்கள் அமைதி பெற்றுள்ளனர். துன்யாவைக் கொடுத்து மறுமையை வாங்கிய அவர்களது வியாபாரம் இலாபத்தில் முடிவடைந்தது. 3. இறைவா, உன் நினைவு நம் இதயத்தில் தோன்றி நிரப்புகின்ற போதுள்ள இன்பமே பெரியது. மறைவான விடயங்களின் பாதையில் உன்னைப் பற்றிய சிந்தனைகள் எவ்வளவு இனிமையானவை. உன் மீதான காதல் எவ்வளவு இனிமையானது. உன்னுடைய நெருக்கம் என்ற அமிர்தம் எவ்வளவு சுவையானது., என்னைத் துரத்தி விடுவதில் இருந்தும் தூரமாக்கி விடுவதில் இருந்தும் உன்னிடம் காவல் தேடுகின்றேன். உனது சிறப்பான ஆரிபீன்களில் ஒருவராகவும் உனது சிறந்த அடியார்களில் ஒருவராகவும் உன்னைத் தூய்மையாகவே பணிபவர்களில் ஒருவராகவும் உளத்தூய்மையோடு உன்னை வணங்குவோர்களில் ஒருவராகவும் என்னை ஏற்றுக் கொள்வாயாக. யாஅழீம், யாஜலீல், யாமுனீர், பிரஹ்மதிக யாஅர்ஹமர் ராஹிமீன்.

## اَلْمُنَاجَاتُ الثَّالِثَةُ عَشَرَ مُنَاجَاتُ الذَّاكِرِينَ

### بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

اِلَهِى لَوْلاَ الْوَاجِبُ مِنْ قَبُولِ اَمْرِكَ لَنَزَّهْتُكَ مِنْ ذِكْرِى اِيَّاكَ عَلَى اَنَّ ذِكْرِى لَكَ بِقَدْرِى لاَبِقَدْرِكَ وَمَاعَسَى اَنْ يَبْلُغَ مِقْدَارِى حَتَّى اَجْعَلَ مَحَلاً لِتَقْدِيسِكَ وَمِنْ اَعْظَمِ النِّعَمِ عَلَيْنَا جَرَيَانُ ذِكْرِكَ عَلَى اَلْسِنَتِنَا وَاِذْنِكَ لَنَا بِدُعَائِكَ وَتَنْزِيْهِكَ وَتَسْبِيْحِكَ ، اِلَهِى فَاَلْهِمْنَا ذِكْرَكَ فِى الْخَلاَءِ وَالْمَلآءِ وَاللَّيْلِ وَالنَّهَارِ وَالْإِعْلاَنِ وَالْإِسْرَارِ وَفِى السَّرَّآءِ وَالضَّرَّآءِ وَآنِسْنَا بِالذِّكْرِ الْخَفِيِّ وَاسْتَعْمِلْنَا بِالْعَمَلِ الزَّكِيِّ

وَالسَّعِى الْمَرْضِيِّ وَجَازِنَا بِالْمِيزَانِ الْوَفِيِّ ، اِلَهِى بِكَ هَامَتِ الْقُلُوبُ الْوَالِهَةُ وَعَلَى مَعْرِفَتِكَ جُمِعَتِ الْعُقُولُ الْمُتَبَايِنَةُ فَلاَ تَطْمَئِنُّ الْقُلُوبُ اِلاَّ بِذِكْرَاكَ وَلاَ تَسْكُنُ النُّفُوسُ اِلاَّ عِنْدَ رُؤْيَاكَ اَنْتَ الْمُسَبَّحُ فِى كُلِّ مَكَانٍ وَالْمَعْبُودِ فِى كُلِّ زَمَانٍ وَالْمَوْجُودُ فِى كُلِّ اَوَانٍ وَالْمَدْعُوُّ بِكُلِّ لِسَانٍ وَالْمُعَظَّمُ فِى كُلِّ جِنَانٍ وَاَسْتَغْفِرُكَ مِنْ كُلِّ لَذَّةٍ بِغَيْرِ ذِكْرِكَ وَمِنْ كُلِّ رَاحَةٍ بِغَيْرِ اُنْسِكَ وَمِنْ كُلِّ سُرُورٍ بِغَيْرِ قُرْبِكَ وَمِنْ كُلِّ شُغْلٍ بِغَيْرِ طَاعَتِكَ ، اِلَهِى اَنْتَ قُلْتَ وَقَوْلُكَ الْحَقُّ يَااَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوا اللهَ ذِكْرًا كَثِيرًا وَسَبِّحُوهُ بُكْرَةً وَاَصِيلاً وَقُلْتَ وَقَوْلُكَ الْحَقُّ فَاذْكُرُونِى اَذْكُرْكُمْ فَأَمَرْتَنَا بِذِكْرِكَ وَوَعَدْتَنَا عَلَيْهِ اَنْ تَذْكُرَنَا تَشْرِيفًا لَنَا وَتَفْخِيمًا وَاِعْظَامًا وَهَا نَحْنُ ذَاكِرُوكَ كَمَا اَمَرْتَنَا فَاَنْجِزْلَنَا مَا وَعَدْتَنَا يَا ذَاكِرَ الذَّاكِرِينَ وَيَا اَرْحَمَ الرَّاحِمِينَ .

முனாஜாத் 13

## இறைநாமத்தை ஜெபிப்பவர்களின் முனாஜாத்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. இறைவா, உன்னைத் துதிக்குமாறு நீ கட்டளையிடவில்லையென்றால், முடிந்த அளவில் உனைத் தியானித்திருப்பேன். ஆனால் நான உன்னை என்னுடைய சக்திக்கு உட்பட்ட அளவில்தான் தியானிக்கலாம். உன்னுடைய மகத்துவத்துக்குப் பொருந்தும் விதத்தில் அல்ல. உன்னுடைய பரிசுத்தத்தின் அந்தஸ்தை அடைந்து கொள்ள என் சக்தி எவ்வளவு வளர்ந்தாலும் போதாது. நீ நமக்குத் ந்த பெரிய நிஃமத்துத்தான் உன் நினைவை ஜெபிக்கும் பாக்கியத்தை நம் நாவுகளுக்குக் கொடுத்தது. உன்னை அழைக்கவும் தூய்மைப்படுத்தி ஜெபிக்கவும் தந்த அனுமதியும் அத்தகையதுதான். 2. இறைவா, உன்னுடைய ஞாபகத்தை நமக்கு தனிமையிலும், சபையிலும் இரவிலும் பகலிலும் இரகசியத்திலும் பரகசியத்திலும் இன்பத்திலும் துன்பத்திலும் தோன்ற வைப்பாயாக. தனிமையிலும் இரகசியமாகவும் உன்னைத் தியானிப்பதை நமக்குப் பழக்கப்படுத்து. தூய்மையான செயல்களிலும் உன் திருப்தியைத் தரும் முயற்சிகளிலும் ஈடுபடுத்து. நீதியான தராசின் மூலம் நமக்குக் கூலி வழங்கு. 3. இறைவா, குழம்பிய மனங்கள் உன்னிடமே வருகன்றன. தெளிவான சிந்தனைகள் உன்னை அறிந்து கொள்வதில் ஒன்றுபடுகின்றன. உன் நினைவால் அன்றி இதயங்கள் அமைதியடைவதில்லை. உன்னைக் கண்ட பிறகன்றி ஆத்மாக்கள் அமைதி பெறுவதில்லை. எல்லாக் காலங்களிலும் நீ துதிக்கப்படுகின்றாய். எல்லாக் காலங்களிலும் நீ வணங்கப்படுகின்றாய். எல்லாக் காலங்களிலும் நீ இருக்கின்றாய். எல்லா நாவுகளும் உன்னையே அழைக்கின்றன. எல்லா நெஞ்சங்களிலும் மேலான இடத்தைப் பெற்றுள்ளாய். உன்னை ஜெபிப்பதால் கிடைக்கும் இன்பத்தைத் தவிர்ந்த இன்பங்களில் இருந்து காவல் தேடுகின்றேன். உன்னோடுள்ள சகவாசத்தைத் தவிர்ந்த எல்லா சுகங்களில் இருந்தும் உன் நெருக்கத்தைத் தவிர்ந்த எல்லா மகிழ்ச்சிகளில் இருந்தும் உன்னைப் பணிவதைத் தவிர்ந்த எல்லா ஈடுபாடுகளில் இருந்தும் பாதுகாக்கக் கோருகின்றேன். 4. இறைவா, நீ கூறினாய். உனது வார்த்தை உண்மையானது: 'விசுவாசிகளே, அல்லாஹ்வை அதிகமதிகம் திக்ரு செய்யுங்கள். இரவும் பகலும் அவனைத்

துதியுங்கள்' மீண்டும் சொன்னாய்: 'என்னை நினைவு கூர்வீராக. நான் உங்களை நினைவுகூர்கிறேன்' உன்னைத் தியானிக்க நம்மை ஏவினாய். அதற்குப் பகரமாக நம்மையும் நினைவுகூர்வதாக வாக்களித்தாய். இது நம்மை கண்ணியப்படுத்தும் வகையில் நீ சொன்னதாகும். இதோ நீ கட்டளையிட்டவாறு உன்னை ஜெபிக்கிறோம். நீ நமக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்று. திக்ரு செய்யப்படுபவர்களில் மிகச் சிறந்தவனே. யா அர்ஹமர் ராஹிமீன்.

## اَلْمُنَاجَاتُ الرَّابِعَةُ عَشَرَ مُنَاجَاتُ الْمُعْتَصِمِينَ

### بِسْمِ اللّٰهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

اَللَّهُمَّ يَا مَلاَذَ اَللاّٰئِذِينَ وَيَا مَعَاذَ اَلْعَائِذِينَ وَيَا مُنْجِيَ الْهَالِكِينَ وَيَا عَاصِمَ الْبَآئِسِينَ وَيَا رَاحِمَ الْمَسَاكِينَ وَيَا مُجِيبَ الْمُضْطَرِّينَ وَيَا كَنْزَ الْمُفْتَقِرِينَ وَيَا جَابِرَ الْمُنْكَسِرِينَ وَيَا مَأْوَى الْمُنْقَطِعِينَ وَيَا نَاصِرَ الْمُسْتَضْعَفِينَ وَيَا مُجِيرَ الْخَآئِفِينَ وَيَا مُغِيثَ الْمَكْرُوبِينَ وَيَا حِصْنَ اللاّٰجِينَ اِنْ لَمْ اَعُذْ بِعِزَّتِكَ فَبِمَنْ اَعُوذُ وَاِنْ لَمْ اَلُذْ بِقُدْرَتِكَ فَبِمَنْ اَلُوذُ وَقَدْ اَلْجَأَتْنِى الذُّنُوبُ اِلَى التَّشَبُّثِ بِاَذْيَالِ عَفْوِكَ وَاَحْوَجَتْنِى الْخَطَايَا اِلَى اسْتِفْتَاحِ اَبْوَابِ صَفْحِكَ وَدَعَتْنِى الْاِسَآءَةُ اِلَى الْاِنَاخَةِ بِفِنَآءِ عِزِّكَ وَحَمَلَتْنِى الْمَخَافَةُ مِنْ نِقْمَتِكَ عَلَى التَّمَسُّكِ بِعُرْوَةِ عَطْفِكَ وَمَا حَقُّ مَنِ اعْتَصَمَ بِحَبْلِكَ اَنْ يُخْذَلَ وَلاَ

يَلِيقُ بِمَنِ اسْتَجَارَ بِعِزِّكَ اَنْ يُسْلَمَ اَوْ يُهْمَلُ ، اِلَهِى فَلاَ تُخْلِنَا مِنْ حِمَايَتِكَ وَلاَ تُعْرِنَا مِنْ رِعَايَتِكَ وَذُرْنَا عَنْ مَوَارِدِ الْهَلَكَةِ فَاِنَّا بِعَيْنِكَ وَفِى كَنَفِكَ وَلَكَ اَسْئَلُكَ بِاَهْلِ خَاصَّتِكَ مِنْ مَلآئِكَتِكَ وَالصَّالِحِينَ مِنْ بَرِيَّتِكَ اَنْ تَجْعَلَ عَلَيْنَا وَاقِيَةً تُنْجِينَا مِنَ الْهَلَكَاتِ وَتُجَنِّبُنَا مِنَ اْلآنَاثِ وَتُكِنُّنَا مِنْ دَوَاهِى الْمُصِيبَاتِ وَاَنْ تُنْزِلَ عَلَيْنَا مِنْ سَكِينَتِكَ وَاَنْ تُغَشِّيَ وُجُوهَنَا بِاَنْوَارِ مَحَبَّتِكَ وَاَنْ تُؤْوِيْنَا اِلَى شَدِيْدِ رُكْنِكَ وَاَنْ تَحْوِينَا فِى اَكْنَافِ عِصْمَتِكَ بِرَأْفَتِكَ وَرَحْمَتِكَ يَااَرْحَمَ الرَّاحِمِينَ .

முனாஜாத் 14

# பாதுகாப்புக் கோருவோரின் முனாஜாத்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. இறைவா, நிராதரவானவரின் அபயமே, காவல் தேடுவோரின் தஞ்சமே, அழிந்து போகின்றவரின் மீட்பாளனே. கதியிழந்தவர்களைக் காப்பவனே, ஏழைகளுக்கு இரங்குபவனே. துன்பத்தில் உழல்வோருக்குத் துணை வருபவனே, வறுமைப்பட்டோரின் செல்வமே, உடைந்த உள்ளங்களை ஒன்றுபடுத்துபவனே, அகதியானோரின் சரணாலயமே, ஒடுக்கப்பட்டோருக்கு உதவுபவனே, பயந்தவர்களைக் காப்பனவே, அல்லல் படுவோருக்கு அபயம் அளிப்பவனே, தஞ்சம் கோருவோரின் காவலிடமே, கண்ணியமான உன்னிடம் காவல் தேடாது போனால் யாரிடம் காவல் தேடுவது. உன்னிடம் அபயம் கோராவிட்டால் யாரிடம் கோருவது,. என் பாவங்கள் காரணமாக உன் மன்னிப்பைத் தேடி அலைகிறேன். என் குற்றங்கள் காரணமாக உன்னுடைய மன்னிப்பின் வாசலைத் தட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். என்னுடைய மோசத்தின் விளைவாக உன் கண்ணியத்தின் வாசலில் வந்து இறங்கியுள்ளேன். உன்னுடைய தண்டனை வரும் என்ற அச்சம் காரணமாக உன்னுடைய கனிவின் பிடியை இறுக்கமாகப் பற்றினேன். உன்னுடைய கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டவர் தாழ்மையடைவது என்ன நியாயம்? உன்னுடைய கண்ணியத்தின் மகிமையால் ஈடேற்றம் கோரியவர் கைவிடப்படவோ மறக்கடிக்கப்படவோ பொருத்தாகுமா? 3. இறைவா, நம்மைப் பாதுகாப்பதை கைவிட்டு விடாதே. உன்னுடைய பராமரிப்பில் இருந்து எம்மைக களைந்து விடாதே. அழிவு வரும் சந்தர்ப்பங்களில் இருந்து நம்மைப் பாதுகாப்பாயாக. நாம் நிச்சயமாக உன்னுடைய கண்காணிப்பின் கீழ் உனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு உனக்காகவே வாழ்கிறோம். உன்னுடைய மலக்குகளில் சிறப்பானவர்களின் பொருட்டாலும் உன் படைப்புகளில் மிக நல்லவர்களின் பொருட்டாலும் உன்னிடம் கோருகின்றேன். நாசங்களில் இருந்து நம்மை மீட்டெடுக்கின்ற, ஆபத்துகளில் இருந்து நம்மைக் கரைசேர்க்கின்ற, பெரும் முசீபத்துகளில் இருந்து நம்மைப் பாதுகாக்கின்ற ஒரு கவசத்தை நமக்குத் தருவாயாக. உன்னுடைய ஸகீனத் எனும் அமைதியை நம் மீது இறக்கி வைக்குமாறும், உன்னுடைய காதலின் ஜோதியால் நமது முகங்களை வசீகரமாய்

போர்த்தி விடுமாறும் உன்னுடைய பலமான கோட்டையில் நமக்கு அபயம் கொடுக்குமாறும் உன்னுடைய அச்சம் தராத அரவணைப்பில் நம்மை இணைத்துக் கொள்ளுமாறும் உன்னுடைய கிருபையையும் கனிவையும் கொண்டு வேண்டுகிறோம். யாஅர்ஹமர் ராஹிமீன்.

## اَلْمُنَاجَاتُ الْخَامِسَةُ عَشَرَ مُنَاجَاتُ الزَّاهِدِينَ

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

اِلَهِى اَسْكَنْتَنَا دَارًا حَفَرَتْ لَنَا حُفَرَ مَكْرِهَا وَعَلَّقْتَنَا بِاَيْدِى الْمُنَايَا فِى حَبَائِلِ غَدْرِهَا فَاِلَيْكَ نَلْتَجِى مِنْ مَكَائِدِ خُدَعِهَا وَبِكَ نَعْتَصِمُ مِنَ الْاِغْتِرَارِ بِزَخَارِفِ زِيْنَتِهَا فَاِنَّهَا الْمُهْلِكَةُ طُلَّابَهَا الْمُتْلِفَةُ حُلَّالَهَا الْمَحْشُوَّةُ بِالْآفَاتِ الْمَشْحُونَةُ بِالنَّكَبَاتِ ، اِلَهِى فَزَهِّدْنَا فِيهَا وَسَلِّمْنَا مِنْهَا بِتَوْفِيقِكَ وَعِصْمَتِكَ وَانْزَعْ عَنَّا جَلَابِيْبَ مُخَالَفَتِكَ وَتَوَلَّ اُمُورَنَا بِحُسْنِ كِفَايَتِكَ وَاَوْفِرْ مَزِيدَنَا مِنْ سَعَةِ رَحْمَتِكَ وَاَجْمِلْ صِلَاتِنَا مِنْ فَيْضِ مَوَاهِبِكَ وَاغْرِسْ فِى اَفْئِدَتِنَا اَشْجَارَ مَحَبَّتِكَ وَاتْمِمْ لَنَا اَنْوَارَ مَعْرِفَتِكَ وَاَذِقْنَا حَلَاوَةَ عَفْوِكَ وَلَذَّةَ مَغْفِرَتِكَ وَاَقْرِرْ اَعْيُنَنَا يَوْمَ لِقَائِكَ بِرُؤْيَتِكَ وَاَخْرِجْ حُبَّ الدُّنْيَا مِنْ قُلُوبِنَا كَمَا فَعَلْتَ بِالصَّالِحِينَ مِنْ صَفْوَتِكَ وَالْاَبْرَارِ مِنْ خَاصَّتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِينَ وَيَا اَكْرَمَ الْاَكْرَمِينَ .

முனாஜாத் 15

## பற்றறுத்தவர்களின் முனாஜாத்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

1. இறைவா, நீ இந்த உலகில் நம்மை வாழ வைத்தாய். அது நம்மைச் சிக்க வைக்க சதிவலை விரித்துள்ளது. நமது ஆசைகளின் கைகளை அதன் ஏமாற்றுக் கயிறுகளில் பிணைத்து விட்டது. அதன் வஞ்சகத்தில் இருந்து விடுதலை கோரி உன்னிடம் தஞ்சம் புகுந்தோம். அதன் அழகிய அலங்காரங்களில் மயங்கி விடாமல் உன்னிடம் காவல் தேடுகின்றேன். ஏனெனில், அதனை நாடியவரை அது அழித்து விடுகிறது. அதில் குடியிருக்க விரும்புவோரை நிர்மூலமாக்கி விடுகிறது. அது துன்பங்களையும் இன்னல்களையும் கஷ்டங்களையும் நிறையக் கொண்டது. 2. இறைவா, அந்த துன்யாவின் மீதான நமது பற்றை அறுத்து விடு. உன் கருணையாலும் காவலாலும் அதன் தொடர்பைத் துண்டித்து விடு. நம்முடைய விவகாரங்களை உனது நற்பேறுகளின் அடிப்படையில் பொறுப்பெடு. உனது றஹ்மத்தின் விசாலத்தால் நமக்கு அதிகமாக்கிக் கொடு. உன்னுடைய கொடையின் சிறப்பால் நமக்கு நற்கூலியை ஏற்பாடு செய். நமது உள்ளங்களில் உன் நேசத்தின் விதைகளை நட்டி விடு. உன்னை அறிந்து கொள்ளும் ஞானத்தின் ஜோதியை எம் மீது பூரணமாக்கு. உன்னுடைய மன்னிப்பின் இனிமையை நாமும் சுவைக்கச் செய்வாயாக. உன்னை நாம் சந்திக்கின்ற நாளில் உன்னைக் காணும் பாக்கியத்தை நமக்கு அருளுவாயாக. கருணையாளர்களில் பெரும் கருணையாளனே, கொடையாளர்களில் மிகத் தாராளமானவனே, உன்னுடைய கருணையால் நீ தேர்ந்தெடுத்த நல்லடியார்களுக்கும் உன்னிடம் சிறப்பிடம் வகிக்கும் நல்லோர்க்கும் நீ செய்தது போன்று, நமது உள்ளங்களில் இருந்து துன்யாவின் மீதான பற்றைக் களைந்து விடு.